
அமுதசுரபி



ஜூன் 95 விலை ரூ : 6/- காரைக்கால் இலக்கியச் சிறப்பிதழ்


அமுதசுரபி

ஜூன் - 95 | எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி | மலர் : 48

யுவ - ஆனி | என்றென்றும் வாழியவே - பாரதியார் | இதழ் : 2











5 அன்பர் அனுபவம் -II
- கர்மயோகி

8 உம்பரும் எம் படைப்பே
- குலோத்துங்கன்

9 என் இலக்கிய வாழ்க்கை
- சிலம்புச் செல்வர்
ம.பொ.சி.

13 அவ்வை தமிழ்
- டாக்டர்
தி. முத்து கண்ணப்பர்

16 சத்யமே சாயி
(அட்டைப்பட விளக்கம்)
- ஸ்ரீவேணுகோபாலன்

19 நம்முடன் காரைக்கால்
- நாகராஜகுமார்

29 ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ்

30 பாரதா பிஸ்கெட் பாக்டரி

32 64 ஆண்டுகள் புகழ் பெற்ற சோடா

33 பின் யோசனை
இரா. பகவானந்ததாசன்

38 புதியதோர் வழியமைப்போம்
-விழுதியூர் ராஜேந்திரன்

38 உனது முகம்
- க. இராமச்சந்திரன்

39 வெல்லுமா?
- காரை
எஸ். அரங்கநாயகி ராவ்

40 காரைக்கால் பிரமுகர்கள்

42 சோகம்
- காரை கலைபாசி

44 இலக்கியத் தம்பதியின் இலங்கைப் பயணம்

45 எப்போது வருவான்?
- காரை ஆடலரசன்

48 தவிப்பு
-இ. ஜே. தீன்

50 வினா-விடை அரங்கம்
- பதில்கள்:
பி.ஆர். ராமசுப்பிரமணியராஜா

53 சொப்பன நிலா
- ஸ்ரீவேணுகோபாலன்

62 அபிராமி அந்தாதி
-தேவகி முத்தையா

65 வைவா

67 வரிச் சோதனை - I
-எஸ். இராஜரத்தினம்

71 உங்கள் ராசி பலன்
-வித்வான்
வே. லட்சுமணன்

76 மனம் விட்டுப் பேசுவோம்

79 செய்திகள்

81 கங்காபுரிக் காவலன்
- விக்கிரமன்

பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா, கௌரவ இலக்கிய ஆலோசகர் : என். வி. சுப்பிரமணியம், ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன், இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார், அட்டையில் : சத்ய சாயி பாபா ஆண்டு சந்தா: ரூ. 72/- ஆயுள் சந்தா: ரூ. 1000/- தனி இதழ் விலை: ரூ. 6/-

காரைக்கால் இலக்கியச் சிறப்பிதழ்

தயாரிப்பு : இரா. பகவானந்ததாசன்



'கர்மயோகி'

அன்பர் அனுபவம் II

"நான் தங்களுடைய 'அமுதசுரபி'யில் அன்னையைப் பற்றிய கட்டுரைகளை ஆர்வத்துடன் படித்து அவர்களிடம் பக்தி கொண்டவன். தங்களுக்கு டிசம்பரில் என் குடும்ப நிலவரங்களைப் பற்றி ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தீர்கள். "அன்னையிடம் பூரண பக்தி கொண்டு குறைகளைச் சொல்லி பூரண பக்தியுடன் உறுதியாயிருந்து வந்தால் பயன் உண்டாகும்" என்று எழுதியிருந்தீர்கள்.

அதன்படி நானும் அன்னையைப் பிரார்த்தனை செய்து வருகிறேன். என்னுடைய கடிதத்தில் என் பெரிய பையனுக்கு ஒரு வேலை கிடைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை எழுதியிருந்தேன். அன்னையின் அருளால் அவனுக்கு ஆச்சரியமாய் All India Competitive Testஇல் தேறி Bangalore Indian Institute-இல் B.E. (Computer Science)இல் Admission கிடைத்து, போன வாரம் சேர்ந்திருக்கிறான்".

✪ ✪ ✪ ✪

"அன்னையிடம் நான் வேண்டிக் கொண்டதில் எனக்கு நல்ல பலன் கிடைத்தது. தாம்பரத்திற்கு அருகில் பள்ளி மாற்றம் கேட்டிருந்தேன். அதைவிட வசதியான இடம் கிடைத்திருக்கிறது. லஞ்சம் கொடுத்து வாங்கியதாக ஒரு சிலர் பேசிக் கொள்கிறார்கள். அன்னையின் அருளால் மிகவும் வசதியாக சிரமமில்லாமல் கிடைத்துள்ளது. மிக்க மகிழ்ச்சியான செய்தி.

✤ ✤ ✤ ✤

"வணக்கம். தங்களின் கட்டுரைகளை 'அமுதசுரபி' மூலம் படித்து வருகிறேன். "கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவர் அன்னை" என்பதை என் மூலம் அன்னை நிரூபித்திருக்கிறார். வாழ்க்கையில் விரக்தியுற்ற நான் சாவுக்குத் துணிந்த பின் 'அமுதசுரபி' மூலம் தங்களின் கட்டுரைகளைப் படித்து, ஆசிரியர் திரு. விக்கிரமன் அவர்களுடன் தொடர்பு கொண்டேன். அவர்கள் தங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கூறினார். தங்களிடம் தொடர்பு கொண்டு அன்னையின் அருள் பெற்றேன். சாகத்துணிந்த நான் இன்று வாழ ஆசைப் படுகிறேன். என் பொறுப்பிலிருக்கும் கம்பனிக்கு 5.25 லட்சம் ரூபாய் கடனுதவி அரசு மூலம் அன்னையின் கருணையால் கிடைத்தது. என்னை வெறுத்த பலர் இன்று நெருங்க ஆசைப்படுகிறார்கள்".

✪ ✪ ✪ ✪

"நான் முதல் கடிதம் எழுதிய பொழுது 'என்னிடம் எந்தப் பொருளும் இல்லை என்றும், நகைகள் இல்லை' என்றும் எழுதியிருந்தேன். அன்னையின் சக்தியால் இன்று ஆச்சரியப்படும் வகையில் நான் ground வாங்கி விட்டேன்".

✤ ✤ ✤ ✤

"25 வருடங்களாக நாங்கள் 'அமுதசுரபி' வாசகர்கள். தங்கள் அன்னை பற்றிய கட்டுரைகளைப் படித்து வருகிறோம். சுமார் 4 மாதங்களுக்கு முன்பு நான் தங்களுக்குக் கடிதம் எழுதினேன். என் இரண்டாவது மகன் epilepsy என்னும் நோயால் மிகவும் துன்புற்று பள்ளிக்கூடம் செல்ல முடியாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். தங்களது அறிவுரைப் படி அன்னை மீது நம்பிக்கை வைத்து அவனே பிரார்த்தனை செய்ததன் பேரில் அன்னையின் அருளால் அவன் பூரண குணம் பெற்று பள்ளி சென்று வருகிறான் என்பதை மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

✪ ✪ ✪ ✪

"நீங்கள் பிப்ரவரியில் கடிதம் எழுதியபடி அன்னையைத் தினமும் பிரார்த்தித்து வந்தோம். அன்னை அருளால் என் கணவருக்கு, தடைப்பட்டிருந்த பிரமோஷன் கிடைத்து விட்டது. அன்னையின் எல்லையில்லா அருளை எண்ணி மனம் இன்பம் கொண்டது."

✤ ✤ ✤ ✤

"அன்னையின் அருளால் எனது இரண்டாவது குமாரனுக்கு Bank ஆபீஸ் உத்தியோக வேலை உயர்ந்து உள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

கீழ்க்காணும் கடிதம் ஆங்கிலத்தில் வந்தது. மொழிபெயர்ப்பை எழுதுகிறேன். மொழிபெயர்ப்பால் எழுதியவரின் உணர்ச்சி மாறுபடுமானால், நேரடியாக வெளியிட விரும்புவேன்.

"நான் "அன்னையின் தரிசனம்" பெற்றுப் படித்தேன். சென்ற கடிதத்தில் என் தாயாருக்கு உடல் நலம் குன்றி சில சோதனைகள் செய்து ரிஸல்ட் எதிர்பார்ப்பதாக எழுதினேன். ரிஸல்ட்டைப் பார்க்கும் முன் டாக்டர் கான்சர் என சந்தேகப்படுவதாகவும், அது உண்மையானால் என் தாயார் 3 மாதம் உயிரோடிருப்பார்கள் என்றும் சொன்னார். என் மனம் உடைந்தது. பேரதிர்ச்சியுற்றேன்.

அதன்பின் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தேன். 'நீங்கள் என் தாயாரைக் காப்பாற்ற வேண்டும்' என்பது என் பிரார்த்தனை. 'தாயாருக்குக் கேன்சர் இருக்கக்கூடாது. நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். எனக்கு அருள் பாலியுங்கள்', என்று பிரார்த்தித்தேன்.

என்ன ஆச்சரியம்! அன்னை என்னைக் காப்பாற்றினார்கள். ரிஸல்ட்டைப் பார்த்த டாக்டர், "கான்சர் அறிகுறியில்லை. எந்தப் பிரச்சினையும் இல்லை" என்றார். என் மனம் சொல்லொணாத சந்தோஷத்தால் நிரம்பியது".

✤ ✤ ✤ ✤

"வணக்கம். ஸ்ரீ அன்னையின் அருளாலும், ஆசிரியராலும், பிரச்னைகள் ஓரளவு தீர்ந்து 'இவ்வளவு விரைவில் அன்னை பக்தர்களின் கஷ்டங்களுக்கும், பிரச்னைகட்கும் தீர்வு கொடுக்கிறாரே! நம் விஷயத்திலும் அப்படி நடக்க வேண்டும்' என்று ஒரு விம்பிலும், நம்பிக்கையிலும், விடா முயற்சியாக அன்னை யைத் தினமும் பிரார்த்தனை செய்து வந்தேன். மிகவும் ஆச்சரியமாக உள்ளது. மிக விரைவில் ஆபீஸ் சிக்கல்கள் தீர்ந்து விட்டன. தானாகவே வீடு தேடி ஒரு வரன் வந்தது. நான் அன்னையின் பொறுப்பில் விட்டு விட்டேன். பெண் பார்க்க வந்தவர்கள் அன்றைக்கே கல்யாணத்தைப் பற்றிப் பேசினார்கள். "சீர் வரிசை எல்லாம் நீங்கள் செய்தது போதும்" என்றனர். நாங்கள் முன்னால் 5000 ரூபாய் தருகிறோம் என்றார்கள். பிறகு தந்து விடுங்கள் என்றார்கள். பையன் வீட்டிற்கு ஒரே பிள்ளை. அருகில் உள்ள அம்மா பேட்டையில் தான் இருக்கிறார்கள். ஆனால் வேலை நிரந்தரம் இல்லை".

✪ ✪ ✪ ✪

"இதற்கு முன்பு அன்னைக்கு சிறு காணிக்கை அனுப்பி, எனக்கு ஏற்பட்டிருந்த நோய் குணமாகும்படி வேண்டியிருந்தேன். அதன்படி தங்கள் ஆசிரமத்திலிருந்து அனுப்பியிருந்த மலர்ப்பிரசாதத்தினையும், அன்னையின் திருவுருவப்படத்தையும், பூஜை அறையில் வைத்துப் பிரார்த்தனை செய்து வருகிறேன். இப்பொழுது நோய் முற்றிலும் குணமாகி விட்டது.

✤ ✤ ✤ ✤

"அன்னையின் அருளால் என் வாழ்விலும் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

✪ ✪ ✪ ✪

"அன்னையே! தங்களுக்கு மூன்று மாதத்திற்கு முன் எனது டிரான்ஸ்பர் விஷயம் குறித்து விரைவில் டிரான்ஸ்பர் வேண்டி எழுதியிருந்தேன். தங்கள் சந்நிதிக்கும் பிப்ரவரி 17ஆம் தேதி வந்திருந்தேன். என் கணவர் குழந்தைகளுடன் எங்கள் மனப்பூர்வமான வேண்டுகோளைத் தாங்கள் நிறைவேற்றியுள்ளீர்கள் என்பதை நான் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற பல மாதங்களாக 5 வருஷங்களுக்கு முன்னர் request transfer எதையும் consider செய்யமாட்டேன் என்ற Zonal Manager, நான் தங்கள் சமாதியைத் தரிசித்துச் சென்றவுடன் office note போடும்படியும் அதையும் அவர் approve செய்கிறேன் என்றும் சொன்னார். பின்னர் அதன்படி approve செய்து விட்டார். அதனால் எனக்கு இப்பொழுது Bangaloreக்கு டிரான்ஸ்பர் ஆகிவிட்டது".

✤ ✤ ✤ ✤

"நான் சில நாள்களுக்கு முன் அன்னையிடம் 'ஒரு நல்ல வேலை எனக்கு வழங்க வேண்டும்' என்று வேண்டினேன். அதன்படி எனக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்தது. நான் முன்பு அன்னைக்கு எழுதி வேண்டியபடி எனது அண்ணனுக்கு எந்தத் தடங்கலுமின்றி ஒரு குழந்தை பிறந்தது. எனது தங்கைக்கும் அரசு உத்தியோகமும் கிடைத்தது".

✪ ✪ ✪ ✪

கங்காதரன் என்ற சாதகர் ஆசிரமத்தில் 61 வருஷமிருந்து இரண்டாண்டிற்குமுன் தன் 80ஆம் வயதில் காலமானார். இவர் புதுவையைச் சேர்ந்தவர். நான் இவரைப் பார்த்திருக்கின்றேன். பேசிப்பழக்கமில்லை. அவருக்கு என்னை அடையாளம் தெரியாது.

பெயர் மட்டும் தெரியும். அவர் 1987இல் எழுதிய கடிதத்தின் பகுதிகளைத் தருகிறேன்.

“தங்களால் இயற்றப்பட்ட ‘அன்னை தரிசனம்’ என்ற அரிய நூலைச் சமீபத்தில் படித்தேன். ‘அமுதசுரபி’யில் வெளிவந்து கொண்டிருந்தபொழுதே சில கட்டுரைகளைப் படித்திருக்கிறேன். அன்னையின மெய்யடி யார்கள் ஒவ்வொருவரும் படித்துப் பின்பற்றிப் பயனடைய வேண்டிய நூல். என்னுடைய 55 ஆண்டு ஆசிரம வாழ்க்கையில் அன்னை யாருடைய அரும் புகழை விளக்கும் இவ்வளவு சிறந்த நூலைப் படித்ததில்லை என்றால் மிகையாகாது.

‘எல்லாம் தரும் அன்னை’ என்ற அரிய நூலை, தொடக்கம் முதல் கடைசி வரை படித்துப் பிரமிப்பு அடைந்தேன். பக்கத்திற்குப் பக்கம், வரிக்கு வரி அன்னையின் அரும்புகழ் பாடும் அமர காவியமாகத் திகழ்கின்றது. கடந்த 55 ஆண்டு ஆசிரம வாழ்க்கையில் அரவிந்தர், அன்னை பற்றிய எவ்வளவோ நூல்களைப் படித்திருக்கின்றேன். ஆனால், அரவிந்தர், அன்னை, அரவிந்தாசிரமம், அரவிந்தரின் பூரண யோகம், பரிபூரண ஆத்ம சமர்ப்பணம், அரவிந்தரின் யோக லட்சியம் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் எழுதியதைப் போன்று இவ்வளவு தெளிவாகவும், விவரமாகவுமில்லை என்றால் மிகையாகாது.

“இவ்வுலகில் அரவிந்தரின் நவதத்துவ தரிசன போதமும், அரவிந்தரின் பூரண யோக மார்க்கத்தில் ஆர்வமுள்ள மெய்யன்பர்கள் உள்ளவரை 1. அன்னை தரிசனம், 2. எல்லாம் தரும் அன்னை இவ்விரண்டு அரிய நூல்களும் நின்று நிலைத்து அரவிந்த பக்தர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.”

“அன்னையிடம் நல்லதொரு வேலை கிடைத்திட வேண்டும் என்று பிரார்த்தனை செய்திருந்தேன். அதன்படியே ஹைதராபாத்தில் வேலை கிடைத்து 16.2.87இல் வேலையிலும் சேர்ந்தேன். நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தாங்கள் எழுதியபடியே கடைப்பிடித்ததால் தான் இத்துணை விரைவில் வேலை கிடைத்தது என்று நம்புகிறேன்.

“என் கணவர் 58 வயதில் ரிடையர் ஆக வேண்டியவர் 6 மாத முன்பே ரிடையர் ஆகிவிட்டார். ஆனால் 8 மாதத்தில் மறுபடி முன்னணிக் கம்பெனி ஒன்றிலிருந்து ரிடையரானவரே வேண்டும் என்று கூப்பிட்டு, நல்ல சம்பளத்துடன் வேலை கிடைத்தது. அன்னையிடம் மட்டுமே எங்கள் குறைகளை முறையிட்டிருந்தேன்.”

உம்பரும் எம் படைப்பே

குலோத்துங்கன்



வலியிலாப் பகையை வென்று
மகுடம் யாம்சூட மாட்டோம்
சலுகையால் உயர்வு காணும்
தடத்தினைத் தேட மாட்டோம்

வயிற்றினில் ஊர்வ தாயின்
வானகம் பெறினும் வேண்டோம்
பயிற்சியில், பிறப்பில் ஞானப்
பறவை யாம் புழுக்கள் அல்லோம்

“நீதியின் வழியில் நிற்றல்”
நெருப்பினில் குளிப்ப தன்ன
சோதனை: தர்ம வாழ்வு
துணிவிலர்க் கியல்வ தன்று.

மானுடர்க் குயர்ந்த தென்ன
மற்றொரு பிறவி யில்லை
ஊனுடல் அமர ராகும்
உலகையாம் காண வேண்டும்.

தொன்றுதொட் டின்று மட்டும்
தொல்லுல கனைத்தும் கண்ட
வென்றிகள் யாவும் மாந்தர்
வினைகளின் விளைவே யன்றோ?

உள்ளம்இன் றறிதற் கெட்டா
உயர்வினைத் தேடு கின்றோம்.
தெள்ளிய அறிவும் எங்கள்
சிந்தையின் வரம்பும் தாண்டி

மலரும்ஓர் உலகம் இந்த
வையகத் துண்டு. தேவர்
உலகம் என்றெதுவு மில்லை
உம்பரும் எம்ப டைப்பே.

'என் இலக்கிய வாழ்க்கை'

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

6

என்னுடைய இலக்கிய வாழ்க்கை அறிவாற்றலில் என்னை வளர்த்துவிட்டது. இலக்கிய வாழ்வு வாழவேண்டும் என்று ஆசைப் படுவதால் நான் ஏமாற்றப்படு கிறேன்; நானேயும் ஏமாந்து போகிறேன். எத்தனையோ விஷ யங்களில் நான் ஏமாற்றப்பட் டேன்; ஏமாந்தும் போனேன்.

ஆனால், ஒழுக்க வாழ்க்கை யிலே கிடைக்கின்ற மகிழ்ச்சியும் மனநிறைவும் எனக்கு இருக் கின்றன. துன்பங்கள் எவ்வளவு வந்தாலும் அதை எண்ணி மனத்தை நான் திடமாக்கிக் கொள்கிறேன்.

அதே மாதிரி மற்றவரைப் பற்றிக் குறை சொல்வது எனக்குப் பிடிக்காது. 'இவன் இப்படி; அவன் அப்படி', என்று வம்பு பேச எனக்கு வராது.

அப்படிச் சொல்லவரும் நேரத் தில் குறள் சட்டென்று நினைவிற்கு வரும்; பேச்சை நிறுத்திக் கொள் வேன். வள்ளுவர் –

'ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்'

என்கிறார்.

என்னுடைய வாழ்க்கை முழு வதையும் இலக்கிய வாழ்வாகவே நடத்திக்கொண்டு வர முயல் கிறேன். அப்படி அமைவது அவ் வளவு சுலபமில்லை. அதுவும் குடித்தனத்தில் இருந்துகொண்டு – குடித்தனத்தை நடத்திக்கொண்டு –கெட்டுப்போன அரசியல் மத்தி யில்.

இப்பொழுது நாட்டு நடப்பு சரியில்லை. பத்திரிகையை எடுத் தால் பக்கம் பக்கமாக கொலை யும் கொள்ளையும் கற்பழிப்பும்...

காரணம் என்ன? ஆட்சி அமைப்பு முறை சரியில்லை. ராஜாஜி ஆட்சியிலே – இப்போது நூற்றாண்டு விழா கொண்டாடி னார்களே, அந்த நிறை மனிதர் மாணிக்கவேலரை மந்திரியாகப் போட்டார்கள்; ராமசாமி படை யாச்சியை மந்திரியாகப் போட் டார்கள்; டாக்டர் சுப்பராயனை மந்திரியாகப் போட்டார்கள். திறமைசாலிகளை – ஒழுக்கசீலர் களைத் தேடிப்பிடித்து மந்திரி யாக்கினார் ராஜாஜி.

அவர்களுக்கெல்லாம் உள்ளூர் தலைமைப் பொறுப்பு இருந்தது. தலை வராக ஒருவர்தான் இருக் கணும். மந்திரிகளுக்கென உள்ளூர் செல்வாக்கு இருக்கணும். அவர் சொன்னால் ஊர் மக்கள் கேட்பது போல் இருக்கணும். அவர் மந்திரி யாக இல்லாமலும் தனி மனித ராகவும் அவர் சொன்னால் மக்கள் கேட்க வேண்டும். ராஜாஜி போய் – காமராஜர் வந்தார். ஓர் அற்புதம் பண்ணினார். வேறு யாருக்கும் அந்தத் தைரியம் வராது.



ராஜாஜியைச் சுற்றி இருந்த வர்கள் – காமராஜருக்கு எதிரியாக வேலை செய்தவர்கள் – கல்வியில் காமராஜரை விட மூத்தவர்கள் – வயதிலும் காமராஜரைவிட மூத்த வர்களைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். ராஜாஜியைத் தவிர மற்ற மந்திரிகளை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தினார். அந்த தைரியம் யாருக்கு வரும்? மக்க ளிடம் காமராஜருக்கு இருந்த செல் வாக்கு; கட்சித் தொண்டர்களுக்குக் காமராஜர் மேல் இருந்த பக்திதான் இதற்குக் காரணம்.

நாட்டிலே ஏன் ஒழுக்கம் பறி போகிறது? இன்னும் சரிந்து கொண்டே போனால் என்ன ஆகும் நாடு? அப்போது ஒரு சாண் இடத் திலே அரசர்கள் சண்டைபோட்டு சடுகுடு ஆடினார்கள். அதனால் தான் நாடு அந்நியரிடம் போனது. இப்போது கட்சிகள். இவற்றாலும் நாட்டிற்குக் கேடுதான்.

ஒரு முறை நாடு சிதைந்து போய் விட்டால் திருப்பி அதை மீட்பதோ, சேர்ப்பதோ கஷ்டம். அடிமைத்தனம் நீங்க இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று.

ஒருமுறை – ஒரு தலைமுறை தவறு செய்தால் நாட்டை மீட்கப் பல தலைமுறை பாடுபட வேண்டி யிருக்கும். அதை வைத்துத்தான் 'ஏழு தலைமுறை எழுச்சி' என்று எழுதினேன். அதைத் தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பினார்கள். தேர்தல் சமயத்தில் ஒளிபரப்பப் பட்டதால் அந்தத் தொடர், பல ருக்குத் தெரியாமலே போய் விட்டது.

தமிழ்ச் சாதியினுடைய இசை யானது தமிழோடு இணைந்து இழையோடியிருக்கிறது. குழந் தையைத் தொட்டிலிலிட்டுப் பாடும் தாலாட்டுப் பாடலிலிருந்து கடைசிப் பயணத்தின் போது– மரணமடைந்த பின் – பாடும் ஒப்பாரிப் பாடல் வரை வாழ்க்கை முழுவதும் இசை மயமாகவே இருந்து வருகிறது.

'இரவில் அழுதிடும் பெண்கூட இசையோடு அழுவது கண்கூடு' என்கிறார் நாமக்கல் வெ. இராம லிங்கம் பிள்ளை. தமிழ் இலக்கியத்

தொகுப்பிலே 'பிள்ளைப் பிரபந்தம்' என ஒன்று இருந்து வருகிறது. தமிழில் பிரபந்த வகை தொண்ணூற்றாறு என்பர் புலவர் பெருமக்கள். அவற்றுள் ஒன்று, பிள்ளைப் பிரபந்தம்.

குழந்தையைத் தொட்டிலிலிட்டுப் பாடுவது தொடங்கி, வளர்ந்த குழந்தை சிறு தேர் உருட்டி விளையாடும் வரை இசைப்பாடல் மயம்தான். பருவத்திற்கொரு பாடல்! பருவத்துக்குப் பருவம் பாடலின் நயமும் நாதமும் மாறிக் கொண்டே போகும்.

திருமாலின் அவதாரமான கண்ணபெருமானைக் குழந்தைப் பருவத்திலிருந்து, கன்னியரை மோகிக்கும் காளைப்பருவம் வரை தனிப் பிரபந்தம் என்று சொல்லும் வகையில் எண்ணற்ற பாடல்கள் படைத்துள்ளார் பாரதியார். அவருடைய கண்ணன் பாட்டு என்னும் தலைப்பிலுள்ள பாடல்கள் மட்டுமே ஒரு தனிப் பிரபந்தம் என்று சொல்லத்தக்க வகையில் அமைந்துள்ளன.

விடுதலைப்போரில் ஈடுபட்ட தேச பக்தன் என்ற முறையில் அவருடைய தேசியப் பாடல்கள் பாடுந்தோறும் எனக்கு இனித்தாலும், கண்ணன் பாடல்கள் தொகுப்பு இன்னொரு புலவரிடம் அனுபவிக்க முடியாத இலக்கிய இன்பமாகும். அப்பாடல்கள் முற்றிலும் பழகு தமிழில் அமைந்திருத்தலால், ஆழ்வார்கள் பாடியுள்ள பிரபந்தப் பாடல்களைவிடவும் எழுத்தறிவில்லாதவரும் கேட்டு இன்புறுவதற்கு ஏற்ப அமைந்துள்ளன. பாடலுக்குப் பாடல் இராகமும் தாளமும் மாறி வருவதால் இசை வல்லுநர்களும் கண்ணன் பாட்டை இதயத்தில் வைத்துப் போற்றுகின்றனர்.

பாரதியார் பாடியுள்ள இப்பாடல்கள் தொல்காப்பியர் கூறும் கலிவிலையையும் தன்வகத்தே கொண்டுள்ளது.

பிள்ளைப் பிரபந்தத்திலே முற்காலக் கவிஞர்கள் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தூங்க வைக்க முயலும் தாலாட்டுப் பாட்டைத்தான் முதலில் வைத்துள்ளனர். 'தாலப் பருவம்' என்னும் தலைப்பிலே!

ஆனால், பாரதியாருடைய கண்ணன் பாடல்களிலே தாலாட்டுப் பாடல் இல்லை. நாட்டை அந்நியனிடம் விட்டு விட்டு மக்களெல்லாம் உறக்கத்திலிருந்த காலத்திலே தோன்றிய கவிஞர் ஆதலால், அவருக்குத் தாலப் பருவப் பாடல் புனைய மனமில்லை போலும்! ஆனால் பள்ளியெழுச்சி பாடியுள்ளார். உறக்கத்திலிருக்கும் மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில். மேலும் உறங்க வைக்கத் தாலாட்டுப் பாடல் பாடவில்லை.

தாலாட்டுப் பாடல் கேட்பதிலே எனக்கு மிகுந்த விருப்பமுண்டு. என் அன்னையார் தாலாட்டுப் பாடுவதிலும், ஒப்பாரி பாடுவதிலும் வல்லவர். பிள்ளைப்பருவத்திலே அன்னையார் என்னைத் தொட்டிலில் தவழவிட்டு, தாலாட்டுப் பாடியிருக்கமாட்டார். மாற்றுப் புடைவையை ஏணையாகக் கட்டித்தான் தாலாட்டுப் பாடி. என்னைத் தூங்க வைத்திருப்பார்.

என் தாய்க்கு நான் மூன்றாவது குழந்தை. எனக்குமுன் பிறந்த இரண்டு பெண்களும் குழந்தைப் பருவத்திலேயே காலமாகி விட்டனர். அதனால், எனக்குப் பின் பிறந்தவர்களை என் அன்னை வளர்த்த முறையை நான் பார்த்திருக்கிறேன். அதனால்தான், ஏணையில் கிடத்தி என்னை வளர்த்தார் என்று சொல்லுகிறேன்.

புலமை மிக்க கவிஞர்கள் பாடியுள்ள பிள்ளைப் பிரபந்தங்கள் எல்லாம் உயர்ந்த நடையிலானவையாகும். ஆனால், தமிழ் நாட்டிலே தாய்மார்கள் தாலாட்டுப் பாடல் தொடங்கி ஒப்பாரிப் பாடல் வரை பழகு தமிழிலேதான் பாடுவது வழக்கம். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்கூட தாலாட்டுப் பாடலையும் ஒப்பாரிப் பாடலையும் பொருள் உணர்ந்து ரசிக்க முடியும். என் அன்னையார் தாலாட்டுப் பாடலையும், ஒப்பாரிப் பாடலையும் தானே புனையும் சக்தி பெற்றிருந்தார். ஓரளவு சங்கீத ஞானமும் உண்டு. அது அவருக்குப் பிறவியிலேயே கிடைத்த பாக்கியம்.

என் அன்னையார் என் மரணத்திற்குப்பின் என்னைப் பற்றிப் பாடும் ஒப்பாரிப் பாடல்களைக் கேட்பதிலே எனக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது.

ஒரு சமயம் இந்த ஆர்வத்தை அன்னையாரிடமே வெளியிட்டு விட்டேன். 'நான் இறந்தால் நீங்கள் எனக்காக எப்படி ஒப்பாரி பாடி அழுவீர்கள் என்பதைக் கேட்டு அனுபவிக்க முடியாதே' என்றுசொன்னேன்.

அவருக்குச் சினம் ஏற்பட்டு, 'உன் புத்தி ஏன் இப்படிப் போய் விட்டது? தாய்க்குத் தலைப் பிள்ளையாகிய நீ இருந்தல்லவா எனக்குக் கொள்ளி வைக்க வேண்டும்? அதற்குத்தானடா உன்னைப் பெற்றேன்' என்று சொல்லி விட்டு விம்மி விம்மி அழுதார்.

—தொடரும்

டாக்டர் தி. முத்து கண்ணப்பர்

அவ்வை தமிழ்

அறிவுரையும் அறவுரையும்

கடுமையும் மென்மையும்

அவ்வையார், ஒருநாள் காட்டையடுத்த ஓர் ஊரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அந்தக் காட்டில் சில யானைகள் சஞ்சரிக்கின்றன என்பது அவருக்குத் தெரியும். அவை சில சமயம் அப்பக்கமாக வருமானால், காண்பவரைக் கொன்றுவிடும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால், அவர் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. வாழ்வையும் சாவையும் பொருட்படுத்தாதவர். எல்லாம் விதியின் படியே நடக்கும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். இவ்வுலகத்தில் ஒருவர் இவ்வளவு நாள்கள்தான் உயிரோடு வாழ வேண்டும் என்று விதியிருக்குமானால், அந்த நாளைக்குள் அவரை எவரும் அழிக்க முடியாது. அவ்வாறே, இந்த நாளில் ஒருவர் சாக வேண்டும் என்று விதியிருக்குமானால் எவரும் அவரை நீடித்து வாழுமாறு காப்பாற்ற முடியாது. எல்லாம் விதியின் திருவிளையாடல்; விதிவிட்ட வழியில்தான் உலகம் இயங்குகிறது.

"ஆவாரை யாரே அழிப்பார்?
அதுஅன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பார்?"

என்பது அவர் வாக்கு.

அவர் சென்று கொண்டே இருந்தபோது, ஒரு யானை பயங்கரமாகப் பிளிறிக்கொண்டு இரத்தம் சிந்தச் சிந்த ஓடியதையும், ஒரு வேடன் வில்லைக் கையிலே பற்றிக்கொண்டு, அந்த யானையைத் துரத்திக் கொண்டு ஓடியதையும், கண்டு திடுக்கிட்டார். அந்த வேடன் தன் கூரிய அம்பை அந்த யானையின் உடலில் எய்திருக்கிறான். அந்த அம்பு யானையின் முரட்டுத் தோலையும் துளைத்து, தன் உடலில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது! அந்தப் பயங்கரக் காட்சி அவரை ஒருகணம் கலங்க வைத்தது. அந்த வேடனின் கொடிய நெஞ்சத்தை எண்ணி 'இரக்கமே இல்லாத அரக்கன்' என அவர் முணுமுணுத்தார். பின்னர், 'அது அவன் குலத் தொழில்' என எண்ணி ஒருவாறு ஆறுதலடைந்தார்.

"இரும்புக் கவசம் போன்ற தடித்த யானைத் தோலையும் அல்லவா இந்த வேடனின் அம்பு கிழித்து ஊடுருவிச் சென்றுள்ளது. அதே அம்பை ஒரு பஞ்சுப் பொதி அல்லது மூட்டையில் எய்தால் அதனை இந்த அம்பு ஊடுருவித் துளைக்குமா? ஊஃஉம், 'பொசுக்'கென்று அப்பஞ்சு மூட்டையின் மேல் தொற்றிக் கொள்ளும்" என்று எண்ணிக் கொண்டு அவ்விடத்தினின்றும் அகன்றுவிட்டார்.

செல்லும் வழியில் குன்றுகளும், பாறைகளும் காணப்பட்டன. அந்தப் பாறைகளைச் சிலர் கனத்த இரும்புக் கடப்பாரைகளால் பிளந்துகொண்டிருப்பதைக் கண்டார். வீடுகளையும், அடித்தளங்களையும், மதில்களையும் கட்டுவதற்காகப் பாறைகளைப் பிளக்கிறார்கள் என்பதை அவ்வையார் புரிந்துகொண்டார். பாறைகள் மிகவும் கடினமானவை; ஆதலால் அவற்றைப் பிளக்கும்போது கடப்பாரைகளின் முனை அடிக்கடி மழுங்கிவிடுவதையும், வளைந்து விடுவதையும், உடைந்து விடுவதையும், அவற்றை அவர்கள் உடனுக்குடன் கூர்மையாக்கிக் கொள்வதையும், வெவ்வேறு கடப்பாரைகளை மாற்றி மாற்றிப் பயன்படுத்துவதையும் கண்டார்.

நெடுந்தூரம் நடந்தமையால் சற்று இளைப்பாறிச் செல்ல, ஒரு குன்றின் அருகே அமர்ந்தார். அந்தக் குன்றின்மீது அவ்வையாரின் பார்வை பட்டது. சிறு சிறு மரங்களும், மெல்லிய செடிகொடிகளும் அக்குன்றின்மீது வளர்ந்திருந்தன.

"குன்றுகள்; கடினமான பாறையால் ஆனவை. இவற்றைப் பிளப்பதும், உடைப்பதும், துளைப்பதும் அவ்வளவு எளிதன்று! பாறையைப் பிளப்பதற்கு அங்கே, அந்த ஆள்கள் எவ்வளவு பாடுபடுகின்றனர்! எத்தனை கடப்பாரைகள் மழுங்கின; வளைந்தன; உடைந்தன!

என்ன ஆச்சரியம்! இந்த மரங்களும், செடிகொடிகளும் இவ்வளவு கடினமான குன்றை-பாறையை எப்படித் துளைத்து, ஊடுருவி வேரூன்றி முளைத்துப் பசுமையாக வளர்ந்துள்ளன! இரும்புக் கடப்பாரைகளால் பிளக்கமுடியாத, அவற்றுக்கு அசைந்து கொடுக்காத பாறை-மலை, இத் தாவரங்களின் மென்மையான, நுண்ணிய, சிறுசிறு வேர்கள் ஊடுருவித் துளைத்துப் பிளந்து உட்புகுவதற்கு நெகிழ்ந்து கொடுத்திருக்கின்றனவே! நம்ப முடியவில்லையே!" என்று மெல்லப் பேசிக்கொண்டே வியப்பில் ஆழ்ந்தார். அவர் சிந்தனை செயல்படத் தொடங்கியது.

"அங்கே, முரட்டுத் தோலையுடைய யானையின் உடலைத் துளைத்து உட்புகுந்த அம்பு, மெத்தென்ற பஞ்சுப் பொதியை ஊடுருவாது, அப்படியே அதன்மேல் நின்றுவிடும் என்பதை உணர்ந்தோம். இங்கே, கனமான இரும்புக் கடப்பாரையால் பிளக்க முடியாத கடினமான பாறை, இந்தத் தாவரங்களின் நுண்ணிய சிறுசிறு

வேர்களுக்கு நெகிழ்ந்து கொடுத்திருக்கிறது! ஆம், இவையும் ஓர் அரிய கருத்தை உணர்த்துகின்றன.

கடுகடுத்து, வெட்டெனப் பேசும் பேச்சு - கடுமையான சொல் - கடு சொல் எந்தப் பலனையும் தராது; காரியத்தையே கெடுத்துவிடும். ஆனால், மென்மையான, நயமான இனிய சொல்லால் - இதமான மொழியால் எதையும் எளிதில் சாதித்து விடலாம். இதைத்தான் நாம் உலக வாழ்வில் கண்டு வருகிறோமே" என்று மெல்லக் கூறித் தலையை அசைத்து, "ஆம், வெப்பமான சூரியனைக் கண்டு பொங்காத கடல், குளிர்ந்த நிலவைக் கண்டு, தன் அலைக்கரங்களைக் கொட்டிக் குதித்துக் கூத்தாடிப் பொங்கிப் பூரிப்படைகின்றதே! பிறர் கூறும் இனிய சொல் தமக்கு இன்பம் தருதலை அனுபவித்தவர், எவராவது வன்சொல்லைச் சொல்வாரா? அது எந்தப் பயனையும் தராதே.

'இன்சொல் இனிது ஈன்றல்
காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?'

என்று வள்ளுவரும் இந்தக் கருத்தைத்தானே கூறுகிறார். இதே கருத்தை 'வெட்டெனப் பேசேல்' என்று நான் ஒரே வரியில், ஆத்திசூடியில் கூறியிருக்கிறேனே!" என்று பெருமிதத்தோடு கூறிப் பாடுகிறார்:

"வெட்டேன் அவை மெத்தேன் அவை
வெல்லாவாம், வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது
- நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை
பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்"

(நல்வழி : 33)

(வெட்டேன் அவை - வெட்டெனப் பேசும் வன்சொற்கள். மெத்தென் அவை - மென்மையான இனிய சொற்கள். வெல்லாவாம் - பயன்தரமாட்டா. வேழம் - யானை. பட்டு உருவும் வேல் - (யானையின் உடலில்) பட்டுத் துளைத்து ஊடுருவும் அம்பு. நெட்டு இரும்புப்பாரை - நீண்ட இரும்பால் ஆன கடப்பாரை. நெக்குவிடா - பிளக்காத, உடையாத; நெக்குவிடும் - (நெகிழ்ந்து) பிளந்து கொடுக்கும்.)

அரசறிய வாழ்வாரின் அவலம்

வழக்கமான தம் வழிநடைப் பயணத்தின்போது, அவ்வையார், ஒரு நாள் ஓர் ஆற்றங்கரையின் அருகே வந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் அந்தப் பக்கம் சென்றபோது, அவ்வாற்றங்கரையில் ஒரு மரம், பூவு, காயும் கனியுங் குலுங்க, செழித்துக் கொழித்து வளமாக வளர்ந்திருந்ததைக் கண்டு மெய்ம்மறந்து மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்து, சிறிது நேரம் அக் குளிர் நிழலில் தங்கியிருந்து, பின்னர்ச் சென்றிருக்கிறார். அப்போது அந்த ஆற்றில் நீர் நிறைந்திருந்தது.

ஓரிரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து பருவமழை பெய்யாமையால், அந்த ஆற்றில் நீர் அறவே வற்றி, அவ்விடம் வரண்ட மணல் படுகையாய் இப்போது மாறி இருந்தது.

ஆற்றுநீரை நம்பி அதன் கரையில், அவ்வளவு நாள் அம்மரம் வளங் கொழிக்கச் செழித்து ஓங்கி வளர்ந்து விளங்கியது. நீர் வற்றி வரண்டு போனமையால் அதன் வளமும், அழகும் கண்கவர் தோற்றமும் சிதைந்து சீர் குலைந்து காய்ந்து சாய்ந்து கிடந்தது. அந்நிலையைக் கண்ட அவ்வையார் அப்படியே தம்பித்து நின்றுவிட்டார். சிறிது நேரத்தில் தெளிவடைந்த அவர் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது. மெல்லப் பேசிக் கொள்கிறார்.

"ஆஃஆ! அரசனையோ, (அரசியல் கட்சியையோ) முழுக்க முழுக்கச் சார்பு என நம்பி, செல்வமும் செல்வாக்கும், பெருமதிப்பும் பேரும் புகழும் பெற்று 'ஓகோ' என்று வாழ்கிறார்களே, சில மனிதர்கள்! அவர்களிடம் - கற்றவர்களும், அறிஞர்களும், அரசியல் ஆதாயமும் பிற சலுகைகளும் தேடுபவர்களும், நாள்தோறும் கூட்டம் கூட்டமாகச் சென்று அவர்கள் தரிசனத்துக்கு மணிக்கணக்கில் காத்துக்கிடக்கிறார்கள்! ஆம், அவர்கள் அரசு அறிய (ஆளும் அரசியல் கட்சி அறிய) ஏக போக வாழ்வு வாழ்கிறார்கள்! அவர்களுடைய தயவும் துணையும், ஆதரவும் அரசுக்கு (ஆளும் கட்சிக்கு) மிகமிக அவசியமானவை. அரசு ஆட்சி அவர்களது முக்கியத்தை உணருமாறு நடைபெறுகிறது. அவர்கள், அரசு (ஆளும் கட்சி) தங்கள் செல்வாக்கை அறியுமாறு வாழ்கிறார்கள்.

ஆனால், அரசனின் ஆட்சியோ (அரசியல் கட்சியின் ஆட்சியோ) நெடுநாள் நிலைத்து நிற்கக் கூடியது அல்லவே. குடை நிழலின் கீழிருந்து, பட்டத்து யானையின் மீது பவனி வரும் சக்கரவர்த்தியும் மறுநாள் பரதேசியாய் - வறியவனாய் மெலிவுற்று வாழும் நிலைக்கு வந்துவிடக் கூடுமே!

எனவே, இதோ ஆற்றங்கரையில், ஆற்று நீர் வளத்தை நம்பி, அதனைச் சார்ந்து வளம் பெருகச் செழித்தோங்கி வளர்ந்து பின்னர், ஆற்றின் நீர் வற்றிப் போனதும் அடிசாய்ந்து வீழ்ந்து கிடக்கும் இந்த மரத்தின் கதிதான், அரசை (ஆளும் அரசியல் கட்சியைச்) சார்ந்து, அதை நிலையானது என நம்பி, ஆணவத்தோடு வாழ்கின்ற அப்பாவி மக்களுக்கும் ஏற்படும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை" என்று பேசாமல் பேசிக் கொண்டு சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு, மீண்டும் "இத்தகையோர் வாழ்வும் ஒரு வாழ்வாகுமோ? ஆனால், நிலத்தை உழுது, பயிர் செய்து உலக மக்களுக்கெல்லாம் உணவளித்துக் காக்கும் அந்த உழவர் பெருமக்களின் வாழ்வுதான் உன்னதமான வாழ்வு; உயர்ந்த வாழ்வு!

அவர்கள் உழுது பயிரிடாவிட்டால் உயிர் ஏது? உலகு ஏது? மற்றப் பணிகளுக்கெல்லாம், ஆண்டான் அடிமை, முதலாளி தொழிலாளி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் வேறுபாடு உண்டு; ஆனால், தங்கள் நிலங்களைத் தாங்களே உழுது விளைத்து உதவி, ஒப்பற்ற தொண்டாற்றும் இந்த உழவர் பெருமக்கள் எவருக்கும் அடிமை அல்லர். தாங்களே அரசர்கள்; தாங்களே குடிமக்கள். அவர்களுக்கு எவருடைய தயவும் தாட்சண்யமும், எவர் முன்னரும் நின்று கைகட்டிக்



காத்துக் கிடக்கும் இழிநிலையும் இல்லை. இந்தக் கருத்தைத் தானே,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி"
என்றும்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"
என்றும்

"பல குடை நீழலும் தன்குடைக் கீழ் காண்பர்" என்றும், வாழ்வு நெறி வகுத்த வள்ளுவர் அழகாக, ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தைத் தானே, நான் எனது கொன்றை வேந்தன் என்னும் நூலில் 'சீரைத்தேடின் ஏரைத் தேடு' என்று ஒரே வரியில் சுருங்கக் கூறியிருக்கிறேன்!

இக் கருத்துப் பாட்டு வடிவில் இருந்தால் மக்கள் என்றும் மறக்க மாட்டார்களே. இதோ, என் பாட்டை மக்கள் நினைவில் நிறுத்திக் கொள்ளட்டும்.

"ஆற்றங் கரையின் மரமும்
அரசுஅறிய
வீற்றிருந்த வாழ்வும்
விழும்அன்றே - ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு
ஒப்புஇல்லை கண்டீர்
பழுதுஉண்டு வேறுஓர் பணிக்கு"...
(நல்வழி : 12)

என்று கூறி அங்கிருந்து சென்று விட்டார்.

(அரசு அறிய - அரசு (அல்லது) ஆளுங் கட்சி) அறிந்து முக்கியமாகக் கருதும் நிலையில் பெருமையாக வாழ்ந்திருந்த; ஏற்றம் - உயர்வு)

மேலட்டை விளக்கம்
நன்றி : சநாதன சாரதி

ஸத்யமே ஸாயி

-ஸ்ரீவேணுகோபாலன்

ஓர் இனிப்பை எங்கே ருசித்தால் என்ன? இனிப்பாகத்தான் இருக்கப் போகிறது!

மகான்களின் சரித்திரங்களும் அப்படித்தான்!

எங்கே தொட்டு ருசித்தாலும் இனிக்கும்!

சத்யசாயி பாபாவின் சரிதத்திற்கு மீண்டும் வருகிறேன்.

'இன்னும் இருக்கிறதே' எழுது!' என்ற அர்த்தத்தில் அவர் எனக்குக் கட்டளை இட்டது போல் ஒரு பிரமை!

எனவே, விட்டதைத் தொட்டு மீண்டும் எழுதுகிறேன்.

முன்னதைத் தொடர்ந்து படித்து விட்டுத்தான் தொடர வேண்டும் என்பதில்லை!

தொட்ட இடத்திலேயே ஊறும் சுவையான அவர் சரிதம்!

எங்கேயும் தொடலாம்! எந்த இடத்திலிருந்தும் பருகலாம்!

1970 -டிசம்பர்!

குடல் வால் நோயிலிருந்து சத்யசாயி விடுபட்டார்.

அது ஓர் அதிசயம்.

மாத்திரை, அறுவை என்று எதுவும் கிடையாது.

தானாகவே குடல் வால் மறைந்து விட்டது.

சோதித்த டாக்டர்களுக்கு இது அதிசயம்.

எங்கே மறைந்தது குடல் வால்?

"யாருடைய துன்பத்தையோ நான் ஏற்றுக் கொண்டேன்! அவரால் அந்தத் துன்பத்தை ஏற்றிருக்க முடியாது! இறந்திருப்பார்!"

என்று பாபா கூறியது எல்லாரையும் பிரமிக்க வைத்தது.

1971 - ஜனவரி 1.

பம்பாயில் இருந்தார் பாபா!

பிரபல கமானி தொழிற் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவரைக் குர்லாவில் வரவேற்றார்கள்.

அவர்கள் நிறுவனம் கட்டியுள்ள சமூகக் கூடத்தை பாபா திறந்து வைத்தார்.

கூடத்தில் தொழிலாளிகளும் அவர்கள் குடும்பத்தினரும் மொய்த்திருந்தார்கள்.

"ஆயிரக்கணக்கில் தொழிலாளிகள், இந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே கூடி இருக்கிறீர்கள். மனித சமூகத்திற்கு ஐந்து முக்கிய வாயுக்கள் தேவை!

வேளாண்மை, தொழில் வளம், வியாபாரம், அரசியல் நடக்கும் அரசாங்கத் துறை, இவை யாவும் ஆரோக்கியமாகவும் அமைதியாகவும் இருந்தால் தான், மனித இனம் நிம்மதியில் வாழும்; செழிப்பில் வாழும்.

ஐந்தில் ஒவ்வொன்றும் தங்களது பரஸ்பர உறவையும், பரஸ்பர சார்பையும் உணர்ந்து ஒன்றுக்கொன்று ஒரு நல் உணர்வுடன் சிநேகமாகவே ஒத்துழைத்தால் இந்த நாடு மட்டுமல்ல; உலகம் முழுதுமே ஒவ்வொரு தினத்தையும் ஒரு திருநாளாகக் கொண்டாட முடியும்!

ஆனால் தற்காலத்தில் இந்த சிநேக உணர்வு இல்லை! பரஸ்பர ஒத்துழைப்பும், பூஜ்யம்! ஒவ்வொரு துறையிலும் அமைதி இல்லை! பூசல்தான் இருக்கிறது! ஒவ்வொரு துறையும் குழப்பத்திற்குத் தங்களால் ஆன கைங்கரியங்களைச் செய்கிறது.

இதனால் தேசம் ஆழ்ந்த கவலையுள் போய்க் கொண்டிருக்கிறது.

மக்கள் பீதியோடு இயங்குகிறார்கள். உயிரைப் பொத்திக் கொண்டு நடக்கிறார்கள்.

இந்த நிலைமை சரியே அல்ல!" என்றார் பாபா.

பம்பாயில் மற்றொரு முக்கிய நிகழ்ச்சி!

அகில இந்திய பிரச்சார சபா வித்வான் மகா சபாவின் மராட்டிய கிளப்பில் ஒரு மகத்தான புத்தகம் வெளியீடு ஆயிற்று.

பாபா தான் அந்தப் புத்தகத்தை வெளியிட்டார்.

'இறைவனை நோக்கி வழி காட்டுங்கள்' என்ற பொருளைக் கொண்டது புத்தகம்.

பல பெரிய அறிஞர்களின் சந்தேகங்களுக்கு பாபா நேராக விடை அளித்திருந்தார். அவற்றைத் தொகுத்து வெளியிட்டு இருந்தார்கள்.

உண்மையில் ஒரு மகத்தான சந்தேக நிவாரணி அந்தப் புத்தகம்.

அறிவாளிகளுக்கே மனத்தில் தோன்றும் பல சந்தேகங்களுக்கு விடை அளிக்கிறது அது.

பிப்ரவரி 21-இல் மகா சிவராத்திரி வந்தது.

பாபா தமது பக்தர்களுக்காகவே அப்போது புட்டபர்த்தியில் வந்து தங்கினார்.

இரவில் பிரசாந்தி நிலையத்தில் பாபாவைத் தரிசிக்க ஏராளமான கூட்டம்.


பாபா தமது திருவாயிலிருந்து லிங்கங்களைக் கொண்டு வருவதை நேரில் பார்த்து அனுபவிக்க பக்தர்கள் கூடியிருந்தார்கள்.

குறிப்பிட்ட வேளை நெருங்கியது. பாபா பேசினார்.

"இந்தப் புனித தினத்தில் நான் ஏன் லிங்கங்களை வெளிக் கொணர்கிறேன்?" என்று கேட்டார், பாபா!


கூட்டம் நிசப்தமாக இருந்தது.






ஜூன் மாத அமுதசுரபி இதழுடன்

காரைக்கால் இலக்கியச் சிறப்பிதழ்






'அமுதசுரபி' இதழின் 'புதுச்சேரி இலக்கியச் சிறப்பிதழ்'கள் வெளியானபோது ஏகப்பட்ட பாராட்டுகள். ஓர் இதழில் புதுச்சேரி மாநில சுற்றுலாத் துறையினரின் 'கடல் சவாரி' பற்றி எழுதியிருந்தோம்.

புதுவை மாநில சுற்றுலா துறையின் இயக்குநர் திரு. வி. சிவசண்முகம் நம்மை அழைத்திருந்தார்.

'பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் அங்கமான காரைக்கால் நகரைப் பற்றியும் எழுதினால் புதுச்சேரி இலக்கியச் சிறப்பிதழ் ஒரு முழுமையான சிறப்பிதழாக அமையும்' என்ற கருத்தைத் தெரிவித்தார். அவருடைய பேச்சில் காரைக்காலின் மேன்மையும், காரைக்கால் நகரின் சிறப்புகளும் புரிந்தன. புதுச்சேரி சுற்றுலாத் துறை மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் உதவியுடன் காரைக்



பிரெஞ்சு போர் வீரர்களின் நினைவுச் சின்னம்



திரு. ரத்தன் சிங்

நம்முடன் காரைக்கால்



புதுவை மாநில சுற்றுலாத் துறையின் பராமரிப்பில் ஸீ கல் ரெஸ்டாரண்ட்



சுற்றுலாத் துறையினரின் கள்கபர் மாதிரி வடிவம், (கடற்கரை சாலை)



காரைக்கால்/குழந்தைகள் பூங்கா

காலுக்குப் பயணப்பட ஏற்பாடு செய்து தந்தார்.

புதுச்சேரியில் இருந்து காரைக்காலுக்குப் பயணப்பட்டோம். மொத்தம் 132 கி.மீ. தூரப் பயணம்.

23 ஆவது கி.மீ. தொலைவில் கடலூர். அங்கிருந்து 50 கி.மீ. தொலைவில் சிதம்பரம். ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் பிறந்த இடமாகச் சொல்லப்படும் புவனகிரியைக் கடந்து, யூனியன் பிரதேச எல்லைக்குள் புகுந்த பத்தாவது கிலோ மீட்டரில் காரைக்கால் வந்தது.



காவல்துறையினர் தொப்பி வடிவில் காவல் நிலையம்





காரைக்கால் மஸ்தான் பள்ளி

சனீஸ்வர பகவானின் தங்க வாகனமும்,
திருநள்ளாறு
ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயமும்







நெடுங்காடு சுயம்புநாத சுவாமி திருக்கோயில்

குறுகிய பாதைகளானாலும் நீண்ட நெடிய சாலை அமைப்பு. நெரிசல் இல்லாத போக்கு வரத்து. ஓஸோன் மணம் கமழும் கடற்காற்று.

பீச் ரோடு குறுக்கிட்டது. சாலை நோக்கிச் சீரான பாதையில் செல்லும்போது வலக் கைப்பக்கம் அரசலாறு படகுத் துறையும், இடக் கைப்பக்கம் அரசு அலுவலகங்களும் ஓடி மறைந்தன. மாலை நேரத்தை மிக நிம்மதியாகக் கழிக்கக் கூடிய இடமாக அப்பகுதியை மாற்றியிருந்தது சுற்றுலாத் துறை. சிறுவர் பூங்காவின் எழிலும், படகுத் துறையின் பாங்கும் ரம்மியமாகக் காட்சி யளித்தன.

முகத்துக்கு நேரே கடல் அலை மோதும் இடத்தின் இடப் புறத்தில் கம்பீரமாக நின்றது புதுச்சேரி சுற்றுலாத் துறையின் மேற்பார்வையில் நடத்தப்படும் ஸீகல்ஸ் ரெஸ்ட்டாரண்ட். தூய வெண்மை நிறத்தில் கலங்கரை விளக்கம், புதுச்சேரி மாநில காவல் துறையினர் அணியும் தொப்பி வடிவில் காவல் துணையகம், டீ கப் - ஸாஸருக்கு மேல் குடையுடன் கூடிய வடிவமைப்பில் அலங்காரச் சின்னம். சுற்றியுள்ள இடங் களின் பராமரிப்பில் ஒரு நேர்த்தி தெரிந்தது.

அங்கிருந்து புறப்பட்டு காரைக்கால் நகர மண்டல நிர்வாக அலுவலகத்திற்கு வருகிறோம். தேசியக் கொடி பறக்கும் கட்டடம். கட்டடத்தின் வாயிலுக்கு முன் காவல் துறைப் பணியாளர் சிலையுடன் நினைவுத்தூண். எதிரே குழந்தைகள் பூங்கா.

மண்டல நிர்வாக அதிகாரியின் நேர்முக உதவியாளர் திரு. ஆர். அன்பழகன் அவர்களின் ஒத்துழைப்புடன் மண்டல நிர்வாக அதிகாரி திரு. ரத்தன் சிங் அவர்களைச் சந்திக்கிறோம். காரைக் காலின் மேன்மைக்கு அவர் ஆற்றும் பணிகளைப் பாராட்டினோம்.



Church of Our Lady of Angels

சனிபகவான் காரைக்கால் பிரதேசத்தின் ஆறு கொம்யூன் களுள் ஒன்றான திருநள்ளாற் றில் இருந்து கொண்டு, உலக மக்க ளுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருந்தாலும், காரைக் காலைச் சுற்றியுள்ள பிற ஆலயங்கள் அநேகமுண்டு.

அப்படிப்பட்ட ஓர் ஆலயம் தான் திருமலைராயன் பட்டினத் தில் இருக்கும் அருள்மிகு ஆயிரங்காளியம்மன் ஆலயம்.

சோழ நாட்டை வாழ்விக் கும் அன்னையாம் காவிரியின் கிளையாம் அரிசியாறு வங்கக்



காரைக்கால் அம்மையார் ஆலயம்



அம்பகரத்தூர் பத்ரகாளியம்மன் ஆலயம்

கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த திருத்தலந்தான் திரு மலைராயன் பட்டினம். திரு மலைராயன் முதலில் தஞ்சைப் பகுதியை ஆண்டு வந்தான். பின்னர் இப்பட்டினத்திற்குத் தன் தலைநகரை மாற்றிக் கொண்டதால் இவ்வூருக்குத் திருமலைராயன் பட்டினம் என்பது பெயராகியுள்ளது.

ஊரில் எங்கு நோக்கினும் திருக்கோயில்களைக் காண முடிகிறது. பெரிதும் சிறிது மான ஆலயங்கள் பார்க்கும் இடமெல்லாம் தரிசனம் தந்து 'இறைவன் எங்கும் நிறைந்துள் ளான்' என்னும் தத்துவத்தை உணர்த்திக் கொண்டிருக் கின்றன. இவ்வாலயங்களின் நடுவில் கோயில் கொண்டு இருப்பவள்தான் அன்னை ஆயி ரங்காளி. அன்னையின் புராண வரலாறு மிகச் சுவாரஸ்யமான ஒன்றாகும். அன்னைக்குப் படைக்கப்படும் நிவேதனப்



பார்வதீஸ்வர சுவாமி திருக்கோயில்

பொருள்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் இருக்க வேண்டும் என்பது நியதி. இவ்வாறு ஆயிரம் ஆயிரமாகப் படைக்கப் படுவதால் அன்னைக்கு ஆயிரங் காளியம்மன் என்பது திருப் பெயராக விளங்குகிறது.

கனமான ஒரு பேழைக்குள் இருக்கும் ஆயிரங்காளி அம்மன், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையே வெளியே பக்தர்களின் காட்சிக்கு அமர்கிறாள். அகிலம் போற்றும் பெரு விழாவாக இந்நாளைக் கொண்டாடுவார்களாம் மக்கள். ஐந் தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் பெரு விழாவைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் வைகாசி மாதம் வளர்பிறைப் பட்சத்தில் வருடப் பூர்த்தி கொண்டாடப் படுகிறது. வாரத்தில் ஒவ் வொரு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும் அம்மனுக்குச் செய்யப்படும் அர்ச்சனைகள் அநேகம்.

செங்குந்தர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கோயிலை வாழையடி வாழையாகப் பரா மரித்து வருகிறார்கள்.

கிடைத்த தகவல்கள் மேலும் மேலும் சுவாரஸ்யத்தைத் தர, புறப்படுகிறோம், ஜம்புநாத சுவாமி ஆலயத்திற்கு.

ஜம்புநாத சுவாமி ஆலயத் தின் வரலாறு, 'கி.பி. 1453 முதல் 1468 வரை விஜயநகரப் பேரரசின் - பிரதிநிதியாக இப் பகுதியை ஆண்ட திருமலைராய னால் இத்திருக்கோயில் கட்டப் பட்டது' என்று கூறுகிறது.

திருமலைராயனை மணம் புரிந்த சோழகுலப் பெண், தான் உறையூரில் வாழ்ந்தபோது திருவானைக்காவில் எழுந் தருளியுள்ள ஜம்புகேசுவரரை யும், அகிலாண்டேஸ்வரியையும் தினமும் வணங்கும் வழக்கப் படி, இங்கும் அத்தகைய வாய்ப்பு தனக்கு ஏற்படுத்தித் தர, தன் கணவனை வேண்டி இருக்கிறாள்.

தன் அன்பு மனைவியின் விருப்பப்படி காவிரியும், கொள்ளிடமும் இரு மருங்கும் தழுவிச் செல்ல அமைந்த திரு வானைக்காவில் உள்ளதுபோல் - அரசலாறும், திருமலைராய னாறும் தழுவிச் செல்லும் பசுமை நிறைந்த நிரவியில் அன்னை அகிலாண்டேஸ்வரிக் கும், ஜம்புநாதருக்கும் ஆலயம் எழுப்பிக் கொடுத்ததாக செவி வழி வரலாறு செப்புகிறது.

அமைதியான ஆலயத்தில் அர்ச்சகரின் தமிழ் வழிபாடு இன்னும் நெஞ்சில் இனித்துக் கொண்டே நிலைத்திருக்கிறது.

அந்த நினைப்புடனே திரு நள்ளாறுக்கு வருகிறோம். சனிக்கிழமை தோறும் சனி பகவான் விசேஷமாக அர்ச்சிக் கப்பட தினமும் ஆறு கால பூஜையும் நடைபெறுகிறது.

ராஜகோபுரப் பணிகள் மிக விரைவாக நடந்து கொண் டிருந்தன. இரண்டரை வருடங் களுக்கு ஒருமுறை நடக்கும் சனிப்பெயர்ச்சியின் போது கிட்டத்தட்ட எட்டு லட்சம் பேர் இங்கு வருகை புரிகின்றனர்.

இந்த ஜெகத்தினில் சனி
கவானுக்குத் தனிக்கோயில்
அமைந்துள்ள திருநள்ளாறு,
ரைக்காலுக்கு மேற்கே
ந்து கி.மீ. தூரத்தில் அமைந்
ள்ளது. திருநள்ளாறு சுற்
லா மையமாகவும், யாத்
ரை ஸ்தலமாகவும் ஆகிவிட்ட
டியால் நாள்தோறும் பேருந்து
ளில் சுற்றுலாப் பயணிகள்
ந்து சென்ற வண்ணம் இருக்
றார்கள்.

சனிபகவான் ஆலயம் என்று
ருநள்ளாறு பிரபலமாகி விட்
டாலும், ஸ்ரீ சனீஸ்வர பகவான் கோயில் கொண்டிருப்பது, ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயம் என்பதுதான் உண்மை.

நளமகாராஜா சனியினால் பீடிக்கப்பட்டு மனைவி, மக்களையும், நாட்டையும் இழந்திருந்தபோது திருநள்ளாற்றுக்கு வந்து தீர்த்தக் குளத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்து கலி நீங்கப்பெற்றார் என்பது ஐதீகம். இன்றும் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் அந்தக் குளத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்வது வழக்கமாகியுள்ளது.

ஆலயத்தை வலம் வரும் போது 63 நாயன்மார்களும், ஸ்ரீ சொர்ண கணபதியும், ஸ்ரீ சுப்பிரமணியரும், லிங்கேஸ்வரரும், தல விருட்சமான தர்ப்பையும், தங்கத்தினால் ஆன காக வாகனமும் காட்சியளித்தன. இவற்றின் பிராகாரத்தின் ஓவியங்களும், போக மார்த்த பூண்முலையம்மையும், பச்சைப் பதிகமும் விசேஷங்களாகும்.

பெருகி வரும் பக்தர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தங்குமிட





ஆயிரங்காளியம்மன்

வசதிகளும் நிறைய உள்ளன. இன்னும் ஐம்பது ஆண்டுகளில் திருநள்ளாறு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய பெருமளவிலான திட்டம் ஒன்றினை ஆலய நிர்வாகம் மேற்கொள்ள இருக்கிறது.

சனி பகவானிடமிருந்து விலகி வருகிறோம், திருநள்ளாறில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவு பயணத்தில் அம்பகரத்தூர்.

அம்பரனைப் பத்திரகாளி இத்தலத்தில் வென்று உலகங்களைக் காத்ததால் இவ்வூருக்கு 'அம்பரகரம்' எனப் பெயராகி, அப்பெயர் நாளடைவில் திரிந்து அம்பகரம் என்று ஆகியுள்ளது.

ஓங்கி நிற்பது பத்திரகாளி ஆலயத்தின் ராஜகோபுரமாகும். கோபுரத்தின் பக்கங்களில் சிந்தையைக் கவரும் சுதை உருவங்கள், ராஜ கோபுரத்தினைத் தொடர்ந்து ஒரு நீண்ட தாழ்வாரம்.

1964 வரை இவ்வாலயத்தில் வைகாசி இரண்டாவது செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு எருமைக் கடா வெட்டு நிகழ்ந்திருக்கிறது.

ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானத்திற்கு ஆடு, மாடு, கோழிகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தைத் தவிர, நன்செய், புன்செய் நிலங்களும் அசையாச் சொத்துகளாக உள்ளன. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தில் கூட்டம் அதிகம். ஸ்ரீ பத்திரகாளியம்மனின் மகிமைக் கதைகள் ஏராளம்.

அம்பை என்றழைக்கப்படும் அம்பகரத்தூரை விட்டுப் புறப்பட்டு நெடுங்காடு, வாஞ்சியார் பாலம் வழியாக சுயம்புநாத சுவாமி கோயிலை வந்தடைகிறோம்.

சோழர்காலத்திய பாணியிலான இக்கோயில், கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் போன்ற அங்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.



ஐம்புநாத சுவாமி திருக்கோயில்



செங்கல்லால் ஆன முன் மண்டபம் பிற்காலத்தியது. இதற்கு நெடியதொரு கோபுர வாயிலுமுண்டு. விமானத்தின் கீழ்த்தள கோஷ்டங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தி. மேற்கே லிங்கோற்பவர். வடக்கே பிரம்மா முதலியோரின் சிற்பங்கள் வைக்கப் பட்டுள்ளன

காரைக்கால் மண்டல நிர்வாக அதிகாரியும், திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான தனி அதிகாரியுமான திரு. ரத்தன் சிங் அவர்களின் தனிப்பட்ட முயற்சியில் கடற்கரைச் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள விருந்தினர் மாளிகையும், கவின்மிகு சாலையோரப் பூங்காவும், திருநள்ளாறு ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பளிங்குக் கற்கள் தளமும், ஆலயத்தை ஒட்டியுள்ள அமைதியான நந்தவனமும் காரைக்காலுக்கு மேலும் பெருமை சேர்க்கின்றன.

குறிப்பாகச் சொல்லப் போனால் காரைக்கால் பகுதி, திரு. ரத்தன் சிங் அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பிறகு பெரிய வளர்ச்சியைப் பெற்று வருகிறது. அரியானா மாநிலத்தில் பிறந்து புதுவை அரசின் PCS அதிகாரியான இவர் காரைக்கால் மீதும், காரை மக்களின் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டுள்ளார்.

தற்போது புதுவை மாநில அரசின் தொழிற்துறை இயக்குநராகத் தன் சேவையைத் தொடர்கிறார்.

காரைக்காலில் - திருநள்ளாறு மட்டுமே என்றிருந்த கருத்து, நாம் பார்த்த ஆலயங்களின் மூலம் மாறிக்கொண்டே இருக்க - இந்துக் கோயில்கள் மட்டுமில்லை, எல்லா மதக் கோயில்களும் இங்குள்ளன என்று சொல்லியது, Church of our Lady of Angels (நற்றரவு அன்னை ஆலயம்) - ஹஜ்ரத் செய்யிதுனா ஹாஜி ஷாஹே அலி இமாம் திவான் மஸ்தான் செய்யிது தாவூது புகாரி வலியுல்லாஹ் தர்காவும், மசூதியும்.

நகரினுள் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் கிறிஸ்துவ ஆலயத்தின் கோபுரமும், ஓங்கி ஒலிக்கும் முஸல்மான்களின் தொழுகை ஒலியும் சர்வ மத ஒற்றுமையைப் பறைசாற்றின.

காரைக்காலில் பத்து சுயம்வர தபஸ்வினி அம்பாள் சமேத பார்வதீஸ்வர சுவாமி திருக்கோயிலின் கட்டட அமைப்பு குறிப்பிடத்தக்கது. பங்குனி மாதத்தில் 13 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை மேற்கில் மறையும் சூரியனின் ஒளிக் கதிர்களை மாலை 5 மணிக்கு லிங்கத்தின் மேல் விழச் செய்யும் நேர்த்தி வியப்படையச் செய்தது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 'தென்னக இசையின் தாய்' என்று அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் திருக்கோயிலுக்குச் செல்கிறோம். ஆலயத்தின் மண்டபச் சுவரைச் சுற்றி வண்ண ஓவியங்கள் அம்மையாரின் வரலாற்றை விளக்கின.

கர்நாடக இயல், இசை மேதைகளுக்கும், தேவாரப் பண்ணிசை பாடிய நாயன்மார்களுக்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரின் பண்கள் அவரது காலத்திற்குப் பின்னால் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, மலையாளம் ஆகிய மொழிகளில் இசையை வளர்த்தவர்களுக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கியதை எண்ணிப் பெருமிதம் கொண்டு புறப்படுகிறோம்.

விரைவுப் பேருந்துகளில் தெற்கு நோக்கிப் பயணப்படும் போது சில சமயங்களில் காரைக்கால் நகரம் குறுக்கிடும். அப்பொழுதில் திருநள்ளாறு சனிபகவானும், காரைக்கால் அம்மையாரும் நம் நினைவில் வந்துவிட்டுப் போவார்கள். 'ஓ... இவைதான் காரைக்கால்!' என்று நினைத்தும் விடுவதுண்டு.

ஆனால் காரைக்காலை முழுவதுமாகச் சுற்றிப் பார்த்த பிறகுதான் தெரிகிறது... இவ்வளவு இடங்களா? இவ்வளவு ஆலயங்களா? இவ்வளவு அற்புதங்களா?

நம்முடன் வந்த சுற்றுலா வளர்ச்சித் துறையின் அதிகாரிகள் எஸ். விஜயகுமாருக்கும், ஜி. ராஜேந்திரனுக்கும் நன்றி சொன்னோம். பயனுள்ள இடங்களைப் பார்வையிட வைத்து, அவற்றைப் பற்றிய அரிய தகவல்களைப் புரியவும் வைத்த இயக்குநர் வி. சிவ சண்முகத்தின் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளைப் பாராட்டினோம்.

புதுச்சேரி போக்குவரத்துக் கழகத்தின்
இருக்கைகளில் அமர்ந்து 294 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சென்னையை நோக்கிப் பயணமானோம்.

சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமல்ல; தல யாத்ரிகர்களுக்கு மட்டுமல்ல, தமிழக மக்கள்... ஏன்? இந்திய மக்கள் அனைவரும் பார்த்து மகிழ வேண்டிய பல்வேறு இடங்கள் காரைக்கால் நகரில் பரந்து விரிந்திருக்கின்றன. தொன்மைகளைச் சொல்லாமல் சொல்கின்றன.

– நாகராஜகுமார்

படங்கள் : **யோகா**



ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ்

காரைக்காலில் இருந்து 7 கி.மீ. தொலைவில் திருநள்ளாறு கெம்யூன் பஞ்சாயத்தில் – 42 ஏக்கர் நிலப்பரப்பில் 200 தொழிலாளர்களுடன் அமைதியாக இயங்கிக் கொண்டிருக்கிறது ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.

ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்டிலிருந்து ஜைமோ (Zymo) என்ற சலவைச் சோப்பு கட்டியும், ஹென்கோ (Henko) என்ற சலவைச் சோப்புத் தூளும், ஒயிட் ஜைன்ட் (White jiant)என்ற சலவைச் சோப்புத் தூளும் தயாராகின்றன.

இதைத் தவிர 'ஜியோலைட்' என்ற சோப்புத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருளும் தயாரிக்கப்பட்டு காரைக்காலின் தொழில் வளர்ச்சிக்குத் துணை புரியும் நிறுவனமாக விளங்குகிறது.

ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்டின் ஜெனரல் மானேஜர் திரு. வீ.ஆர். வீரப்பன் அவர்களைச் சந்திக்கிறோம். 85 கோடி ரூபாய் முதலீட்டில் ஜெர்மனி நிறுவனம் ஹென்கல் (Henkel)லுடன், ஸ்பிக் குரூப் நிறுவனம் இணைந்து செயல்படும் திட்டத்தை விவரிக்கிறார்.

"STPP அதாவது 'சோடியம் ட்ரை பாலி பாஸ்பேட்' நீரை மாசுபடுத்துகிற பொருளாக உலக நாடுகள் சிலவற்றில் தடை. செய்யப்பட்ட பொருளாக விளங்குகிறது. அதுவே பல நாடுகளில் சோப்புத் தயாரிக்கிற மூலப் பொருளாகவும் விளங்குகிறது.

அதற்கு மாற்றுப் பொருள் தான் 'ஜியோலைட்' என்கிற, ஜெர்மனியத் தொழில் நுட்பத்துடன் நாங்கள் தயாரிக்கும் சோப்புத் தயாரிக்கும் மூலப் பொருள். 'ஜியோலைட்'டை இந்தியாவில் முதன் முதல் தயாரிக்கும் நிறுவனம் ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்தான். ஜியோலைட், இறால் பண்ணைக்கும் உதவுகிற பொருளாக விளங்குகிறது.

நம் நாட்டிலும், DTPPஐ பிரதானமாகக் கொண்டே பலவகை சோப்புகள் தயாராகின்றன. இந்த DTPP சுற்றுச்சூழலைப் பாதிக்கின்ற நச்சுத்தன்மை உடையது. ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்டின் ஜியோலைட் அந்த நச்சுத் தன்மையற்று விளங்குவதால் நீர் நிலை சுத்தமாவதுடன், நீர்வாழ் உயிரினங்களுக்கு எந்தப் பாதிப்பையும் அளிப்பதில்லை.

இப்போது உற்பத்தியாகும் ஜைமோ, ஹென்கோ, ஒயிட் ஜைன்ட் சலவைச் சோப்புகளுடன் விரைவில் தரையைச் சுத்தப்படுத்தும், பாத்திரங்களைச் சுத்தப்படுத்தும் சோப்பு வகைகளுடன், வாசனை சோப்புகளைத் தயாரிக்கும் நிறுவனமாக செயல்பட உள்ளது, ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.

"இந்திய மக்கள் அனைவருக்கும் ஏற்ற விலையுடன் – கடிநீர் – மென்னீரில் உபயோகப்படுத்துகிற தரத்துடன் எங்கள் தயாரிப்புகள் விளங்குகின்றன" என்றார் திரு வீ.ஆர். வீரப்பன். அக்டோபர் 94இல் சர்வதேசத் தரச் சான்றினைப் பெற்றுள்ள இந் நிறுவனம், 93 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சகல வசதிகளையும் செய்து தரும் நோக்கத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் விரைவில் வீடுகளைக் கட்டித் தரப் போகிறது ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ்.

ஒவ்வொரு தொழிலாளரும் ஆண்டுக்கொரு முறை மருத்துவ சோதனை செய்து கொள்ள மருத்துவ மையம் அமைத்துள்ளது. மேலும் காரைக்கால் நகரில் தொழிலாளர்களுக்குப் பொழுது போக்குக் கூடத்தை ஏற்படுத்தியுள்ளது ஸ்பிக்.

சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத நிறுவனமாக – சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களின் தொழிலாளர்களின் திறமையான ஒத்துழைப்பால் மென்மேலும் வளரும் ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் நிறுவனம், மேலும் வளர நாமும் வாழ்த்துவோம்.

— நாகராஜகுமார்

பாரதா பிஸ்கட் பாக்டரி

காரைக்கால் - நாகூர் சாலையில் திருநள்ளாறுக்குச் செல்லும் பாதையின் ஆரம்பத்தில் இருந்தது அந்தக் கடை. சின்னக்கடைதான். அந்தக் கடையை அடையும் முன்பே பலகார வாசனை மூக்கைத் துளைக்க அருகில் சென்றால் மக்கள் கூட்டம். அந்தக் கடையின் பெயர் 'பாரதா பிஸ்கட் பாக்டரி'.

'காரைக்காலுக்கு வருகிற எவரும் எங்கள் கடைக்கு வராமல் போக மாட்டார்கள்' என்றார் 75 வயதான திரு. மு. வையாபுரி பிள்ளை. 1918 ஆம் ஆண்டில் திரு. வை.ப. முத்துபிள்ளை அவர்களால் தொடங்கப்பட்ட இந்த பிஸ்கட் கடை காரைக்காலின் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

"காரைக்கால் மக்கள் என்றில்லை; வெளிநாட்டில் இருந்து வரும் மக்களும் நாங்கள் தயாரிக்கும் புரூட் ரஸ்க், புரூட் பிஸ்கட், புரூட் அல்வா, ப்ளம் கேக், பிரத்யேகத் தயாரிப்பான கொனேட் ஆகியவற்றை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். எந்த வகைத் தயாரிப்பும், தயாரித்து விற்பனைக்கு வரும் சில மணி நேரங்களில் விற்பனையாகி விடும். மேற்படி தயாரிப்புகளுடன் பிறந்த நாள் கேக்குகளையும் நாங்கள் சிறப்புடன் தயாரிக்கிறோம்" என்றார்.

தேச பக்தரான வை.ப. முத்துப்பிள்ளையின் பேரன்கள் திரு. சண்முகசுந்தரமும், திரு. வி. கருணாநிதியும் தற்போது இந்நிறுவனத்தைக் கவனித்து வருகின்றனர். திரு. வையாபுரி பிள்ளையின் மேற்பார்வையில் சுத்தமாகத் தயாராகும் பிஸ்கட் வகைகள் காரைக்காலின் புகழ் மணத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. ❖









64 ஆண்டுகள் புகழ்பெற்ற சோடா, கலர் பான நிறுவனம்

காரைக்காலில் 1931இல் திரு. ஜோசப் சவரிமலையப்பா 'டைமண்ட் சோடா ஃபாக்டரி'யை நிறுவினார். மிகச் சிறிய இடத்தில் ஆரம்பிக்கப் பட்டாலும் சுவையான கலர் பானங் களும் விறுவிறுப்பான சோடா பான மும் மிகவிரைவில் புகழ்பெற்று வியாபாரம் பெருகியது. 'விடு தலைக்கு முன்பிருந்த புதுவையின் பிரெஞ்சுக் கவர்னர்களுக்குக் காரைக்காலிலிருந்து டைமண்ட் சோடா கேஸ் கேஸாகப் போகுமாம்', என்கிறார் இப்போதைய உரிமை யாளர்களில் ஒருவரான திரு. இருதயராஜ் சவரிமலையப்பா. தமிழ்நாட்டுத் தலைவர்கள் அனை வரும் டைமண்ட சோடாவைப் பரு கிய பெருமையுடையது.

1958இல் இப்போதிருக்கும் விஸ் தீரணமான இடத்திற்கு டைமண்ட் சோடா ஃபாக்டரி இடம் பெயர்ந்தது.

ஆரம்பத்தில் எல்லா வேலை களும் கையாலேயே நடைபெற்றன. இப்பொழுது semi bottle filling இயந்திரத்தில் பானங்கள் நிரப்பப் படுகின்றன. காரைக்காலிலிருந்து சுற்றுவட்டாரத்தில் சுமார் 50 கிலோ மீட்டர் தூரப்பகுதிகளுக்கு லாரி களிலும் மினி வேன்களிலும் டைமண்ட் சோடா கலர் விநியோக மாகிறது.

சோடா 1 ருபாய்க்கும், சாதா கலர் பானங்களான ஆரஞ்சு, ஐஸ் கிரீம், கோலா, லெமன் முதலியவை 2 ருபாய்க்கும் கிடைக்கின்றன.

ஸ்பெஷல் லெமன், ஆரஞ்சு, மேங்கோ, கிரேப் முதலியன 3,4 ருபாய்களில் விற்கப்படுகின்றன.

கோடை விற்பனை நாளொன் றுக்கு 3000 பாட்டில்கள். இருப் பினும் எள்ளளவும் தரத்தைக் குறைக் காமல் 'டைமண்ட்' என்னும் பெயருக் குரிய புகழ் சிறிதும் மங்காமல் சோடா ஃபாக்டரியை நடத்தி வரு கிறார்கள் பங்குதாரர்களான திரு. இருதயராஜ் சவரி மலையப்பாவும், திரு. தனராஜ் சவரிமலையப்பாவும்.

தகவல் :
இரா. பகவானந்ததாசன்

"காரைக்கால் அல்வா" இந்தப் பக்கத்தில் விசேஷம். பிற ஊர்களிலிருந்து வருபவர்களும், புதுவையில் உள்ளவர்களும் இதனை வாங்கிச் செல்வர். அவ்வளவு ருசி. அது மட்டுமா? பருத்திக் கொட்டை அல்வாவும் இங்கு பிரபலம்.

❖

காரைக்காலில் அடக்கமாகியுள்ள ஹஸ்ரத் செய்யது தாஹுத் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் அவர்கள் ரஷ்ய நாட்டின் புகாராவில் பிறந்தவர். இவரது காலம் (ஹிஜ்ரீ 1124-1244)

காரைக்கால் கந்தூரித் திரு விழாவின் போது இறைச்சியைக் குச்சியில் செருகித் தணலில் வாட்டி எடுத்த "சாட்ட" எனும் சிற்றுண்டி விற்கப்படுகிறது.


❖

இஸ்லாமியர் திருமணத்தின் போது மணமக்களைக் கேலி செய்வதற்கு இசுலாமியப் பெண்டிர் ஒரு வகையான குரல் ஒலி எழுப்புவர். இதனைக் "கொல உடுறது" என்பர்.

❖

அரைக் கால் சட்டை (Half Pant) அணிந்து செல்லும் ஆடவர்களை இங்கு (காரையில்) காணமுடியாது.

பின்யோசனை



பகவானந்ததாசன்

ஒன்றைச் செய்து முடித்த பிறகுதான் அப்படிச் செய் திருக்கக் கூடாது என்ற ஞானோ தயம் தாத்தாவுக்கு ஏற்படும். அடுத்த முறையாவது எச்சரிக்கை யாக இருப்பாரா என்றால் அது வும் கிடையாது. வாழ்நாள் முழு தும் அப்படியே கழிந்துவிட்டது. ஜாதகம் அப்படி.

சாதாரண விஷயம். இரண்டு நாள் ஜுரம் அடித்தது. பேரன் திருஞானம் மருத்துவமனைக்கு அழைத்துப் போனான். மாத்திரை மருந்து வாங்கிக் கொடுத்தான். கணபதி கம்பௌண்டர் வந்து ஊசி போட்டுவிட்டுப் போனார். ஜுரம் தணிந்தாற்போல்தான் இருந்தது. மறுநாள் குணமாகி விடும்தான். ஜாதகம்தான் சரி யில்லையே!

"வாயெல்லாம் ஒரே கசப்பா இருக்கு. உடம்பெல்லாம் வலிக் குது. போய்ச் சுந்தரமூர்த்தி டாக்டரைக் கூட்டி வா!" என்று திரு ஞானத்திடம் கூறினார் தாத்தா.

திருஞானம் ஒன்றும் சொல்லா மல் வெள்ளையும் சள்ளையுமாய் வெளியில் கிளம்பிப் போனான். பக்கத்து நகரத்தில் புகழ்பெற்ற டாக்டராகிய வரப்பிரசாத ராவ் என்பவரைக் காரில் அழைத்து வந் தான். அவரிடத்தில் என்னவோ ஆங்கிலத்தில் பேசினான். தாத்தா வுக்குப் புரியவில்லை. டாக்டர் வெள்ளைத்தாளில் இரண்டு வரி மருந்து எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார்.

சிவப்பு மாத்திரைகள் பத்தும் வெள்ளை மாத்திரைகள் பத்தும் வாங்கிவந்து கொடுத்தான் திருஞானம்.

'எண்பத்திரண்டு வயதாகி விட்டதே என்று ஏமாற்றப் பார்க்கி றானா? பெரிய டாக்டராமே? நாலு வார்த்தை ஏதாவது என்னிடத்தில் கேட்டாரா? கையைப் பிடித்து நாடி பார்த்தாரா? கண்பார்வை தெளிவாக இல்லையே! கேட் டாரா? ராத்திரி தூக்கமில்லாமல் ஏழெட்டு முறை இருமினேனே! அதைச் சொல்ல விட்டாரா? எத் தனை நாளில் குணமாகும் என் பதையாவது சொல்லி விட்டுச் சென்றாரா? என்ன பெரிய டாக்டர்? நமக்குச் சுந்தரமூர்த்தி தான் சரிப்பட்டு வருவான்' என்று எண்ணிக் கொண்டார்.

'சொல்லி அனுப்பியவுடன் சுந்தரமூர்த்தி சின்ன மோட்டார் சைக்கிளில் பறந்து வருவான். 'என்ன மிஸ்டர் தாத்தா!' என்று அவன் விளையாட்டாக அழைப்பதி லேயே பாதி வியாதி பறந்துவிடும். 'உங்களுக்கு என்னென்ன செய் யுது? வரிசையாச் சொல்லுங்க பார்ப்போம்' என்று பொறுமை யாக விசாரிப்பான். நாக்கை நீட்டச் சொல்வான். இமைகளை விலக்கிப் பார்ப்பான். அடிவயிற்றில் அழுத்திப் பார்ப்பான். பித்த நாடி, வாத நாடி என்று கை

புதுவை மாநிலத்தைச் சேர்ந்த பகுதியே காரைக்கால். எனினும் இப்பகுதியில் சில சிறப்பம் சங்களும் காணப்படுகின்றன.

அவை -

புதுவையில் ஓய்வு பெற்ற பிரெஞ்சு இராணுவ வீரர்கள் விளையாடும் "பூல்" (BOOL) எனும் இரும்பு கோலிகுண்டு எறிந்து விளை யாடும் விளையாட்டை இங்கு காண முடியாது. இங்கும் ஓய்வு பெற்ற பிரெஞ்சு இராணுவ வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖

"திருநள்ளாறு கோயிலின் பின்புறம் பயணிகள் வசதியுடன் தங்க இரட்டை வகை வீடுகள் ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளன. தனித்தனி வீடுகள் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் தயாராகின்றன. சத்திரம் ஒன்று, 52 அறைகள் இரண்டு படுக் கைகள் கொண்டதாக - குழுவின ராக 16 நபர்கள் தங்குவதற்கு சில அறைகளும் இன்னும் ஒரு வரு டத்தில் கட்டி முடிக்கப்பட்டு விடும்.

ரூபாய் 40 ஆயிரத்தை ஒருமுறை செலுத்தியவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 30 நாள்கள் தங்குவதற்கு இரண்டு அறைகள் ஒதுக்குகிற திட்டமும் தயார் நிலையில் உள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 42 இலட்சம்" என்றார் ஆலயத்தின் சிறப்பு அதிகாரி கே. நடராஜன்.

❖

அகலங்கண்ணு, ஊழியப்பத்து காக்கை மொழி, கூழ் குடித்த அக்ரகாரம், தூதுபோன மூலை, படுதார் கொல்லை.

இவை காரைக்காலைச் சுற்றியுள்ள கிராமங்கள்.

❖

காரைக்காலுக்கு அருகில் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது விழுதியூர் கிராமம். இங்கு சென்ற நூற்றாண்டு வரை நெசவுத் தொழில் சிறந்து விளங்கியதற்கு அடையாளமாக அட்சயலிங்க நூல்கடை, ஐயன் நூல்கடை, முருக நூல்கடை என்ற பெயரில் வழங்கும் கிராமங்களும், நூல்கடை வீதி எனும் பெயரில் ஒரு தெருவும் காரைக்காலில் இன்றும் உள்ளன.

❖ *-பி.கே.பீ காரை*

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே, "இப்போ நடுக்கம் நின்னுட்டுது போலிருக்கே?" என்றான்.

அவர் திடுக்கிட்டு மறுபடியும் முனகலைத் தொடங்கினார்.

அவரது திருப்திக்காக அதிருப்தியோடு சுந்தரமூர்த்தியை அழைத்து வந்தான்.

திருஞானம் அருகில் இல்லாத சமயத்தில் நிறைய மருந்து எழுதிக் கொடுக்கும்படி கேட்டு வாங்கிக் கொண்டார். திருஞானம் போய் மருந்து வாங்கி வந்ததும் எல்லா வற்றையும் வாங்கி வந்திருக்கின் றானா என்று சரி பார்த்துக் கொண்டார். வேளா வேளைக்குத் திருஞானத்தின் மனைவி லலிதா விடம் வெந்நீர் கேட்டு வாங்கி மாத்திரைகளை விழுங்கினார். மூன்றாம் நாளே அவரது வலக் கால் யானைக்கால் அளவுக்கு வீக்கிவிட்டது.

பொது மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தால், ரத்தப் பரி சோதனை செய்து பார்த்துவிட்டுக் 'காலில் சதையை வெட்டி எடுக்க வேண்டும். புண் ஆறியவுடன் தொடையிலிருந்து வெட்டி யெடுத்துத் தையல்போட வேண் டும். முற்றிலும் குணமாக மூன்று நான்கு மாதங்களாகும்' என்று சொல்லிவிட்டார்கள்.

தாத்தாவுக்குக் காலில் அறு வைச் சிகிச்சை நடந்தது. உடம் பில் சர்க்கரை அதிகமாகிப் புண் ஆற மறுத்தது. ஒரு மாதம் ஆஸ்பத்திரி வாசம்.

பிடித்துப் பார்ப்பான். முழங் கைக்கு மேல் பெல்ட் சுற்றிக் கையில் சின்னப் பந்து மாதிரி இருப்பதைப் புஸ் புஸ்ஸென்று அழுத்தி மீட்டர் மிஷினில் 'பிரஷர்' பார்ப்பான். பித்தம் அதிகம், ரத்தம் குறைவு, வாய்வுத் தொல்லை, மலச்சிக்கல், கபக் கட்டு, பார்வை மங்கல், சிறுநீர் அடிக்கடி போகும் என்று ஒவ்வொன்றாகப் பிட்டுப் பிட்டுச் சொல்வான். கைப்பெட்டியி லிருந்து ஊசி எடுத்து கையில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாய் ஊசி போடுவான். நான்கைந்து வகை மாத்திரை, கலர் கலராய் ட்யூப் மாத்திரை, சத்து டானிக் என்று நல்ல நல்ல மருந்துகளாகத் தான் நிறைய நூறு ரூபாய்க்குமேல் எழுதிக் கொடுப்பான். அவன் கவனித்து முடிப்பதற்கு அரை மணிக்கு மேலாகும். அவனல் லவோ டாக்டர்?

மூன்று நாள்கள் வரை திரு ஞானம் சுந்தரமூர்த்தியைக் கூட்டி வரவில்லை. யோசித்துப் பார்த்த தாத்தா ஒரு தந்திரம் செய்தார்.

பேப்பர் பையனின் குரல் கேட்டுக் காலையில் திருஞானம் அறையிலிருந்து வெளியே வரும் போது ஜுர நடுக்கம் வந்ததுபோல் முனகத் தொடங்கினார்.

"என்ன செய்யுது?"

"நடுக்கம் தாங்கலையேடா! உடனே போய்ச் சுந்தர மூர்த்தியைக் கூட்டிவா! அவன் வந்தாத்தான் சரியாகும்".

"சரி" என்று சொல்லிவிட்டு ஸ்கூட்டரைக் கீழே இறக்கி ஸ்டார்ட் செய்து கொஞ்சம் தள்ளி நிறுத்தி விட்டுத் திரும்பி வந்து அவர் கண் மறைவாக நின்று கவனித்தான். தாத்தாவிடமிருந்து முனகல் சத்தம் வரவில்லை என்பதறிந்து

'வயதாகி விட்டதால் அவர் பிழைப்பது கடினம்' என்று சொல்லிவிட்டார்கள். மருத்துவ மனைக்கு அலைவது சிரமமாக இருந்ததால் வீட்டிற்கு அழைத் துப் போகச் சொன்னார்கள். அவர் கேட்பதையெல்லாம் சாப் பிடக் கொடுக்கச் சொன்னார்கள்.

பிறகு தாத்தாவை வீட்டுக்கு அழைத்து வந்தான்.

"பெரிய டாக்டர் சீக்கிரம் குண மாகிவிடும் என்று சொல்லியிருக்கி றார். காலில் கட்டுப் போடு வதற்குத் தினமும் ஆள் வரும். பத்தியம் இல்லை. எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். என்ன வேண்டுமோ கேட்டால்

வாங்கி வந்து தருகிறேன்" என்றான்.

தாத்தாவுக்கு நாக்கு ருசி அதிகம். பசியும் அதிகம். பெரும் பசிக்காரர்.

பிறந்த உடனேயே அப்பாவைச் சாப்பிட்டு விட்டார். இரண்டு வருஷத்தில் அம்மாவையும் விழுங்கி விட்டார்.

ஒரே அக்காதான் அவரை வளர்த்தவர். அவருக்குப் பன்னிரண்டு வயதிருக்கும்போது அக்காவைப் பெண் பார்க்க வந்தார்கள்.

புலிநகம் கோத்த சங்கிலி போட்டிருந்த சிங்கப்பூர் மாப்பிள்ளையைப் பார்த்ததும் அவருக்குப் பிடித்தது. கையில் தங்கக் காப்பும், விரல்களில் மோதிரங்களுடன் சிகரெட் இருந்ததும்கூட அவருக்குப் பிடித்துப்போய், 'இந்த மாப்பிள்ளையே உயர்ந்த மாப்பிள்ளை' என்று எண்ணிக் கொண்டார். பெண் பார்க்க வந்த இடத்தில்கூட மாப்பிள்ளை பிராந்தி குடித்தது அவருக்குத் தவறாகப் படவில்லை. அந்த மாப்பிள்ளையினால் பிற்காலத்தில் எவ்வளவு வருத்தப்பட வேண்டியிருக்கும் என்பதும் அப்போது அவருக்குத் தெரியவில்லை.

அத்தான் அவரையும் சிங்கப்பூர் அழைத்துப் போனார். அக்காவுக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். ஊரில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்ததோடு சரி. அத்தான் சிங்கப்பூரில் அவரைப் பள்ளியில் சேர்க்கவில்லை. அக்கா சொல்லிப் பார்த்துவிட்டு விட்டு விட்டாள்.

அக்காவுக்கு மீனாட்சி பிறந்தாள். மூன்று வருடம் கழித்துக் குமரவேல் பிறந்தான். பிரசவ அறையை விட்டுப் பதினாறாம் நாள் அக்கா வெளியில் வருவதற்கு முன்பே அவருக்கு ஒரு செய்தி கிடைத்தது. அத்தான் ஒரு சீனச்சியை அவளது மூன்று பிள்ளைகளுடன் தனியாக ஒரு குடித்தனம் வைத்திருந்தார்.

அக்காவிடம் இச்செய்தியைச் சொல்லி விட்டார். 'சொன்னது சரியா, தவறா? சொல்லாமல் மறைத்திருக்கலாமோ?' என்ற குழப்பம் பல காலம் அவருக்கு இருந்தது.

வெளிநாட்டில் உற்றார் உறவினர் துணையில்லாதிருந்த அக்கா, சீனச்சி விவகாரத்தைக் கேட்டு அத்தானிடம் சண்டையிட்டாள். அன்று நள்ளிரவில் அவர் தூங்கும்வரை அவர்களின் வாய்ச்சண்டை கேட்டுக் கொண்டிருந்தது.

மறுநாள் விடிகாலையில் அத்தான் அவரைத் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பினார். தன்மேல் காலைப் போட்டுப் படுத்திருந்த குழந்தை மீனாவின் தூக்கம் கலைந்துவிடாமல் மெதுவாக எழுந்தார். அத்தான் நேராக அக்கா படுத்திருந்த அறைக்கு அவரை அழைத்துப் போனார்.

கைக்குழந்தை குமரவேல் பாலுக்கு அழுதுகொண்டிருந்தான். அக்கா படுக்கையில் செத்துக் கிடந்தாள். அதன் வாயோரம் ரத்தக்காயம்.

சண்டை போட்ட அக்காவை ஆத்திரத்தில் அடித்திருக்கிறார் அத்தான். படாத இடத்தில் பட்டு விட்டது. பாவம் பச்சை உடம்பு வேறு.

'அக்கா அக்கா' என்று அழுதார்.

அத்தான் சொன்னார்: 'யார் கேட்டாலும் பிரசவ அறையிலே அக்காவுக்கு ஜன்னி கண்டு செத்துட்டான்னுதான் சொல்லணும். இது நம்ம நாடு இல்லே. நீ வேற ஏதாவது உளறிட்டேன்னா, நம்ம ரெண்டு பேரையும் தூக்கிலே போட்டுடுவாங்க. பிள்ளைங்க ரெண்டும் அநாதையாச் செத்துடும்'.

அத்தான் பேச்சுக்குப் பயந்தும், மீனாட்சியையும் குமரவேலையும் நினைத்தும் அவர் வாயைத்

அன்று திறப்பாளர்; இன்று காப்பாளர்

காரைக்கால் கோயில் பத்தில் உள்ள அரசினர் ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் காப்பாளராக (வார்டன்) இருப்பவர் திரு. ஜி. நாகராஜன். இதில் என்ன செய்தி இருக்கிறது என்கிறீர்களா?

அந்த விடுதியைத் திறந்து வைத்தவரும் திரு. ஜி. நாகராஜனே.

குழப்பமாக இருக்கிறதா?

1967லிருந்து 68 வரை திரு எம்.ஒ.எச். ஃபாரூக் தலைமையிலான மந்திரி சபையில் திரு. ஜி. நாகராஜன் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார். அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!

*

மண்மாரி பெய்த ஊர்

சிலேடைப்புலி காளமேகப் புலவர் பாடல்களைப் படித்திருப்பீர்கள். அவரது சிலேடை வெண்பா ஒவ்வொன்றிலும் மூன்றாம் வரியில், 'திருமலைராயன். வரையில்' என்றிருக்கும். திருமலைராயன் என்னும் மன்னன் தலைநகராகக் கொண்டு அரசாண்ட ஊர் 'திருமலைராயன் பட்டினம்' காரைக்காலுக்குத் தெற்கே நாகை வழியில் 6 கிலோ மீட்டரில் இருக்கிறது. ஊரையொட்டித் திருமலைராயன் ஆறு கடலில் கலக்கிறது. இப்போது சுருக்கமாகத் தமிழில் 'திரு-பட்டினம்' என்றும் ஆங்கிலத்தில் T.R. Pattinam என்றும் அழைக்கப்படுகிறது.

ஒருமுறை திருமலைராயன் பட்டினத்தின்மேல் கோபம் ஏற்பட்டு 'மண்மாரி பொழிக!' என்று காளமேகம் வசை வெண்பா பாட, அவ்வாறே மண்மாரி பொழிந்தது – ஒருவேளை மணற்புயலாகவும் இருக்கலாம் என்றும் கூறுவர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க காசாக்குடிச் செப்பேடு

கி.பி. 1006இல் இராஜராஜ சோழன் அரசாண்ட காலத்தில் பொறிக்கப்பட்ட வடமொழி, தமிழ் எழுத்துகளால் உள்ள காசாக்குடி செப்பேடுகள் ஜூல்ஸ் தெ லா ஃபோன் (JULES DE LA FON) என்பவரால் கி.பி. 1879இல் கண்டெடுக்கப்பட்டன.

'காசாக்குடி' காரைக்காலுக்கு அருகில் உள்ள சிற்றூர் ஆகும்.

தகவல் : தாசன்

திறக்கவில்லை.'அப்போதே ஓடிப் போய்ப் போலீஸில் சொல்லியிருக்கலாமே' என்று பின்னாளில் அவர் வருந்தாத நாளே கிடையாது.

அக்காவை அடக்கம் செய்து சரியாக ஒரு மாதம்கூட முடியவில்லை. ஒருநாள் அத்தான் மீனாட்சியையும் அவரையும் ஒரு காரில்ஏறிக்கொள்ளச்சொன்னார். அவர் மடியில் ஒன்றரை மாதக் குமரவேல்.

துறைமுகத்துக்குக் கார் சென்றது. கையில் டிக்கெட்டையும் ஐம்பது ரூபாய்ப் பணத்தையும் கொடுத்து மூவரையும் நாகப்பட்டினத்துக்குக் கப்பல் ஏற்றிவிட்டார் அத்தான். காரில் திரும்பிச் சீனச்சி வீட்டிற்குப் போய்விட்டார்.

தாத்தாவுக்குச் சரியாகப் பதினாறு வயது அப்போது. சரியான வேலையில்லாமல் அந்தப் பிள்ளைகளை வளர்க்க அவர் பட்ட கஷ்டம் கொஞ்சமா நஞ்சமா?

தொடர்ச்சியாக அடிபட்டு அடிபட்டு அவரைப் பயம் பிடித்துக் கொண்டது. எதைச் செய்வதற்கும் பயம்.

அவரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னார்கள். மிகவும் ஏழைப் பெண் ஒருத்தியை அவருக்குக் கல்யாணம் செய்து கொடுக்கவும் உறவினர் சிலர் முயற்சியெடுத்தார்கள்.

பயந்தார். இந்தப் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய கஷ்டத்தில், கல்யாணம், குழந்தை குட்டி என்றால் சமாளிக்க முடியுமா என்று பயந்தார். கல்யாணம் செய்து கொள்ளவில்லை. இது தவறோ என்று கொஞ்சகாலம் வருந்தினார்.

ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது குமரவேல் காணாமல் போய்விட்டான். அவனைத் தேடுவதில் நான்கைந்து வருடம் வீணாய்ப் போயிற்று. அவனை அங்கே பார்த்தேன், இங்கே பார்த்தேன் என்று யாராவது சொல்லிவிட்டால் போதும். சைக்கிளை எடுத்துக் கொண்டு முப்பது நாற்பது மைல் கூடச் சென்று தேடி வருவார். அப்போதெல்லாம் கப்பிச் சாலைதான். சைக்கிளில் வேகமாகச் செல்ல முடியாது. பல இடங்களில் தள்ளிக் கொண்டுதான் செல்ல வேண்டும்.

அப்படிச் சென்று வரும் போதுதான் ஒருமுறை கல்யாண முருங்கைக் கிளையை ஊருக்கு எடுத்து வந்து பதியன் போட்டார். இப்போது இந்த ஊரிலுள்ள எல்லாக் கல்யாண முருங்கை மரங்களும் ரத்தச் சிவப்பான அவற்றின் பூக்களும் அவரால் வந்தவை.

கல்யாண முருங்கை என்றதும் தாத்தாவுக்கு மீனாட்சியின் கல்யாணம் நினைவு வந்தது.

நான்கு பிள்ளைகளுள்ள தாரமிழந்த ஒருவருக்கு மீனாட்சியை இரண்டாந்தாரமாகக்கேட்டார்கள். மனசுக்குக் கஷ்டமாக இருந்தது. வேறு வழி? வேறு வசதி? கண் கலங்கியபடியே அவளைக் கட்டிக் கொடுத்தார்.

ஏழு வருடம் ஒண்டிக்கட்டை வாழ்க்கை. சமைத்துப் போடுவதற்காகவாவது ஒரு கல்யாணம் செய்திருந்திருக்கலாமே என்று சில சமயம் தோன்றும். அந்தக் காலத்தில்தான் அவர் இனிப்புப் பலகாரங்களுக்கு அடிமையானார். கிடைக்கிற காசுக்கு அல்வா, ஜிலேபி, குலோப்ஜான், மைசூர் பாகு என்று அவற்றையே உணவாக்கிக்கொண்டார்.

எட்டாவது வருடம் மீனாட்சி இரண்டு வயது திருஞானத்தைத் தூக்கிக்கொண்டு விதவையாக, மூத்தாள் பிள்ளைகளால் துரத்தப்பட்டு, கையில் காலணா காசில்லாமல், இருபத்தைந்து மைல் நடந்து வந்து அவரிடம் அழுதாள்.

அவர்களுக்கு அடைக்கலம் தந்து அவளுக்குச் சோறு துணிமணி கொடுத்துக் காப்பாற்றுவதும் திருஞானத்தை வளர்த்து ஆளாக்குவதும் அவருக்குக் கடமையாயிற்று.

யார் செய்த புண்ணியமோ, திருஞானம் அவருக்கு நேர்மாறாக வளர்ந்தான். நல்லவிதமாகப் படித்தான். தாத்தாவின் பயம் அவனுக்குக் கொஞ்சம்கூட ஒட்டவில்லை. அவரைப் போலன்றி எதிலும் திட்டவட்டமாக முடிவெடுப்பான். எதிலும் முன்னால் நிற்பான். நேர்மையாகச் சம்பாதிக்கிறான். எல்லா வட்டாரங்களிலும் செல்வாக்கோடு இருக்கிறான். குணவதியான லலிதாவைக் கல்யாணம் செய்து கொண்டான். முத்து முத்தாய் மூன்று மக்களைப் பெற்றான். அவரை நல்லவிதமாகக் கவனித்துக் கொள்கிறான். அவரது மனம் சிறிதும் கோணாமல் நடந்து கொள்கிறான்.

"திருஞானம்! குலோப்ஜான் வாங்கிட்டு வந்து தர்றியா?"

தந்தான்.

"சேவு தின்னு ரொம்ப நாளாவுது. உருண்டை சேவு வேணாம். கடிக்க முடியாது. பட்டை சேவு. இருந்தா வாங்கிட்டு வாயேன்!"

"அதென்ன திடீர்னு சேவு மேலே ஆசை?" நோய்ப் படுக்கையிலிருக்கும் தாத்தாவைப் பார்க்க வந்திருந்த அடுத்த தெரு குள்ளப் பிள்ளை கேட்டார்.

"சின்ன வயசிலே தீமிதிக்குப் போனப்ப எங்க மாமா ஒருத்தர் வாங்கிக் கொடுத்தார். அதுக்கப்புறம் தின்னலே. ஏதோ ஞாபகம் வந்தது. கேட்டேன்".

சேவு அங்கே கிடைக்கவில்லை. காரைக்கால் போய் வாங்கி வந்து கொடுத்தான்.

சர்க்கரை வியாதிக்கு வெறும் இனிப்பாகத் தின்றார். கால் புண் வளர்ந்து கொண்டிருந்தது.

தாமதமாகத்தான் அவருக்கு ஞானோதயம் வந்தது.

'இனிப்பைத் தின்றால் எப்படிப் புண் ஆறும்?'

"திருஞானம்! இனிமே இனிப்பு வேணாம். உடம்புக்குச் சத்தா சாப்பிட்டுப் பாக்கிறேன்".

"என்ன வேணும்?"

"ஆட்டுக்கால் சூப்பு சாப்பிட்டா தெம்பா இருக்கும்னு பரமசிவம் சொன்னான்".

தாத்தாவைப் பார்க்க வந்தவர்கள் ஆள் ஆளுக்கு ஒவ்வொன்றைச் சாப்பிடச் சொன்னார்கள். அவர் அவற்றையெல்லாம் கேட்டார்.

"சரி. கால் வாங்கிட்டு வர்றேன்".

மறுநாள் அவரது நாக்கில் எமன் வந்து உட்கார்ந்து கொண்

டான் – எப்போது வேண்டுமானாலும் அழைத்துச் செல்வதற்கு.

"திருஞானம்! கோலா உருண்டை சாப்பிட்டு ரொம்ப நாளாவுது".

"வயசான குடல். நாள்பட்ட குடல் வேறு. தாத்தாவுக்குக் கோலா உருண்டை செரிக்காதுங்க" லலிதா எச்சரித்தாள்.

"ஆசைப்பட்டுக் கேட்கிறார். இனிமே யார்கிட்டே கேட்கப் போறார்? நமக்கு மனக்குறை வேண்டாம். செஞ்சு கொடு!"

கோலா உருண்டையை ஆசை ஆசையாகச் சாப்பிட்டார்.

இந்த எண்பத்திரண்டு வருடங்களாக அவரது வயிற்றுக்குள் இருந்த அணைக்கட்டின்மேல் கோலா உருண்டை வெடிகுண்டைப் போல் விழுந்து அதை உடைத்துவிட்டது போலாயிற்று. விடாமல் வயிற்றுப் போக்கு.

இருபத்திரண்டு நாள்கள். எல்லாரும் ஒரு சுற்று இளைத்து விட்டார்கள்.

கடைசி நாள்.

தாத்தாவுக்குப் பேச்சு நின்று விட்டது. ஆனால் பிரக்ஞை நன்றாக இருந்தது. காதுகள் கூர்மையாயின.

தாத்தாவைச் சுற்றிலும் பெண்கள் கூட்டமாக நின்று, 'என்னைத் தெரியுமா தாத்தா? என் பக்கத்திலே நிக்கிறது யாரு? சுப்புலெட்சுமியோட கொழுந்தனார் மகள் வந்திருக்கா பாருங்க!' என்று அவருக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 'எந்தச் சுப்புலெட்சுமி? எந்தக் கொழுந்தன் மகள்?'

இன்னும் சிலர், 'யாருக்கு என்ன பாவம் செஞ்சீங்க? இப்படி அவஸ்தைப்பட்டு சாகணும்னு உங்க தலையிலே எழுதியிருக்கே? ஏங்கா! இன்னைக்கு நிறை அமாவாசை. இரவு தாண்டாது. இல்லையாக்கா? ஆமாமாம்' என்று ஆள் ஆளுக்கு அவரைத் தங்கள் உத்தேசங்களாலேயே கொன்று கொண்டிருந்தார்கள்.

முன்னிரவு நேரத்தில் தாத்தாவை இறுதியாகப் பார்த்து விட்டுப் போக வந்த திருஞானத்தின் நண்பர்கள், 'மறுநாள் தங்களுக்குள்ள வேலைகளில் எவற்றைத் தள்ளிப் போடலாம், என்ன மாற்று ஏற்பாடுகள் செய்யலாம்' என்று உள்ளுக்குள் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

பதினோரு மணிக்குள் பார்வையாளர்கள் படுக்கப் போய்விட்டார்கள். இரவில் எந்த நேரத்திலும் எழுந்து வரவேண்டுமே! பிறகு தூங்க முடியாதே!

பன்னிரண்டு மணிக்குப் பிறகு லலிதாவும் அயர்ந்து விட்டாள்.

திருஞானம் மட்டும் தாத்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எதற்கும் கண் கலங்குவது அகௌரவம் என்ற கொள்கையுடைய அவனுக்கு அப்போது ஏனோ அழுகை பொங்கியது.

தாத்தா மட்டும் இல்லையென்றால் அவன் இந்த அளவுக்கு ஆளாகியிருக்க முடியுமா? அந்த நன்றியுணர்ச்சி. அந்தப் பாசம்.

புதியதோர் வழியமைப்போம்!

விழுதியூர் ராஜேந்திரன்

நித்திரை போலொரு
நிலையற்ற வாழ்வதில்
எத்தனை பேதங்கள்!
ஏனிந்த சோகங்கள்?
வேறொரு கிரகத்தை
வெல்லத் துடிப்பவன்
வாழும் பூமியிலுயர்
வாழ்வை உணர்ந்தானா?
ஆகாயம் மேலேயும்
ஆதிக்கம் செலுத்திடினும்
சாகாது வாழ்ந்தவர்
சரித்திரமும் உண்டோ?
வீதிகள் தோறும்
சாதிகள் சங்கம்
வேதத்தையே ஓதுகிறது
சாத்தான்கள் எங்கும்.
விழியதும் சுடர்விட்டால்
வழியதும் புலப்படாதோ?
வழியதும் தெளிவுற்றால்
விதியதும் வசப்படாதோ?
தெளிவது பிறந்திடில்
தெரியாதோ சத்தியம்?
ஒளிர்வது அறிவெனில்
உயர்வது நிச்சயம்.
இனியேனும் இனியதாய்
இருந்திடச் செய்வோமா?
புதியதோர் பாதையில்
பயணமும் செய்வோமா?

உனது முகம்

வெளிச்சம்
பட்டதும்
சில
கால்குலேட்டர்கள்
இயங்குகின்றனவாம்...
அன்பே!
உன்
முகத்தைக் காட்டு




பெண்குழந்தை

சுகப்பிரசவம் மனைவிக்கு
வேதனையுடன் கணவன்
பெண்குழந்தை

கி. இராமச்சந்திரன்

வெல்லுமா?





விடியுமா என்றிருந்த வாழ்வில்
விடிந்தது; மீண்டும் இருண்டது.

அலைமகளை மணந்ததால் அந்தக்
கலைமகள் கண்களை மூடிக் கொண்டாள்.

பொய்ம்மைக்கு மாலை யிட்டதால்
உண்மை வெட்கித் தலைகுனிந்தது.

ஏமாற்றத்தை ஏற்றுக் கொண்டதால்
யதார்த்தம் விலகிக் கொண்டது.





அடிமையாக ஆகி விட்டதால்
சுதந்திரம் சேய்மையில் சென்றது.

போராட்டம் ஆயிரம் வரும்;
போராடிப் போராடி மனந் தளரும்.

தொடர்கதையான வாழ்க்கையில்
தோல்வியும் தொடர்கதையே.

வாய்மை, நேர்மை, நியாயம்
என்றாவது ஒருநாள் வெல்லுமா?

காரை. எஸ். அரங்கநாயகிராவ்

இன்னும் உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளமாகக் கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஓர் அசைவு மட்டும் இருந்தது அவரிடத்தில்.

"தாத்தா! தாத்தா!" திருஞானம் வாய்விட்டு அழுதான்.

தாத்தாவுக்குக் காதில் விழுந்தது.

'அழாதே திருஞானம்!' என்று ஆறுதல் கூற ஆசைதான். பேச்சு வரவில்லையே! விரல்களால் அவன் கண்ணீரைத் துடைத்துவிட விருப்பம்தான். கைகளுக்கு அசைவில்லையே!

ஆனால் உதடுகளையும் விழிகளையும் தன்னால் அசைக்க முடியும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அசைக்கவில்லை. இன்னும் என்ன சொல்லி அழுகிறான் என்று கேட்க வேண்டும் போல் ஆவலாக இருந்தது. கெட்ட நேரத்துக்கு இப்படித்தான் மனசு யோசிக்கும் போல. அவனையே விழியசைக்காமல் பார்த்தார்.

"உங்களுக்கு இன்னும் ஏதாவது குறை வெச்சிருக்கேனா தாத்தா?" என்று கண்ணீர் வடித்தான்.

நாற்பத்தைந்து வயதில் அவன் கண்ணீர் வடிப்பது அவருக்குப் பாவமாக இருந்தது. இவ்வளவு காலம் அவர் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் பலன் கிடைத்து விட்டதுபோல் மகிழ்ந்தார். ஒரு கடவுளைப் பார்ப்பதுபோல் அவனைப் பார்த்தார். அவன் உருவத்தைக் கண்களுக்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணம் வந்தவர் போல் இமைகளை மெல்ல மூடினார்.

அவர் கண்மூடியதைப் பார்த்ததும் திருஞானம் பயந்தான். அம்மாவையும் லலிதாவையும் எழுப்பினான். அவர்களும் பயந்தார்கள். தாத்தா இறந்துவிட்டாரா இல்லையா என்பது சரியாகத் தெரியாமல் அழுவதற்குக் கூடப் பயந்தார்கள்.

"பக்கத்து வீட்டுக்குப் போய் தையமுத்துவை அழைச்சுகிட்டு வா! அவ நல்லா பாத்துச் சொல்லுவா" என்றாள் அம்மா.

தாத்தாவுக்குக் காதில் விழுந்தது.

'இல்லை மீனாட்சி! எனக்கு இன்னும் உயிர் இருக்கு' – சொல்ல முடியவில்லை.

தையமுத்து வந்தாள். தாத்தாவின் மூக்கருகில் கை வைத்துப் பார்த்தாள். அந்த நேரம் அவருக்கு மூச்சு தேங்கியிருந்தது. இமைகளை விலக்கிப் பார்த்தாள். தெய்வம் போன்ற திருஞானத்தின் உருவம் கண்ணிலிருந்து வெளியே ஓடிவிடுமோ என்று பயந்தவர் போல் இமைகளை மூடிக்கொண்டார். காலைத் தொட்டுப் பார்த்தாள். ஜில்லென்றிருந்தது. அந்த வினாடியில் இடக்கால் கட்டை விரலை லேசாக அசைத்தார். ஒருவரும் கவனிக்கவில்லை.

"முடிஞ்சுட்டுது" என்றாள் தையமுத்து.

தாத்தாவின் காதில் விழுந்தது.

மீனாட்சியும் லலிதாவும் வெடித்து அழுதார்கள்.

"உயிர் விட்டதும் உடனே வாய்க்கட்டு போட்டுடணும். அப்புறம் கட்ட முடியாது" என்றாள் தையமுத்து.

தாத்தா காதில் விழுந்தது.

லலிதா ஓடிப்போய் நாலுமுழ வேட்டியை எடுத்து வந்து 'சர்சர்' என்று கிழித்தாள்.

தாத்தா காதில் விழுந்தது.

திருஞானம் தாத்தாவின் தாடையில் துணிபதித்து உச்சந்தலையில் முடிச்சிட்டான்.

'ஹப்'. தாத்தா காலமானார்.

காரைக்கால் பிரமுகர்கள்

இந்தியா ஆங்கிலேயர்கள் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது போல், புதுச்சேரி மாநிலம் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்தது. 1954ஆம் ஆண்டில் தான் இந்தியாவின் யூனியன் பிரதேசமாக இணைந்தது. புதுவை மாநிலத்தின் தலைநகரம் பாண்டிச்சேரி என்றழைக்கப்படும் புதுச்சேரி. புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் ஆகிய நான்கு மாவட்டங்கள் உள்ளன. காரைக்கால் புதுச்சேரியிலிருந்து தெற்கே 140 கி.மீட்டரில் வங்கக் கடலோரம் அமைந்துள்ளது. மாஹி, கேரளாவை ஒட்டியும், 'ஏனாம்' ஆந்திராவையொட்டியும் உள்ளன.

புதுச்சேரி சட்டமன்றம் 30 உறுப்பினர்களைக் கொண்டது. புதுச்சேரி பகுதியில் 21 சட்டமன்றத் தொகுதிகளும் காரைக்கால் பகுதியில், காரைக்கால் (வடக்கு), காரைக்கால் (தெற்கு), திருநள்ளாறு, நிரவி–திருமலைராயன் பட்டினம், கோட்டுச்சேரி, நெடுங்காடு ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளும், மாஹி பகுதியில் 2 சட்டமன்றத் தொகுதிகளும், ஏனாம் பகுதியில் ஒரு தொகுதியும் உள்ளன.



R.M.S. பக்கிரிசாமிப் பிள்ளை



எம்.ஒ.எச். ஃபாரூக்



எஸ். இராமசாமி

புதுச்சேரி, காரைக்கால் மக்களுக்குத் தாய்மொழி தமிழ். மாஹியில் மலையாளமும், ஏனாமில் தெலுங்கும் தாய்மொழிகளாகும். புதுச்சேரி மாநிலத்தின் ஆட்சி மொழிகள் பிரெஞ்ச், ஆங்கிலம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் ஹிந்தி.

இதுவரை காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மூவர் புதுவையின் முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார்கள்.

R.M.S. பக்கிரிசாமிப்பிள்ளை: புதுவையின் முதல் முதலமைச்சர் 1955 ஆகஸ்ட் 12 முதல் 1956 ஜனவரி 13 (மறைவு நாள் வரை) முதலமைச்சராக இருந்தார்.

எம்.ஒ.ஹெச்.ஃபாரூக்: இரண்டு முறை புதுவை சபாநாயகராகவும் மூன்றுமுறை முதலமைச்சராகவும், சிலகாலம் பி.வி. நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் இணை அமைச்சராகவும் பணியாற்றி தற்போது நாடாளுமன்ற மக்களவையில் உறுப்பினராக உள்ளார்.

எஸ். இராமசாமி: புதுவை உள்துறை அமைச்சராகவும், இரண்டு முறை புதுவை அ.தி.மு.க முதலமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.



மு. சந்திரகாசு. (காங்கிரஸ்)


நெடுங்காடு (ரிசர்வ்) தொகுதி

தொடர்ந்து நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றிருக்கும் இவர் துணை சபாநாயகர், சபாநாயகர் பதவிகளை வகித்து இப்போது புதுவை மாநில உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பணியாற்றுகிறார். தொகுதியில் இருக்கும்போது இவரை பெட்டிக்கடை, டீக்கடை, சலூன், கிராமத் திண்ணைகள், சாலையோர மதகுகள், வயல் வரப்புகளில் சாதாரணமாகக் காணலாம். இன்றும் தன் மனைவி, மகளுடன் கிராமத்தில் சிறிய ஓலைக்குடிசையில் தான் வசிக்கிறார். அகில இந்திய அளவில் இந்தப் பெருமையைப் பெற்றவர் இவர் ஒருவரே. (உலக அளவிலும் இருக்கலாம்) நன்கு கல்வி பெற்றுள்ள இவர் மனைவி அரசு வேலைக்கு நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றார். 'தேர்வில் வென்று வேலைக்குச் செல்! சிபாரிசு செய்ய மாட்டேன்' என்று அமைச்சர் சொல்லி விட்டார். நேர்முகத் தேர்வுகள் தொடர்கின்றன.

ஏ.வி. சுப்பிரமணியன் (காங்கிரஸ்)

காரைக்கால் (தெற்கு) தொகுதி

முதல்முறையாகப் புதுவை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமே துணைசபாநாயகராகப் பொறுப்பேற்றுள்ள இவர் மக்களால் ஏ.வி.எஸ். என்று



அன்புடன் அழைக்கப்படுகிறார். சட்டமன்றப் பணிகள் இல்லாத நாட்களில் தொகுதி மக்கள் மத்தியில் அவர்கள் குடும்பச் சுக துக்கங்களில் பங்குபெறுவதையே தலையாய பணியாகக் கொண்டுள்ளார். பொறியியல் துறையில் பட்டம் பெற்றவர்.



வி.எம்.சி.வி. கணபதி
(அ.இ.அ.தி.மு.க.)
நிரவி – திருமலைராயன்பட்டினம் தொகுதி

முதல் முறையாகச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இவர், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பிலும் இருக்கிறார். இவரது தந்தையார் வி.எம்.சி வரதப்பிள்ளையும், சித்தப்பா வி.எம்.சி. சிவகுமாரும் இதே தொகுதியில் முன்பு சட்டமன்ற உறுப்பினராகி, புதுவை அமைச்சர்களாகவும் இருந்தவர்கள்.

அ. சௌந்தரரங்கன்
(திராவிட முன்னேற்றக் கழகம்)
திருநள்ளாறு தொகுதி

தொடர்ந்து 26 ஆண்டுகளாகப் புதுவை சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுவரும் இவர் தற்போது சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். இதற்கு முன் இரண்டு முறை, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். ஸ்கூட்டர்தான் இன்றும் இவரது வாகனம். இவரது அண்ணன் சௌந்தரசாமியும் ஒருமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். இவரது தந்தையார் இளை




யான்குடி சு. அரங்கசாமி நாயக்கர் பிரஞ்சிந்திய விடுதலைப் போராட்ட வீரராகவும், இந்திய விடுதலைக்கு உதவியவராகவும் திருநள்ளாறு மேயராகவும் விளங்கியவர். மணியாச்சி ரயில் சந்திப்பில் கலெக்டர் ஆஷ் துரையைச் சுடுவதற்கு வாஞ்சிநாத ஐயர் பயன்படுத்திய துப்பாக்கி அரங்கசாமி நாயக்கர் மூலமே அனுப்பப்பட்டது. வீர. சாவர்க்கர் எழுதிய 'எரிமலை' என்ற நூலைத் தமிழில் ரகசியமாக அச்சிட்டு மயிலாடுதுறை (மாயூரம்) சந்திப்பு வரை கொண்டு சென்று கொடுத்தவர் அவரே. தமிழுக்குப் புதிய இலக்கணநூல் வெளியிட்டுள்ளார் அரங்கசாமி நாயக்கர். தமிழ் உயிர் எழுத்து 'ஈ'யை 'இ' என்று மாற்றியுள்ளார் அதில்.

பி.ஆர். நளமகாராசன்
(சுயேச்சை)
கோட்டுச்சேரி தொகுதி

தற்போது கோட்டுச்சேரி தொகுதி சுயேச்சை எம்.எல்.ஏ.வாக இருக்கும் திரு. பி.ஆர். நளமகாராஜன் கோட்டுச்சேரிவாசி, இவர் தன் தொகுதி மக்களுக்கு அரும்பணி ஆற்றி வருகின்றார். ஏழை எளிய மக்களின் திருமணத்திற்குத் தாலி செய்து கொடுக்கின்றார். ஜாதி, மத பாகுபாடின்றி எவர் அழைத்தாலும் எல்லா விசேஷ காரியங்களுக்கும் செல்கின்றார். புயல் மழை காலங்களில் அரசு ஆதரவு அளிக்குமுன்னரே இவர் வலிய விரைந்து செயல்பட்டு பண உதவி, வேட்டி, புடைவை, துண்டு கொடுத்து உதவி புரிகின்றார். ஏழை பள்ளி சிறுவர், சிறுமியர்க்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குகிறார். யார் உதவி என்று வந்தாலும், ஓட்டு போட்டவர்கள், போடாதவர்கள் என்று பாரபட்சமின்றி நடந்து கொள்கின்றார்.

இடத்தகராறு, நிலத்தகராறு, போன்றவற்றைத் தீர்த்து வைப்பதில் வல்லவர். உள்ளொன்று



வைத்து, புறமொன்று பேசாத பண்பாளரான இவர் எந்த ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டாலும் முடித்து விட்டுத்தான் உட்காருவார். இடையில் எந்த தடங்கல் வந்தாலும் சளைக்காதவர். இவர் காலத்தில்தான் கோட்டுச்சேரியில் ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளியாகவும், நடுநிலைப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாகவும் உருமாற்றம் கொண்டது. மேலும் பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கும் மண்டபத்தூர் போன்ற கடலோரக் கிராமங்களுக்கும் பஸ்-வசதி செய்து கொடுத்தார்.

அரசியலில் பலர் சம்பாதிக்க கேவலமாக செல்கையில் இவர் ஒருவர் மட்டுமே தன் சம்பாத்தியத்தின் ஒரு பகுதியை ஏழை மக்களுக்குச் செலவிடச் சென்றிருக்கிறார்.

தன் தேர்தல் வாக்குறுதிகளை பெரும்பாலும் நிறைவேற்றித் தன் தொகுதியின் அனைத்து பகுதிகளுக்கும் குழல்விளக்கு வசதிகளை அளித்துள்ளார்.

ஏழை எளியோரின்பால் அன்புள்ளம் கொண்ட இவர் தம் மக்கள் ஒரு நாளாவது வயிறார உண்ண வேண்டுமென்கின்ற நோக்கத்தில் வருடா வருடம் தன் பிறந்த நாளை சிறப்பான முறையில் கொண்டாடி ஏழை, பணக்காரனென்கின்ற பேதமின்றி சமபந்தி போஜனம் செய்விக்கின்றார்.

பெரிய தொழிலதிபராக இருக்கும் இவர் தன் அரசியல் வாழ்க்கைக்கு இடையூறு இல்லாமலிருக்க பஸ் கம்பெனியை தனது மகன் திருமுருகனிடம் ஒப்படைத்துவிட்டு, வேறு தொழில்களுக்குச் சிறந்த நிர்வாகிகளைப் போட்டுவிட்டு மக்களுக்குத் தொண்டு செய்கின்றார். இவரை அண்டியவர்களை உயரச் செய்திருக்கின்றார்; ஆனால் தாழச் செய்ததில்லை.

நலச் சங்கத்திற்கும், நற்பணி மன்றங்களுக்கும் பெற்றோர் சங்கத்திற்கும் தலைவராக இருந்து சீரிய தொண்டாற்றி வருகின்றார். தன் செல்வாக்கால் போட்டி பொறாமைகளில் வாழும் இவர், தன் உயர்விற்கு அதுவே ஊக்கமென்று கருதுகிறார்.

ஏழை எளிய மக்களுக்கு வாரி, வாரி வழங்குவதால் அவர்கள் மனதில் இன்னொரு எம்.ஜி.ஆராக இருக்கும் இவர் மக்களால், "அண்ணன்" - என்று அழைக்கப்படுகின்றார்.

இவரது தொண்டும், தொண்டுள்ளமும் மேன்மேலும் வளர, சிறக்க வாழ்த்துகள்.

ஏ.எம்.ஹெச். நாஜிம் (தி.மு.க.)

காரைக்கால் (வடக்கு) தொகுதி




முதன்முறையாகத் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினராகியுள்ள இவர் இதற்குமுன் புதுவை சட்டமன்ற நியமன உறுப்பினராக இருந்துள்ளார். மிகவும் இளவயதில் சட்டமன்ற உறுப்பினரானவர். தொகுதி மக்களின் சுக துக்கங்களில் பங்குகொள்பவர். கதை, கவிதை எழுதுவதில் ஆர்வமுண்டு. நேரமில்லை.

தகவல்: இரா. பகவானந்ததாசன், திருநள்ளாறு

படம் உதவி:
ஜி.கே. நாராயணசாமி
வேலன் ஸ்டூடியோ, காரைக்கால்

சோகம்

காரை கலைபாசி



நிலவு
மேயாத வானம்!
மீன்கள்
நீந்தாத கடல்!
குழந்தை
கடிக்காத மார்பகம்!
திலகம்
தீண்டாத நெற்றி!
எல்லாம்... எல்லாமே
ஒற்றுமையாய் உச்சரிக்கும்
ஒரே சொல்... சோகம்!

பி. மாத்யூ சாமுவேல்

1995 மார்ச் 20ஆம் தேதி முதல் காரைக்கால் மண்டல நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளவர் பி. மாத்யூ சாமுவேல்.

காரைக்கால் நகர வளர்ச்சியுடன் அடிப்படை வசதிகளும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்புடன் செயல்படும் பி. மாத்யூ சாமுவேலைச் சந்தித்தோம்.

"தொழில் வளர்ச்சி, நகர மேம்பாட்டுத் திட்டங்கள், குடிநீர் வசதி, ஊரக - நகர வளர்ச்சியுடன் சுற்றுலா பயணிகளின் வருகைக்கும் இப்போதிருக்கும் வசதிகள் போதுமானதாக இருந்தாலும் இன்னும் நிறைய - நன்றாக செய்ய வேண்டும்.

"அடுத்த ஐந்து வருடங்களில் மக்களுக்கு இந்த வசதிகள் போதுமானதாக இருக்காது. பத்து வருடத்திற்கானத் திட்டத்துடன் செயல்பட வேண்டும்."

"கடற்கரை சாலையை ஒட்டி ஏரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். திறந்தவெளி திரையரங்கு கட்டுகிற திட்டமும் இருக்கிறது. கலை விழாக்கள் நடத்தி கலையை வளர்க்க வேண்டும். இசை விழாக்களும் நடைபெற உள்ளன" என்ற மண்டல நிர்வாக அதிகாரி பி. மாத்யூ சாமுவேல் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதி மருத்துவ வசதி செய்து தருவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

காரைக்காலிலிருந்து வெளிவரும் இதழ்கள்

அறிவே துணை - ஆசிரியர். கே. பாலகங்காதரன்

அரசகட்டளை - ஆசிரியர். யூ. இராமச்சந்திரன்

அன்புள்ள ஆசிரியருக்கு - ஆசிரியர். கே.எஸ். கணபதி சுப்பிரமணியன்

வாழ்க வளர்க! - ஆசிரியர். மங்கையர்க்கரசி கணேசன்

இலக்கியத் தம்பதியின் இலங்கைப் பயணம்



காரைக்கால் அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர்களாக விளங்கும் திரு மு. சாயபுமரைக்காயர், திருமதி சா. நசீமா பானு தம்பதியர் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானவர்கள். மு. சாயபு மரைக்காயர் 45 வயதுக்குள் கதை, கவிதை, கட்டுரை, நாடகம், அறிவியல், மருத்துவம், நகைச்சுவை, பொன்மொழிகள் தொகுப்பு, ஆய்வுக்கோவை என பல்வேறு துறைகளிலுமாக 61 நூல்களை எழுதியுள்ளார். திருமதி. சா. நசீமா பானு 8 நூல்களையும் அவர்களது மகள் செல்வி ஃபாத்திமா யாஸ்மின் 13 வயதில் கவிதை நூலும் வெளியிட்டிருக்கிறாள். சாயபு மரைக்காயர் பெற்றுள்ள விருதுகளும், முதல் பரிசுகளும், தங்கப் பதக்கங்களும், பட்டங்களும் விரிக்கின் ஒரு முழு நூலளவுக்கு இருக்கும். அவரது தமையனார் கவிஞர். இறையடியான் கவிதை நூலுக்காக இரண்டுமுறை தமிழக அரசின் பரிசு பெற்றவர். அண்மையில் மறைந்தார். அவர்களது பாட்டனார் மு. சாயபு மரைக்காயர் அந்தக் காலத்தில் அமுதகவியாகப் புகழ்பெற்றவர். இவரது உறவினர்களில் மேலும் சிலர் நூல்கள் வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் தம்பதி சிறந்த பேச்சாளர்களுமாவர். தமிழகத்திலும், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து நாடுகளிலும் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளனர். பட்டிமன்றத் தம்பதி என்ற பட்டம் பெற்றவர்கள். கடந்த ஆண்டு இருவரும் இலங்கை சென்று இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுப் பட்டமும் விருதுகளும் பெற்று வந்துள்ளனர். அவர்களுடன் ஒரு நேர்முகம்.

கே : இலங்கை இலக்கியப் பயண அழைப்பு உங்கள் இருவருக்கும் எப்படிக் கிடைத்தது?

ப : இலங்கையிலுள்ள முனைவர் உவைஸ் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் பல நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் உள்ள அறிஞர். பல பல்கலைக் கழகங்களில் விஸிட்டிங் ப்ரொஃபஸர் ஆகப் பணியாற்றுகிறார். அவருக்கு இலங்கை அரசாங்கம் விருது வழங்கும் நிகழ்ச்சியில் பாராட்டுரைக்க அவரது விருப்பப்படி அரசு எங்களுக்கு அழைப்பு அனுப்பியது. மூன்றே நாட்களில் விஸா கிடைத்து நாங்கள் புறப்பட்டோம். தனிப்பட்ட சங்கங்கள், மன்றங்கள், நிறுவனங்கள் அழைத்துத்தான் தமிழகத்திலிருந்து இதுவரை பலர் சென்றுள்ளனர். அரசு அழைப்பின்பேரில் சென்ற பெருமை எங்களுக்குத்தான் கிடைத்தது என்று அங்கே குறிப்பிட்டார்கள்.

கே : அங்கே எந்தெந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டீர்கள்?

ப : இலங்கை அரசின் முஸ்லிம் சமயப் பண்பாட்டுத் துறை அமைச்சர் பேராசிரியர் உவைஸுக்கு நடத்திய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டோம். காலையிலும் மாலையிலும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இலக்கியக் கூட்டங்களில் முப்பது இடங்களில் பேசினோம். வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டோம். தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்களில் எங்கள் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே வெளியிட்டும், எங்கள் பேச்சுகளை வெளியிட்டும் பெருமைப்படுத்தினார்கள்.

கே : உங்களுக்கு அங்கே வரவேற்பு எப்படி?

ப : விமானத்திலிருந்து இறங்கியது முதல் விமானம் ஏறும்வரை நாங்கள் பதினைந்து நாட்களும் 'அரசாங்க விருந்தினர்' ஆக இருந்தோம். தங்குமிடம், உணவு, பிறருடன் சந்திப்பு, பயணம், பார்க்குமிடம், இலக்கியக் கூட்டம் ஆகிய அனைத்தும் அரசுத் திட்டப்படி குறித்த நேரத்தில் நிகழ்ந்தன. கொழும்பு, கண்டி, மாத்தளை போன்ற இடங்களுக்குச் சென்றோம்.

கே : அங்கே உங்களுக்குக் கிடைத்தவற்றுள் மிகவும் பெருமைக்குரியதாகக் கருதுவது எதை?

ப : பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் இரவு விருந்தில் கலந்துகொண்டோம். அரசின் சார்பில் தாஜுல் கலாம் (கல்வி அரசர்) 'நஜ்முல் கலாம்' (கல்வித் தாரகை) என்ற பட்டங்களை எங்களுக்கு வெள்ளிப்பட்டயத்தில் பொறித்து வழங்கினார்கள். நாங்கள் கொண்டு சென்றிருந்த நூல்கள் அனைத்தையும் அங்குள்ள இலக்கியச் சங்கத்தினர் விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்.

இலங்கைப் பயணம் மேற்கொண்ட இலக்கியத் தம்பதியை வாழ்த்தி விடைபெற்றோம்.

சந்திப்பு :
இரா. பகவானந்ததாசன்
காரை. ஆடலரசன்

"எப்போது வருவான்...?"

காரை ஆடலரசன்

சுமதிக்கு எதிரிலிருந்த அந்த உயிருள்ள காகிதம் காற்றில் படபடத்தது.

அவள் அதையே வெறித்தாள்.

சென்ற நிமிடம்வரை வெற்றுத் தாளாக இருந்த அந்தக் காகிதத்திற்கு இப்போதுதான்... உயிர் வந்தது.

துரைவேலு எப்போது வந்தானோ சுமதிக்குத் தெரியாது. அவள் கூடத்தில் வாசலுக்கு முதுகு காட்டி முருகனின் புகைப்படத்தைக் கையில் பிடித்தபடி உட்கார்ந்து ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சுமதீ!.." - துரைவேலு குரல் கேட்டதும்தான் திடுக்கிட்டு எழுந்தாள். அலறிப்புடைத்து நின்றாள். அவளையறியாமலேயே கை பின்னால் சென்று புகைப்படத்தை மறைத்தது. கண்களில் பயம் மின்னியது. உடல் குப்பென்று வியர்த்து, கொஞ்சம் நடுங்கியது.

துரைவேலு கோபம் அடக்கி நிதானமாக அவள் எதிரில் வந்து அமர்ந்தான்.

"காலம் உன் காயத்தை மாத்தும்னு நெனைச்சேன். மாத்தலை. இன்னும் நீ அவனை மறக்கலை. எவ்வளவு தூரத்துக்கு அவன்மேல அன்போ, ஆசையோ வைச்சிருந்தா, அவனை இன்னமும் மறக்காமலிருப்பே!? இனிமேலும் அவனை நீ மறப்பேங்கிற நம்பிக்கை எனக்கில்லை, சுமதி! இதுக்கு மேலேயும் நம்ப பந்தத்தால உன்னைக் கட்டிப்போட நான் விரும்பலை. நீ விருப்பப்பட்டா விவாகரத்து வாங்கிக்கலாம். இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சுதான் நான் முன் ஜாக்கிரதையா ஒரு பத்திரம் வாங்கி வைச்சிருக்கேன். அதுல கையெழுத்துப் போட்டுத் தர்றேன். நீ எப்போ வேணும்னாலும் இந்த நிமிஷத்திலிருந்துகூட - விவாகரத்து வாங்கிக்க. உன் விருப்பப்படி செஞ்சிக்க.." -

அவளை அமைதியாகப் பார்த்து நிறுத்தி நிதானமாகச் சொன்ன துரைவேலு, அருகிலிருந்த மேஜை டிராயரை இழுத்தான். அதன் அடியிலிருந்து பத்திரத்தை எடுத்தான். அதில் கீழே கையெழுத்துப் போட்டு அதன்மீது ஒரு பேப்பர் வெயிட்டை வைத்துவிட்டு நிச்சலனமாய் வெளியே நடந்தான்.

சுமதி உறைந்து நின்றாள்.

'இவ்வளவிற்கும் காரணம் இவன்.. முருகன்! தன் வாழ்வில் புயலாக நுழைந்து மனத்தில் இடம் பிடித்தவன், அப்படியே சரிந்து உட்கார்ந்தாள். அந்தப் பத்திரத்தையே வெறித்தாள்.

"அம்மா சுமதி! உனக்கு நல்ல வரன் பார்த்திருக்கேன்!" - அப்பா கங்காதரன் கூடத்தில் வந்து உட்கார்ந்து மகிழ்ச்சியுடன் கூவிய போது, சுமதி ஆவலை அடக்கிக் கொண்டு அருகில் வந்தாள்.

"பெரிய இடம்மா. பையன் மெக்கானிக். ஓ.என்.ஜி.சியிலே வேலை செய்றான். பேர் முருகன். தரகர்கிட்டே சொல்லி வைச்சிருந்தேன். இப்பதான் விவரம் சொல்லிக் குடுத்துட்டுப் போனார்." - கேபினெட் அளவு புகைப்படத்தை அவளிடம் நீட்டினார்.

அந்த வண்ணப் புகைப்படத்தில் இளைஞன் மூக்கும் முழியுமாக அழகாக இருந்தான். பார்த்ததுமே பிடித்துப் போக மனதில் சிக்கென்று ஒட்டிக் கொண்டான்.

"என்னம்மா! மாப்பிள்ளையைப் பெண் பார்க்க வரச் சொல்லவா?" - கங்காதரன் முகத்தில் குறுநகையுடன் கேட்டார்.

"ம்ம்.." - சுமதி நாணத்துடன் உள்ளே போனாள்.

இந்த அழகான வரன் அமைய வேண்டுமென்று நினைத்துக் கொண்டு அறையில் புகைப்படத்தை நெஞ்சில் அணைத்துக் கொண்டாள்.

பெண் பார்க்க அவன், அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, தரகர்... வந்திருந்தார்கள்.

மாப்பிள்ளை புகைப்படத்தை விட நேரில் இன்னும் அழகாக, வசீகரமாக இருந்தான்.

பெண் வீட்டில் எல்லாருக்கும் பிடித்துப் போக... லௌகிகப் பேச்சு தொடர்ந்தது.

"எங்களுக்கு வரதட்சணையில விருப்பம் கிடையாது. அதனாலே நாங்க அது வேணும், இது வேணும்னு ஆசைப்படலை. பையன் மாசம் இரண்டாயிரத்தி எண்ணூறு ரூபாய் சம்பாதிக்கிறான். உங்களுக்கும் குறை இல்லாம எங்களுக்கும் குறை இல்லாம நீங்களே செஞ்சு கல்யாணத்தை முடிங்க.." - மாப்பிள்ளை அண்ணன் துரைவேலு பேசினான்.

"ஆமாம் சம்பந்தி!" - அவன் அப்பா தலையசைத்தார்.

இதற்குமேல் பெண்ணைப் பெற்றவர்களுக்கு ஓர் இடம் கிடைக்குமா? அவள் அப்பாவும் சம்மதித்து அப்போதே தாம்பூலம் மாற்றிவிட்டார்கள்.

மனம் நிறைந்த மாப்பிள்ளை! சுமதியால் நம்பவே முடியவில்லை. மனம் ஆகாயத்தில் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தது.

பத்து நாள்களில் சடங்கு சம்பிரதாயங்களுடன் இவள் வீட்டிலேயே நிச்சயதார்த்தம் நடந்து திருமணம் உறுதிபட... சுமதிக்குப் பூமியில் கால் பதியவில்லை.

பெட்டியில் பத்திரப்படுத்தி இருந்த முருகன் புகைப்படத்தை அடிக்கொரு தரம் எடுத்துப் பார்த்து மகிழ்ந்தாள். வீட்டில் எல்

லாரும் தூங்கிய பிறகு அறையில் விளக்கைப் போட்டுக்கொண்டு...

"ஐயோ.. என் கண்ணு!..." - புகைப்படத்தில் கன்னத்தைத் திருகினாள்.

"மூஞ்சைப்பாரு.." - செல்லமாக முறைத்தாள்.

"என்ன முறைக்கிறே?" - அவளாகவே பேசிக் கொண்டாள்.

"என்னம்மா இது. கல்யாணத்துக்கு முன்னாடியே கலாட்டா?" - ஒருநாள் இரவு கங்காதரன் வந்து ஜன்னலில் நின்று கேட்டார்.

சுமதிக்கு வெட்கத்தில் முகம் சிவந்தது.

விடியற்காலை முகூர்த்தத்திற்கு நாலு மணிக்கு 'மாப்பிள்ளையைக் காணோம்!' - மண்டபம் அமர்க்களப்பட்டது.

"மாப்பிள்ளை ரெண்டு மணிக்கே எவகூடவோ ஓடிட்டாராம்!" - தோழி வந்து இவள் காதில் இடியை இறக்கினாள். இவள் அதிர்ந்து அறையை விட்டு வெளியே வந்தபோது...

"ஒண்ணும் வேணாம். நீங்க செய்யறதைச் செய்யுங்கன்னு சொல்லும்போதே இதுல ஏதோ வில்லங்கம் . இருக்கும்னு நெனைச்சேன்!"

"பையன் ஒருத்தியைக் காதலிக்கிறான்னு தெரிஞ்சும் ஏன் அவனைப் பிடிவாதம் பிடிச்சு பொண்ணு பார்க்க வந்தீங்க? கல்யாணம் வைச்சீங்க?.."

"இன்னைக்கு அவகூட ஓடி எல்லார் முகத்திலும் கரியைப் பூசினது மட்டுமில்லாம எங்களை அவமானப்படுத்தி ஒரு பெண்ணோட வாழ்க்கையைக் கெடுத்துட்டீங்களே. மணமேடை வரைக்கும் வந்தவ திரும்பினா எவன் கட்டிக்குவான்?"

"எங்க பொண்ணுக்கு நீங்கதான் வழி பண்ணனும். இல்லேன்னா கொலையே நடக்கும்!"

பெண்ணைச் சார்ந்த கூட்டத்தினர் எகிறினார்கள். துரைவேலுவும், அவன் அப்பாவும் நடுவில் நின்று பரிதாபமாக விழிபிதுங்கினார்கள்.

சுமதிக்கு மயக்கம் வராத குறை.

"ஐயா! செஞ்ச செலவெல்லாம் போகட்டும். இங்கே இந்தப் பெண்ணுக்கு முறைப் பையன் இருந்தா கட்டிவையுங்க. நாங்களே முன்நின்று நடத்துறோம். மனசார வாழ்த்துறோம். ஐயா! பையன் இப்படி செய்வான்னு நாங்க கனவுலகூட நெனைக்கலைய்யா". - துரைவேலு கையெடுத்துக் கும்பிட்டான். கெஞ்சினான். அவன் அப்பா மரம் மாதிரி நின்றார்.

அவள் அதிர்ஷ்டம் அப்படி ஒருவருமில்லை. இருந்த இரண்டொருவரும் திருமணமாகி பெண்டாட்டி பிள்ளையுடன் நின்றார்கள்.

"விவரம் தெரிஞ்சு வெளையாடநீங்களா?" - ஒருத்தர் எகிறி துரைவேலு சட்டையைப் பிடித்து விட்டார்.

"ஆளில்லேன்னா இவனைத் தாலி கட்டச் சொல்றேன்யா." - பதறிப்போன அவன் அப்பா இடையில் புகுந்து கையெடுத்துக் கும்பிட்டார்.

"டேய்! கெழவன் புத்திசாலி தாண்டா. பொண்டாட்டி செத்தவனுக்குப் பொண்ணு தேட இப்பிடிப் பண்ணிட்டான்டா.." - வேறொருத்தர் அவர்மீது பாய்ந்தார்.

"ஐயா! ஐயா! நாங்க அப்படி நெனைக்கலை. அப்படி தரங்கெட்டபுத்தியும் எங்களுக்கில்லை. பையன் கீழ்ச் சாதிக்காரப் பொண்ணைக் காதலிச்சான். மிரட்டினா சரியாப் போயிடுவான்னு தட்டிவைச்சு ஏற்பாடு செய்தோம். இப்பிடிப் பண்ணிட்டான்யா. தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டான்யா.." அவர் கதறி கூனிக் குறுகினார்.

வழி இல்லாமல் கடைசியாக ஒரு வழியாய்ச் சமாதானமாயிற்று. துரைவேலுவிற்கும், சுமதிக்கும் சம்மதமில்லாமலேயே திருமணம் நடந்தது.

சுமதி முதலிரவில் இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள். கலவரத்துடன் உட்கார்ந்திருந்த துரைவேலு ரொம்ப நேரத்திற்குப் பிறகு மெல்லப் பேசினான்:

"சுமதி! நம்ம விருப்பமில்லாமலேயே விதி நம்மைச் சேர்த்து வைச்சுட்டுது. மகன் ஓடிப்போன துக்கத்தைவிட மண்டபத்துல பட்ட அவமானம் அப்பாவை உருக்குது. நடந்தது நடந்து போச்சுன்னு நீ பழசை மறந்துட்டு சந்தோஷமா இருந்தா, அப்பா தேறுவாருன்னு என் மனசுக்குப்படுது. அப்படி இருக்கிறதுதான் நல்லது. அதுதான் எங்களுக்கு நீ செய்யிற பெரிய உதவி. இன்னொன்னு. உன் விருப்பமில்லாம நான் உன்னைத் தொடமாட்டேன். இது சத்தியம்." - சுருண்டு படுத்தான். சொன்னபடி நடந்தான்.


சுமதிக்கு மனம் சமாதானமாகவில்லை. முருகனின் பிரேமை அழியவில்லை. அவன் செய்து விட்டுப் போன துரோகம் நெஞ்சிலிருந்து நீங்காமல் பிணமாக நடமாடினாள்.

இது அவள் மாமனாருக்கே புரிந்து போயிற்று.

"அம்மா சுமதி! தவறெல்லாம் என் சின்ன மகன் முருகன் மேலதாம்மா. தான் காதலிச்ச பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு கண்டிச்சுச் சொல்லி இருந்தா இந்த விபரீதம் நடந்திருக்காதும்மா. செய்யாதது அவன் தவறு. அதட்டினதும் அடங்கிட்டான். இல்லை. அடங்கினது மாதிரி நடிச்சு எங்களைப் பழிவாங்கிட்டான். உன்னை வேறு ப்கடைக்காயாய் ஆக்கிட்டான். என் பெரிய புள்ளை துரைவேலு நல்லவன்மா. பொண்டாட்டி செத்தும் வேறொரு பெண்ணை நெனைக்காத உத்தமன்மா! தயவு செய்து அவன் மனசை நோகடிக்காதேம்மா! என் மனசு தாங்காதம்மா!" - பிள்ளைக்காகக் கண் கலங்கினார்.

இந்த நினைவு வந்ததும்தான் சுமதி பொட்டில் அடித்த அடியாய் துணுக்குற்று நிமிர்ந்தாள்.


'அதானே! முருகன் அப்படிச் சொல்லி இருந்தால் யார் என்ன செய்திருக்க முடியும்? அவன் வஞ்சகன். காதலில் கோழை. தான் விரும்பியவளுக்கு வாழ்வு கொடுக்க தன்னைப் பலியாக்கியவன். இது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்! ஆனால்... துரைவேலு அப்படி இல்லை. மனைவி இறந்தபிறகு மாற்றாளை நினைக்காமல் மறுமணமே



வேண்டாமென்றிருந்தவன். ஒரு பெண் பாதிக்கப்படுகிறாள் என்கிறபோது கொண்ட கொள்கையை விட்டு வாழ்வு கொடுத்தவன். இதற்கு எவ்வளவு பெரிய மனசு வேண்டும்! அது மட்டுமில்லாமல் 'உன் விருப்பமில்லாமல் தொடமாட்டேன் சுமதி!' என்று சொன்னது மட்டுமின்றி... சொன்னபடி வாழ்பவன். பிறர் மனது அறிந்தவன். எப்பேர்ப்பட்ட உத்தமமான குணம்...' - நினைக்க நினைக்க அன்றைக்கு அவர் சொல்லிப் புரியாதது இன்றைக்குப் புரிந்தது.

'பிறர் மனம் படிக்கும் அறிவு எவ்வளவிருந்தால் இப்படியெல்லாம் நடக்கலாம்னு யோசிச்சுத்தான் பத்திரம் வாங்கி வைச்சிருக்கேன்' என்று சொல்லி வாங்கி வைத்தவன். இவனையா மனசு புண்பட வைத்தோம்?! வஞ்சகனை நினைத்தோம்?!' - சுமதி மெல்ல எழுந்தாள். கையிலுள்ள முருகன் புகைப்படத்தையும், பத்திரத்தையும் சேர்த்துக் கிழித்தாள். கண்கள் வாசலைத் தேடின.

துரைவேலு எப்போது வருவான்?



தவிப்பு

இ.ஜே.தீன்

அந்தப் பேருந்தின் கடைக் கோடி இருக்கையில் அமர்ந் திருந்த கதிரேசனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

கையிலிருந்த பஸ் டிக்கெட் டைப் பத்தாவது தடவையாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டார்.

டிக்கெட்டின் பின்புறம் கண் டக்டர் ஒன்றுமே குறிக்கவில்லை.

நிமிடத்திற்கு நிமிடம் கதிரேச னுக்குப் படபடப்பு அதிகமாகிய வண்ணமிருந்தது.

கண்டக்டர் சொல்லி வைத்தாற் போல் முன் பக்கமே நின்று கொண்டிருந்தார்.

கண்டக்டர் வேண்டுமென்றே அப்படிச் செய்வதாகவே கதி ரேசன் எண்ணினார்.

இருக்கையிலிருந்து மெல்ல எழுந்து அமர்ந்து எழுந்து முன் பக்கம் அவர் எட்டி எட்டிப் பார்க்க, பக்கத்து இருக்கைப் பயணி எரிச்சலடைந்து சீறினார்.

"யோவ் பெரியவரே! ஏன் இப்படி குட்டி போட்ட பூனை மாதிரி அல்லாடுகிறீர்?"

இருக்கையில் சாய்ந்தார்.

அந்தப் பேருந்து ஒவ்வொரு நிறுத்தத்திலும் நின்று, நான்கு பேரை இறக்கி, பத்து பேரை ஏற்றி, ஒருபுறம் சாய்ந்தவாறு மெல்ல ஊர்ந்தது.

கண்டக்டருக்கு மிகவும் தாராள மனசு!

எவ்வளவு பேர் ஏறினாலும், அவர் இடம் இல்லையென்று சொல்வதே இல்லை!

கதிரேசனின் மனம் பலவாறாக அல்லல்பட்டது; அலைக்கழிந்தது.

'கண்டக்டர் ஞாபகம் வைத் திருப்பாரோ... அல்லது மறந் திருப்பாரோ? 'என்ன பெரியவரே, உன் பணத்துக்குப் பாக்கியை அப் போதே கொடுத்து விட்டேனே...' என்று சொல்லிவிடுவாரோ? கையில் வேறு பணமும் இல் லையே... கலக்கத்தால் கையைப் பிசைந்தார்.

அவருடைய துரதிருஷ்டம் என்னவென்றால், அவர் கையில் காசில்லாத போதுதான் வேண்டி யவர்கள் வீட்டில் எல்லாம் ஏதாவ தொரு விசேஷம் நடக்கும்.

இப்போது பேரளத்தில் உற வினர் பேரனுக்குக் காதுகுத்து வைபவம். போகாவிட்டால் பொல லாத குறை வந்து சேரும். அவ ருக்குப் பென்ஷன் பணம் வர பத்து நாளாகும்.

தெரிந்த ஒருவரிடம் பத்து ரூபாய் கைமாற்று வாங்கினார்.

போக வர பஸ்ஸிற்குப் போக ஐந்து ரூபாயை மொய் எழுதி விட்டு, ஓசைப்படாமல் திரும்பிவிட வேண்டும் என்பதே அவரது திட்டம்.

திட்டமெல்லாம் சரிதான்.

அவர் செய்த மாபெரும் தவறு என்னவென்றால், அந்த அதி காலை நேரத்தில் பத்து ரூபாய் நோட்டோடு பஸ்ஸில் ஏறினது தான்.

டிக்கட்டைக் கிழித்துக் கொடுத்த கண்டக்டர், 'பாக்கிப் பணத்தை அப்புறமா வாங்கிக் குங்க' என்றவாறு நகர்ந்து விட்டார்.

அந்த நிமிடத்திலிருந்தே கதி ரேசன் கலவரமடையத் தொடங்கி விட்டார்.

அப்பாடா!

வெகு நேரத்திற்குப் பிறகு கண்டக்டர் அவரருகே வந்தார். கதிரேசன் சடக்கென எழுந்தார்.

"தம்பீ... பாக்கிப் பணம்...?"

"ஞாபகம் இருக்கு பெரிய வரே... பேரளம்தானே இறங்கப் போறீங்க? அதுக்குள்ளார ஏன் துடிக்கிறீங்க? இறங்கறப்ப கொடுத்துடறேன்...." என்ற கண் டக்டர் மீண்டும் முன்பக்கம் சென்றுவிட்டார்.

கண்டக்டர் மறக்கவில்லை என்பது கதிரேசனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தாலும், கூடவே ஒரு சந்தேகமும் எழுந்தது.

'நாம் கொடுத்தது பத்து ரூபாய் என்பதை ஞாபகம் வைத் திருப்பாரோ... இல்லை... ஐந்து ரூபாய்தானே கொடுத்தீர்கள் என்று சொல்லிவிடுவாரோ?'

கதிரேசனின் குழப்பம் நீண்டு கொண்டே போனது.

ஒரு வழியாக ஆடி அசைந்து பேருந்து பேரளத்தையடைந்தது.

முக்கால்வாசி கூட்டம் குறைந்து விட்டது.

படியோரம் இறங்கி நின்ற கண்டக்டரை அணுகினார் கதி ரேசன். கண்டக்டர் எதுவுமே கேட் காமல் பதினெட்டு ரூபாயை எண்ணிக் கொடுத்தார்.

பணத்தை வாங்கிக்கொண்ட கதிரேசன், ஒரு விநாடி இமை யுயர்த்தி யோசித்தார். மனம் சமாதானமடைய, வேகமாக இறங்கி விடுவிடென நடந்தார்.

தான் கொடுத்தது பத்து ரூபாய் தான் என்பதும், தனக்குச் சேர வேண்டியது எட்டு ரூபாய்தான் என்பதும், அவருக்கு நன்றாகவே ஞாபகம் இருந்தது. ஆனாலும், ஏனோ அந்த உண்மை அவர் வாயை விட்டு வெளியே வர மட்டும் மறுத்துத் தவித்தது. ●●●



பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா

வினா விடை அரங்கம்

பிரபல தொழிலதிபர் பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா விடையளிக்கிறார்

❑ **சி.பி. ராஜு; கல்பாக்கம்.**

ஆன்மிகத்தில் அழுத்தமான நம்பிக்கையுடைய தாங்கள் இன்றைய அவல நிலைகள் விரைவில் நீங்குமெனக் கருதுகிறீர்களா?

அவல நிலைகள் எல்லா யுகங்களிலும், எல்லாக் காலங்களிலும் இருந்தவைதான்! இதைவிட, மோசமான காலங்கள் இருந்ததையும் கால வரலாறுகள் காட்டுகின்றன. இந்தச் சூழ்நிலையிலும் ஆன்மிகத்தில் அழுத்தமான நம்பிக்கையோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

❑ **தாமரைச் செல்வி சுந்தர்; திருபுவனம்.**

வாழ்வில் மனத் திருப்தி ஏற்பட வழி என்ன? தாங்கள் திருப்தியுடன் இருந்து வருகின்றீர்களா?

சுயநலத்தை மட்டுமே கருதாமல் தொழிலையோ, வியாபாரத்தையோ ஏன் வாழ்க்கையையோ அமைத்துக் கொள்வதால் மட்டுமே மனத் திருப்தி ஏற்படும். நான் மிகுந்த மனத் திருப்தியுடன்தான் இருக்கிறேன்.

❑ **அ. சுப்பிரமணியம்; நட்டுவம்பாளையம்.**

ஆசிரியர் தொழிலிலிருந்து இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெற உள்ளேன். ஓய்வு பெற்ற பின்னர், கிடைக்கும் கணிசமான தொகையை முதலீடு செய்து தொழில் செய்ய ஆர்வமாக உள்ளேன். என்ன தொழில் செய்யலாம்?

தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர், உற்பத்தியாகும் பொருள் எந்த விலையில், எந்த அளவிற்கு விற்பனையாகும் என்பதை [Marketing] தீர ஆய்வு செய்தாக வேண்டும். தங்களைப் போன்றவர்கள், ஆசிரியர் தொழிலிலிருந்து, கடுமையான உழைப்பின் வழியே ஈட்டிய தொகையை மிகுந்த எச்சரிக்கையோடு முதலீடு செய்வது அவசியம். யூனிட்களில் [Unit Trust of India or other Mutual fund] தொகையை முதலீடு செய்வது, வங்கியைவிட ஈட்டுத் தொகை இலாபகரமாக அமையும்.

❑ **என். சுப்பிரமணியன்; சென்னை-33.**

தங்கள் தந்தையாரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தேன். (பெருந்தகை பி.ஏ.சி. ஆர்.) நாவல் படிப்பதைப் போல ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டேன். அரிய படிப்பினைகள் உள்ள அந்தப் புத்தகத்தை எல்லா நூல் நிலையங்களுக்கும் அனுப்ப இயலுமா?

நூல் நிலையங்கள் தோறும் அந்தப் புத்தகம் இடம் பெற, உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

❑ **மொனிகா சாந்தன்; கடலூர்.**

தீவிர எண்ணங்களால் எதிராளியைத் தாக்க முடியுமா? அது பற்றிய தங்கள் அனுபவம் அறிய விரும்புகிறேன்.

நமது அறிவாற்றல் கொண்டுதான் எதிராளியை வெல்ல முடியும்; வெல்லவும் வேண்டும். எதிராளியைத் தாக்க வேண்டும்- அழிக்க வேண்டும் - என்ற எண்ணங்களை வளர்த்துக் கொண்டால், நாம் அழிந்து போவோம்! இதிகாசங்களும்-புராணங்களும்-இலக்கியங்களும்- அப்படித்தான் நமக்கு அறிவுறுத்துகின்றன.

❑ **எஸ். பாரதி, கோட்டையூர்.**

வணக்கம். தங்களுக்குச் சிருங்கேரி மகா சுவாமிகள் 'குருபக்தமணி' எனச் சிறப்பு விருது அளித்ததாக அறிகிறேன். எந்த ஆண்டில்? எதற்காக?

சிருங்கேரி மகா சந்நிதானம் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மகா சுவாமிகள், தமக்குச் சிஷ்ய சுவீகாரம் எடுத்த நாளன்று, சிருங்கேரியில் 1973 ஆம் ஆண்டு 'குருபக்தமணி' என்ற பட்டத்தை எனக்கு வழங்கினார்கள். மூன்று தலைமுறைகளாக எங்கள்



சிருங்கேரி மகா ஸ்ரீ சுவாமிகள் ஆலைக்கு வருகைதந்து ஆசி அருளல்

குடும்பம் ஸ்ரீ சிருங்கேரி மகா சுவாமிகளிடத்து மிகுந்த குரு பக்தி வைத்திருந்ததைக் காரணமாகக் கொண்டு, பட்டமளித்தார்களென நான் கருதுகிறேன்.

❑ **பெ. கிருஷ்ணமூர்த்தி; எரகுடி.**

தங்களுக்குப் பிடித்த 'சுலோகம்' எது? அதனை எந்த நேரத்தில் பயன்படுத்துகிறீர்கள்?

'ஆதித்ய ஹிருதய' எனக் கூறப் பெறும் சூரிய பகவான் வழிபாடே எனக்குப் பிடித்த சுலோகம். காலை வேளையில் எங்கிருப்பினும் அதைப் பாராயணம் செய்து வருகிறேன்.

❑ **ஆர். சுப்பராவ்; திருக்கோவலூர்.**

அறிவியல் வழியே தொழிலியல் இயங்குவது நல்லதா? இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு தொழிலியல் இயங்குவது நல்லதா?

இறைவன் அருளால் அறிவியல் ஆற்றல் பெற்று, அதன் வழியே தொழிலியலை இயக்குவது ஏற்புடையது.

❑ **டி.என். ஸ்ரீனிவாசன்; சென்னை-43.**

பகவத் கீதையின் சுலோகங்களில் பெண்களைச் சிறப்பித்து ஒரு சுலோகம் கூடக் கிடையாது! ஏன்?

பகவத் கீதையின் அடிப்படையே - ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே எனும் அத்வைத தத்துவத்தை (இரண்டற்ற தன்மை) நமக்கு உணர்த்துவதற்காகத்தான். இதில் ஆண்-பெண் என்ற பேச்சுக்கே இடமில்லை.

❑ **அன்பின்செபா; கடையல்.**

தொழிலபதிபர்கள் - செல்வர்கள் ஆகியோருக்குக் கடவுள் பக்தி அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன?

தொழிலபதிபர்களும்- செல்வர்களும் அதிகமாகக் கடவுள் பக்தி உள்ளவர்களென நீங்கள் நினைப்பது, எனக்குச் சந்தோஷத்தை அளிக்கிறது!

❑ **ஏ. ஆர். ராமலிங்கம்; நாட்டரசன்கோட்டை.**

ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சிமிண்ட் உற்பத்தி இந்தியாவில் இல்லை! கட்டடங்களும் சிமிண்டால் உருவாக்கப்பட இல்லை. இன்னும் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் சிமிண்டின் நிலை என்னவாக இருக்கும்?

இந்தியாவில் சிமிண்ட் உற்பத்தியும் உபயோகிப்பும் கடந்த அறுபது ஆண்டுகளாக உள்ளன. பிற்காலத்திலும் சிமிண்ட் உபயோகம் தொடருமென்றே கருதுகிறேன்.

❑ **ஸுதா ராகவன்; சென்னை-1.**

பெண் குழந்தை பெற்றுக் கொள்வதைப் பெரும்பான்மையான பெற்றோர் விரும்புவதில்லை! காரணம் என்னவென்று தாங்கள் கருதுகிறீர்கள்?

நீங்கள் கூறுவதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பெற்றோர், தாம் பெற்ற பெண் குழந்தைக்கு நல்ல கணவன் துணை வேண்டுமென்றும், பிற்காலத்தில் புகுந்த வீட்டில் மகிழ்ச்சிகரமாக வாழ வேண்டுமென்றும் கவலைப் படுகின்றனர். அது இயல்புதான்! அதே சமயத்தில் ஆண்குழந்தை பிறந்தால், நல்ல மருமகளாக வாய்க்க வேண்டுமென்ற விருப்பமும், அப்பொழுதுதான் குடும்பம் ஒன்றுபட்டிருக்குமென்ற கவலையும் பெற்றோருக்கு ஏற்படுகிறது. ஆகையால், நல்ல குழந்தைகள் அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டுமே தவிர, ஆணாவிருப்பினும்- பெண்ணாயிருப்பினும் பெற்றோருக்குப் பொறுப்பு ஒன்றுதான்.



பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா - சுதர்சனம் அம்மையார்

❑ **மங்கை; மணச்சநல்லூர்.**

தங்கள் துணைவியார் சம்ஸ்கிருத பாஷையில் மிகுந்த பாண்டித்யம் உடையவர் என்றும், சமஸ்கிருத நூல்களைத் தொகுத்து, ஓர் அரிய நூல் நிலையத்தை இராஜபாளையத்தில் ஏற்படுத்தி உள்ளாரென்றும், அறிகிறேன். அது பற்றிக் கொஞ்சம் விவரம் கூறுங்களேன்.

துணைவியார் சம்ஸ்கிருத பாஷையில், மிகுந்த பாண்டித்யம் பெற்றவரெனக் கூற முடியாவிடினும், நிறைந்த ஆர்வமும் நெஞ்சார்ந்த ஈடுபாடும் கொண்டிருப்பவர். அந்த ஆர்வத்தாலும், ஈடுபாட்டாலும் சமீபத்தில் அவரது அன்னையார் பெயரில் 'ஸ்ரீமதி லிங்கம்மாள் சாஸ்திர பிரதிஷ்டா' என வேதாந்த ஆராய்ச்சி அமைப்பு ஒன்றை உருவாக்கி, தமிழ்-சம்ஸ்கிருதம்-ஆங்கிலம்- தெலுங்கு - இந்தி - ஆகிய மொழிகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அரிய வேதாந்த நூல்களை அமைப்பில் இடம் பெறுமாறு செய்துள்ளார். ஸ்ரீமதி லிங்கம்மாள் சாஸ்திர பிரதிஷ்டா நிலையத்தில், உறுப்பினர்கள் அமர்ந்து படித்துப் பயன்பெற உரிய வசதிகள் செய்யப் பெற்றுள்ளன.

❑ **மா. முத்தையன்; செங்கல்பட்டு.**

தர்மபுர ஆதீன கர்த்தர், தங்கள் தொழில் நிறுவனங்களில் பங்குத் தொகை போட்டிருப்பதாக அறிகிறேன்! தங்கள் காலத்திலா? அல்லது தங்கள் தந்தையார் காலத்திலா?

தந்தையார் காலத்தில், தர்மபுரம் மகா சந்நிதானம் சிறு தொகையை ஆசீர்வாதமாக முதலீடு செய்து உற்சாகப் படுத்தினார்கள்.



பெருந்தகை பி.ஏ.சி. ராமசாமி ராஜா

❑ சி.பா. சந்தான கோபாலகிருஷ்ணன்; வேலாயுதம்பாளையம்.

இந்தியாவின் முக்கியத் தொழில் விவசாயம். சுதந்திரத்திற்குப் பின்னர் கிராமங்கள் தொழிற் களங்களாக மாறி வருகின்றன. இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு விடுமோவென அஞ்சுகிறேன். தங்கள் கருத்தென்ன?

தொழில் வளர்ச்சி காரணமாக நிலப் பற்றாக்குறை ஏற்பட்டு, அதனால் உணவு உற்பத்தி குறையுமென்ற அச்சம் வேண்டியதில்லை. ஏனெனில் விஞ்ஞான வளர்ச்சியினால் அதிக மகசூல் பெற வாய்ப்பு இருக்கிறது.

❑ பி.என். ஜெகந்நாத ராஜா; கும்பகோணம்.

உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று வந்துள்ளீர்கள். தங்களைக் கவர்ந்த நாடு எது? எதனால்?

என்னைக் கவர்ந்தது அமெரிக்க நாடுதான். ஏனெனில், அந்த நாடுதான்– எத்தரப்பினரும் கடுமையாக உழைத்தால் ஒரு நல்ல வாழ்க்கையை மேற்கொள்ளலாமென்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

❑ ஏ. நல்லசிவம்; அரியக்குடி.

இந்திய நாட்டில், எந்த மாநிலம் தொழில் துறையில் முதன்மை பெற்றுத் திகழ்கிறது? எதனால்?

பாரத நாட்டில் மகாராஷ்டிர மாநிலம்தான் தொழில் துறையில் முதலிடம் பெற்றுள்ளது. அங்கு தங்கு தடையின்றி மின்சாரம் கிடைப்பதாலும், பம்பாய் நகரம் நிதி முதலீட்டுச் சேகரிப்பில் [Financial Capital] முதன்மை பெற்று விளங்குவதாலும், பல ஆண்டுகளாக நிலையான ஓர் அரசாங்கம் தொடர்ந்து நீண்ட நோக்குடன் பல சலுகைகளை அளித்து வருவதாலும் மகாராஷ்டிரம் முதன்மை நிலை பெற்றுள்ளது.

❑ நா. நாச்சியப்பன்; ஆத்தங்குடி.

தங்கள் தந்தையார் நிறுவிய அறக்கட்டளை, இதுவரை செய்து வந்துள்ள தர்மங்களில், உயர்ந்த தர்மமாகத் தங்கள் உள்ளம் கவர்ந்தது எது?

அறக்கட்டளை ஆற்றி வருகின்ற தர்மங்களில் கல்விக்காக அளித்து வரும் தர்மங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை.

❑ ம.கி. வேலப்பன்; கோவை–17.

அரசியல் கட்சிகளில் தங்களுக்குப் பிடித்தமானது எது?

தேசிய உணர்வு கொண்ட எவரும் கட்சி அரசியலைப் பற்றி அவ்வளவாக சிந்திப்பதில்லை.

❑ நளினி சாரங்கபாணி; தஞ்சாவூர்.

வார–மாத சஞ்சிகைகளை வாசிக்கும் பழக்கம் தங்களுக்கு உண்டா? தங்கள் இல்லத்திற்கு வருகின்ற பத்திரிகைகள் யாவை?

எப்பொழுதாவது வாசிப்பேன். தெய்வீகப் பத்திரிகைகள் மட்டுமே இல்லத்திற்கு வாங்குவது வழக்கம். உதாரணமாக 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' 'தத்துவலேகா' போன்றவை.

❑ எஸ். சங்கரநாராயணன்; அருப்புக்கோட்டை.

தங்கள் நிறுவனத்திலிருந்து வரும் 'ராம்கோ சிமிண்ட்' உபயோகிப்பாளரிடம் தனி மதிப்பைப் பெற்று விளங்குவதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

எங்கள் நிறுவனங்களில் உற்பத்தியாகும் எல்லாப் பொருள்களுமே வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கு உகந்ததாக, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மூலப் பொருள் விலையில் உயர்வு தாழ்வு ஏற்படினும், நிரந்தரமான தரம் கொடுக்க வேண்டுமென்ற உறுதியான கொள்கை பின்பற்றப் படுகிறது. இலாபம் கருதி, எந்த நிலையிலும், தரம் பேணப் பெற்று வருவதைக் குறைத்துக் கொள்வதே இல்லை.

தொகுப்பு : குன்றக்குடி பெரியபெருமாள்

சொப்பன நிலா

ஸ்ரீவேணுகோபாலன்

2

மாற்றிடம் கிடைப்பின்
மாறுவதல்ல இது!
வஞ்சித்து விலகுவோர்க்கு
வளைவதல்ல இது!

இதன் குறி என்றும் துருவக் குறி!

புயலைப் பார்க்கும் இது – எனின்
புல்லைப் போல் துடிக்காது
மதிப்பைக் கணித்தாலோ
மாளாது மாளாது
சில மணிக் கூர்களிலோ
சில வாரச் சுருக்கத்திலோ

மாறாது, மறையாது,
மாற்று சிறிதும் குறையாது.

காலத்தின் அநாதியிலே
ஊழி வரும் விளிம்பு வரை
பொறுத்திருக்கும் இது
தரித்திருக்கும், சகித்திருக்கும்!

காதலே!

இத்தனையும் பொய்யாகின்
எறிந்திடுவேன் எழுதுகோலை!
இத்தனையும் பொய்யாகின்
எவனுமே உந்தன் வசம்
பட்டிருக்கவே மாட்டான்
சத்தியமே என் வசனம்!

—ஷேக்ஸ்பியர்

காலையில் மதுரையிலிருந்து அண்ணன் விஜயபதி வந்து விட்டான்.

நடு அறையில் பேச்சு கேட்டது.

"போன விஷயம் என்ன ஆச்சு?" என்று கேட்டாள் சீதா, முகத்தைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு.

பதி சிறிது நேரம் காப்பி டம்ளரைப் பார்த்திருந்தான்.

"பணம் நிறையக் கேட்பாங்கபோல இருக்கு?" நிதானமாக இழுத்தான்.

"எவ்வளவு?"

"கையிலேயே இருபதினாயிரம் கேட்டா... மற்றதெல்லாம் எவ்வளவு கேட்பாங்களோ?" இழுத்தான்.

"நீங்க என்ன சொன்னீங்க?"

"யோசிச்சேன்! இவளோ மூல நட்சத்திரம். இடம் தேடறதே கஷ்டம். ஏற்கெனவே மூணு இடம் கோட்டை விட்டாச்சு. இன்னும் எத்தனை தான் விடறது?"

கேள்வியைக் கேட்டு சீதாவைப் பார்த்தான்.

சீதா திகைத்தவாறு நின்றாள். பேசவில்லை

"என்ன சொல்றே?" பதி திரும்பவும் கேட்டான்.

"இவ்வளவு பணத்துக்கு எங்கே போறது?" இழுத்து ஒரு பார்வை பார்த்தாள்.

"எப்படியாவது செய்ய வேண்டியதுதான்".

"எப்படிச் செய்வீங்க? இப்பவே உங்களுக்குத் தலைக்கு மேலே கடன் இருக்கு. நாளைக்கு உங்க பெண்ணுக்கு கல்யாணம் பண்ணவேண்டாமா?"

"அவளுக்கு ரெண்டு வருஷம் போகலாமே. அப்போ பார்த்துக்கிறது பணத்துக்கு. கடவுள் ஏதாவது வழி விடுவார்."

"விடுவார். ஸ்பெஷல் வழிதான் விடுவார்" என்று பாதி முணு முணுத்து காபி டம்ளரைக் கீழே இருந்து விருட்டென்று அள்ளினாள்.

"சொல்லிட்டேன். வரம்புக்கு மேலே போயிட்டு அப்புறம் என் நகை மேலே கை வைக்காதீங்க. அதை விக்கணும்னு உங்களுக்கு எண்ணம். அதுதான் வேண்டாங்கறேன். நாளைக்கு லல்லிக்கு வேணும். ஆமாம்". முனகியவாறு உள்ளே போக யத்தனிக்க,

"சீதா!" என்றான் அவன் கோபமாக.

பாக் டவுன் ;; பெனிபிட் பண்டு- அமுதசுரபி இணைந்து நடத்திய நாவல் போட்டியில் ரூ. 10,000 பரிசு பெற்ற நாவல்

சீதா நின்றாள்.

"ரதிக்கு ஒன்றும் நாம்ப செலவழிச்சுப் பண்ணப் போறதில்லை. அவளுக்குன்னு இருந்த வீட்டை நாம்ப வித்து சாப்பிட்டாச்சு".

சீதாவின் கண்களில் திடும் என்று ஒரு முழிப்பு வந்தது. அத்தனை வெள்ளை விழியும் தெரிந்தது.

"சரி, தெரியும்.... தெரியும். அப்படித்தான் சொல்வீங்க. உங்க இஷ்டப்படியே செய்யுங்கோ" என்று சொல்லி உள்ளே பாய்ந்தாள்.

உள்ளே அவள் முனகுவது கேட்டது. 'நானும் சொல்லிட்டே இருக்கேன். நட்சத்திரத்தை மாத்தி வேறே ஜாதகம் எழுதி வச்சுக்குங்கன்னு. கேட்டாத்தானே'.

☆ ☆ ☆

மத்தியானம். 'ரதி! ரதி! என்று குரல் கேட்டது.

லல்லியின் விரட்டலான குரல்.

கல்லூரியில் பரிட்சை எழுதி விட்டுத் திரும்பி இருந்தாள்.

சர்ர்ர்ர்க் என்று அவள் செருப்பு பறப்பதிலிருந்து தெரியும்.

ரதி ஓடி வந்தாள்.

வியர்வை கலந்த சோளியை வெளியே இழுத்துக் கொண்டிருந்தாள் லல்லி.

முகம் கோணிக் கொண்டிருந்தது.

"இந்தா சொல்லிட்டேன். நான் பிஸிக்ஸிலே பெயில் ஆனா அதுக்கு நீதான் காரணம்".

சுருக்கென்று ஒரு பாணம் விட்டது போல் பேச்சு.

இதை எதிர்பார்த்தவள் ரதி. லல்லியின் சைகாலஜி முழுவதும் தெரியும்.

லல்லி ஒரு சராசரி. உழைத்தால்தான் பாஸ் செய்ய முடியும். ஆனால உழைக்க மாட்டாள்.

சீதா அந்த அருமந்தப் பெண்ணிடம் வைத்திருக்கும் அத்தனை கனவுகளும் பட் பட என்று போகப் போவது ரதிக்குத் தெரியும்.

கம்ப்யூட்டர், வயலின், அக்கவுண்டன்ஸி என்று எத்தனை விஷயங்களில் தனித்தனி பயிற்சிக்கு அனுப்பி, அதற்கான புத்தகம், கருவிகள் வாங்கிக் கொடுத்து - அத்தனையும் ஆரம்ப மாதத்தோடு அங்கங்கே மூலையில் போய் உறங்கிக்கிடக்கும்.

ஒரு பெண்ணின் தாம் தூம்களுக்கு எப்படி பணம் செலவழிக்கிறது? அண்ணன் எவ்வளவு சம்பாதித்து என்ன?

தன் பேச்சுக்கு ரதி இன்னும் பதில் சொல்லவில்லை என்று தெரிந்ததும் இன்னும் ஜுரம் ஏறியது லல்லிக்கு.

"நேத்து ராத்திரி டீ போட்டு வச்சுட்டு நீ போயிருக்க வேண்டாமா? அம்மாவோடு வெளியிலே கம்பி நீட்டிட்டியே. என் பக்கத்திலே இருந்து கேட்டதைச் செஞ்சு கொடுத்தாத்தானே நான் படிப்பிலே கான்சென்ட்ரேட் செய்ய முடியும்? எக்ஸாம்லே அத்தனை கேள்வியும் நான் படிக்காத போர்ஷன்லே வந்திருக்கு. பெயில் ஆனா உன்னை விடமாட்டேன்" என்று பொரிந்து, ஒரு சிறுமி தன் அடத்தைக் காட்டுவது போல் தம் தம் என்று தரையில் மிதித்து மிதித்துக் குதித்து கோபத்தைக் காட்டிவிட்டு, படீர் என்று பிரம்பு நாற்காலியில் புதைந்தாள்.

ரதியின் மௌனத்தைத் தொடர்ந்து மேலும் சிறிது நேரம் லல்லியின் அர்ச்சனை நடந்தது.

அதற்குப் பிறகு டி.வி.யை போட்டு எம்.டி.வியைத் திறந்து வைத்து ஓசையோடு கேட்க ஆரம்பித்தாள்.

★ ★ ★

மத்தியானம் மூன்று மணிக்கு ரதி கம்ப்யூட்டர் வகுப்புக்குச் சென்றாள். அவளது படிப்பு முடிந்து விட்டிருந்தது. எனினும் சூப்பர்வைசர் போன்று அவளை வைத்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு மணி நேர வேலை. பொழுது போயிற்று. கொஞ்சம் சம்பாதிக்கவும் முடிந்தது.

மூன்று மணிக்குப் போனபோது தோழி சித்ரா இன்னும் அங்கு இருந்தது ஆச்சரியமாக இருந்தது. அவளது நேரம் காலைகளில்! உபரி வேலைக்கு வந்திருந்தாள்.

ரதியைக் கண்டதும் புன்னகை வழிய, "ஹேய்! நிறைய பிராந்தியச் செய்தி காத்திட்டிருக்கு" என்றாள்.

சித்ரா, ரதி இருவர் அலைவரிசைகளும் கிட்டத்தட்ட ஒன்றாக இருந்தன. சித்ராவும் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

"என்ன விஷயம்?" ரதி கேள்வியாகக் கண்ணைத் தூக்கினாள்.

"வா" என்ற சித்ரா அவளை, காண்டீனுக்கு அழைத்துச் சென்றாள்.

டீ கப்புகளுடன் ஒரு மூலையில் அமர்ந்தார்கள்.

"அவன் வந்தான்! காலையிலே".

"யாரது! எப்போதும் புடகமாச் சொல்றே!"

"ரஞ்சன். நேத்துதான் சொன்னேனே!"

"ஓ! சரி, சரி".

"காலையிலே வந்தானா? ஐயோ! அந்த விஜயாவும், பத்மாவும், அவனை விடவில்லை. சுத்திக்கிட்டே இருந்தாங்க. விஷயம் தெரியுமா? விஜயா அவனைத் தைரியமா லஞ்ச்சுக்கு வீட்டுக்கு வரும்படி சொல்லி இருக்கிறா!"

"ஓ! சிநேகம் முத்திடுத்து போல இருக்கு!"

"எனக்கென்னவோ அப்படித் தோணலை. இரண்டும் அந்தஸ்து வீட்டுப் பெண்கள். மரியாதைக்காக அவன் பேசினான்னு தோணுது".

"மனசோட பேசினாகூட என்ன, சித்ரா?"

"இல்லை ரதி! வாழ்க்கையிலே சிலருக்கு எல்லாமே இஷ்டப்படி நடக்குது" என்று சொல்லி சலித்துக் கொண்டு மௌனமானாள்.

மேஜையில் விரலால் கிறுக்கல் போட்டுக் கொண்டே ரதி பேசினாள்.

"பணம் இருந்தா நடக்கும்!" என்றாள் ரதி.

சித்ராவிடமிருந்து ஒரு பெருமூச்சு வந்தது.

"நீ சொல்றது சரிதான் ரதி! விஜயா பணக்காரி. அவனை லஞ்ச்சுக்குக் கூப்பிடறா! ஒத்துக்கறான். ஆனா... காலையிலே கம்பெனிக்கு வந்தபோது எல்லாரிடமும் ஒழுங்காத்தான் பேசினான். ஒருத்தரையும் விடல்லை".

"என்னைப் பற்றி விசாரிச்சானா?" என்று கேட்க ரதிக்குத் தோன்றியது.

கேள்வி நாக்கு நுனிக்கு வந்து விட்டது. ஆனால் கேட்கவில்லை.

அவளது ஒதுங்கித் தள்ளியே இருக்கும் சுபாவம், அவளை இயல்பாகவே பல விஷயங்களில் விரக்தியாக்கி விட்டிருந்தது.

"எனக்கு மட்டும்..." என்று ஏதோ சொல்ல நினைத்து நிறுத்தினாள் சித்ரா.

"சொல்லு சித்ரா!".

"எனக்கு மட்டும் உன்னைப் போல அழகு இருந்தா, இந்த விஜயா, பத்மாவை எல்லாம் ஓர் ஆட்டு ஆட்டி இருப்பேன்".

ரதியிடம் ஒரு புன்னகை மிதந்தது.

"அல்லது நான் பணக்காரியா இருந்தா... ஹூம்... பணத்துக்கு ஒரு தனி மயக்கு இருக்கு! இந்த இரண்டாவது ஆசையாவது நிறைவேறக்கூடாதா!" என்று இழுத்தாள் சித்ரா.

"நிறைவேறினா என்ன செய்வே?"

"ரஞ்சனை விலைக்கு வாங்குவேன்!"

"அப்படி ஓர் ஆசையா!"

"ஆமாம. அவனும் நம்மை மாதிரி சாதாரண குடும்பந்தானே! நல்ல பர்ஸனாலிடி வாய்ச்சுடுத்து! அதனாலே அத்தனை பேரும் அவனை 'லைக்' பண்றாங்க. ஏன் ரதி! உண்மையாகச் சொல்லு. உனக்கு அவன் மேலே விருப்பம் உண்டா இல்லையா?"

புன்சிரிப்பு ரதியிடம் வந்தது.

"கிட்டாதாயின் வெட்டென மற"ன்னு பழமொழி தெரியாதா? அதுதான் என் நிலை! ஒரு விஷயம் கிடைக்காதபோது அதன் மேலே பற்று வச்சு என்ன பிரயோசனம்?"

"நீ தத்துவம் தான் பேசுவே ரதி!" என்று அலுத்தாள் சித்ரா.

சிரித்துக்கொண்டே "நீதானே சித்ரா, பலர் நினைக்கலாம், சிலர் ரசிக்கலாம், ஒருவரே ருசிக்கலாம்னு சொல்லியிருக்கே' அந்தப் பலர்லே ஒருத்தர்னு என்னை நினைச்சுடு சித்ரா!" என்றாள் ரதி.

"ரதி! அந்தப் 'பலர்லே' உன்னைச் சேர்த்துக்காதே! நீ நினைச்சா அவனை அடைய முடியும்" என்றாள் சித்ரா, இறுகிய முகத்தோடு.

"சித்ரா! நான் தூரத்திலேதான் இருக்கேன்! பக்கத்திலே நெருங்கலை! நீ இப்போது சொன்னியே... எல்லாரையும் விசாரிச்சான்னு! என்னை விசாரிச்சானான்னு நான் கேட்டேனே!"

"உன்னை விசாரிக்கலை!"

"அப்போ என்னை ஏன் இதிலே சேர்க்கிறே?"

"விசாரிக்காததே அவன் இண்ட்ரஸ்டைக் காட்டறதோ என்னவோ.

"நான் நினைக்கலை ?"

"நாலைஞ்சு மாசத்துக்கு முன்னாடி நீ ஒண்ணு சொன்னே ஞாபகமிருக்கா ரதி?"

"என்ன?"

"உங்க பழைய வீட்டுத் திடல்லே ஒரு சாயங்காலம் அவன் நடந்து வந்தான்! உன்னைக் க்ராஸ் பண்ணிப் போனான்னு".

"அது ஓர் எதேச்சை நிகழ்ச்சி சித்ரா!"

"இரண்டு நாள் முன்னாடியும் திடலுக்குப் போயிருக்கான்".

சிரித்தாள் ரதி!

"ஸோ! குருவி உட்காரப் பனம்பழம் விழுந்துட்டது இல்லே. ஏதாவது அதிர்ஷ்டம் நடக்கும்னு நினைக்காதே! அதெல்லாம் நமக்கு நடக்காது! எங்கேயோ யாருக்கோ ஒருவருக்குத்தான் நடக்கும்!"

பகலில் லல்லி ஊட்டிய வெறுப்பு மனத்தில் சிறாய்த்திருந்தது.

பிற்பகலில் சித்ரா சொன்ன செய்திகளும் மனத்தில் வலித்தன.

எல்லாவற்றையும் போட்டு ஆற்றுவதற்குத் தனிமையாக எங்கேயாவது போக வேண்டும் போல இருந்தது.

பஸ் ஏறி புறநகர் வந்து தனது பழைய வீட்டை மட்டும் ஒரு நிமிடம் பார்த்து, வீட்டுத் திடலில் வந்து நின்றாள்.

அந்தி மெல்லிதாகக் கறுகியது.

திடலின் வெறுமை நீண்டு தூரத்தில் அடி வானத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது.

திடலின் குறுக்கே நடந்தாள்.

அவள் நடந்து பழகிய திடல்! அதில் ஒரு சொந்தம்கூடத் தோன்றியிருந்தது.

கூரை போட்ட காளி கோயிலுக்குச் சென்றாள். காளியைத் தரிசித்தாள். மனத்தில் வேண்டிக்கொண்டாள். வெளியே வந்தாள்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். திடல் வெறுமையாகத்தான் இருந்தது.

"ஹூம்... யார் வந்தால் என்ன?" வரா விட்டால் என்ன? எனக்கு என்ன ஆக வேண்டும்! பெரிய இடத்துப் பெண்கள் பழக்கம்தானே ஒருத்தருக்குப் பிடிக்கும்! என்னைப்போல ஏழைப் பெண் பிடிக்குமா? நானும் சமயங்களில் இப்படி எதையாவது நினைக்கிறேனே! நான் ஒரு பைத்தியம்" என்று தன்னை நொந்துகொண்டாள்.

"எல்லாம் வீண் ஆசைகள். வீண் சொப்பனங்கள்!" என்று முணு முணுத்தாள்.

திடலின் குறுக்கே நடந்து மீண்டும் எல்லைப் பக்கம் வந்தாள்.

நன்கு இருட்டி விட்டது.

இனி என்ன? வீடு போக வேண்டியதுதான் என்று நினைத்தாள்.

திடும் என்று வந்த அந்தக் குரலை எதிர் பார்க்கவில்லை.

"மிஸ்" என்று அழைப்பு.

திரும்பினாள்.

கண்கள் எந்த உணர்வும் இல்லாமல் நின்றன.

எழுந்த ஓர் உணர்ச்சி அலையும் பாதியில் உறைந்துவிட்டது.

ரஞ்சன் நின்றிருந்தான்!

ஆவலோடு அவன் முகம் ஒருகணம் நோக்கியது. பிறகு அவளது அசிரத்தை அவனைத் திகைக்க வைத்தது.

இரண்டாவது முறை ஏதோ பேச வந்தவன், திரும்பவும், "மிஸ்" என்று வெறும் வார்த்தைகளைக் கூறி நிறுத்தினான்.

"என்ன?" என்றாள்.

அந்தக் கேள்வியும் ஒரு வேகத்தோடு வந்தது.

"உங்க கம்பெனியில் படிச்சவன் நான். ரஞ்சன் தெரியலையா?"

சொல்லி முடிப்பதற்குள் தவித்து விட்டான்.

"ம்"

"நான் விமானப் படையிலே சேர்ந்திருக்கேன். நாலு நாள் முன்னாடிதான் வந்தேன்".

"சரி".

மேலே நடந்து செல்ல அவள் முற்பட்டாள்.

"ஆறு மாசத்துக்கு முன்னாடி நான் ஏர் ஃபோர்ஸிலே சேர்ந்தேன். அதுக்குள்ளே இங்கே வந்துட்டேன். லீவுகூட முறையா கிடைக்கலை. அதைப் பற்றிக் கவலைப்படலை".

அவளிடம் பதில் இல்லை.

"என் மனம் எந்த நிர்ப்பந்தமும் பயமும் இல்லாமல் எங்கே பறக்கிறதோ... எந்தப் பரந்த வெளியில் என் மனம் சுதந்திரமாக மிதக்கிறதோ... அங்கே வருவதற்கு என் ஆர்வம்!" என்று உணர்ச்சி அலையாகச் சொல்லி நிறுத்தினான் அவன்.

"ஓ! பொயட்டிக்காப் பேசறீங்க?" என்றாள் அவள் திரும்பாமல்.

"நான் நினைச்ச அந்த ஐடியல் இடம் இங்கே இருக்கு. மிஸ்".

"இங்கேயா?"

"ஆமாம்! இந்தத் திடல்தான், அது".

திடலை ஒரு முறை பார்த்து விட்டுத் திரும்பினாள்.

"இந்தத் திடல்! இது என் தெய்வம் உலாவும் திடல்".


அவள் பார்வை எங்கேயோ திரும்பி இருந்தது.

"ஊரிலிருந்து வந்ததும் இந்தத் திடலைத் தான் நான் தரிசிக்க வந்தேன். தினமும் வந்து கொண்டிருக்கிறேன்!"

அவள் பேசவில்லை.

"நான் சொல்வதைக் கேட்கிறீர்களா? மிஸ்!"

மெல்லத் தலையை மட்டும் தூக்கினாள்.



"கேட்கிறேனே!"

"எனக்கு ஓர் அனுமதி மட்டும் கொடுப்பீர்களா?"

"என்ன?"

"என் தெய்வத்தை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டலாமா?"

"அதற்கு ஏன் என்னிடம் அனுமதி.?தாராள மாகக் காட்டுங்கள்!"

"இப்போது நான் பக்தனாக நின்று கொண்டிருக்கிறேனே! இந்த பக்தன் முன்னால் நிற்பதுதான் என் தெய்வம்".

"தெய்வமா? நானா?"

"ஆமாம் மிஸ்!"

"மிஸ்டர்! என்ன சொல்றீங்க? உங்க சுய நிலையிலே இருக்கிறீங்களா?"

அவன் திடுக்கிட்டான்.

"மிஸ்! ஏன் என்னை இப்படி கேட்கறீங்க?"

"என்னைத் தெய்வம் என்கிறீங்களே!"

"தெய்வமில்லையா? உங்களைத்தான் என் மனம் எப்போதும் சுற்றி வருகிறது!"

"மைகாட்! நீங்க சொல்றது..."

"எஸ் மிஸ்! நீங்கள் என் அன்புக்குத் தெய்வம்! என் 'லவ்' தெய்வம்!

"லவ்வா?"

அதை விரும்பாதது போல முகம் சுளித்தாள்.

அவன் முகம் திகைப்புடன் திரும்பியது.

"மிஸ்! மனசைத் தவிக்க விடாதீங்க. தவிச்சுத் தவிச்சு வெறும் தவிடு போல ஆயிட்டேன். என்னால் எதையும் செய்ய முடியறதில்லை. நினைக்கிறேன், நினைக்கிறேன்! நினைத்துக் கொண்டே இருக்கிறேன். நான் ஒரு நினைப்புக் கூண்டு! என் உடல் எல்லாம் நினைப்புதான்! அந்த நினைப்புக்கு எல்லாம் சொரூபம் கொடுத்திருப்பவர் நீங்கள்தான்! நீங்களே தான்! அதனாலேதான் உங்கள் சந்நிதியில் நடுநடுங்கிக் கொண்டு நிற்கிறேன்!"

அவன் கன்னங்கள் வழியே இரு திவலைகள் உருண்டு வழிந்து வந்தன.

அவள் பேசவில்லை.

"ஏன் மிஸ்! நான் நினைத்தது எல்லாம் தவறா?"

அவளிடம் பதில் இல்லை.

"நிச்சயம் அப்படி இராது! உங்கள் மனசு எனக்குத் தெரியும். அதை என் ஊகம் பூர்வமாக அறிவேன். சொல்கிறேன் கேளுங்கள். உங்கள் காலின் நடையில் என்னைக் கண்டதும் எழும்பும் ஓசை எனக்குத் தெரியும். என்னைத் தாண்டும் போது உங்கள் சுவாசத்தின் திரிபு கூட எனக்குத் தெரியும்.

விலகியே நீங்கள் நின்றாலும் உங்கள் கவனம் என் கவனத்தோடு ஒட்டி இருப்பது எனக்குத் தெரியும்.

நீங்கள் பேசாவிட்டால் என்ன? உங்கள் மௌனம் என் மௌனத்தோடு பேசுவது தெரியும்".

அவன் அடுக்கியவாறு போக... கன்னங்களில் நீர் வந்த வண்ணம் இருந்தன.

அவள் சலனமில்லாமல் நின்றாள். கண்கள் ஒரே இலக்கை நோக்கி இருந்தன.

"ஏன் மிஸ்! மனத்தைப் பூட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களைப் புரியாதவனா நான்? நேற்று இரவு உங்கள் தெருவில் ஓர் ஓரமாய் வந்து நிழலாக நின்றேனே! எங்கே சொல்லுங்கள். நீங்கள் அந்த நிழலில் என்னைக் கண்டு பிடித்து, உங்கள் வீட்டு வாசல் படியில் திடமாக நிற்கவில்லையா? நிழலாக இருந்த என்னைத் தயங்கி நின்று பார்க்கவில்லையா?

அதுவும்கூட சாட்சி வேண்டாம்.

இப்போது, இந்தக் கணம். நான் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டு, இங்கே சில அடிகளின் சஞ்சாரத்தில் அப்படியே நிற்கிறீர்களே! என்மீது மட்டும் உங்களுக்கு மனம் இல்லாவிட்டால் இப்படி நின்றிருக்க மாட்டீர்கள். மிஸ்! தயவு செய்து மனசுக்கு மூடி போடாதீங்க. பொங்கும் கங்கையில் அணை போடாதீர்கள். உள்ளதைத் தாராளமாக இளகி வழிய இடம் கொடுங்கள். அனுமதி கொடுங்கள். உத்தரவு கொடுங்கள். என் தாழ்ந்த வேண்டுகோள் இது... விண்ணப்பம் இது!"

அவன் குரலின் கனிவு திடமெல்லாம் வழிந்து அங்கே ஒரு சாகரமே உண்டாகி விட்டது போல தோன்றியது.

பிறகு மெல்ல அடி வைத்து, அவளது முன்புறம் மௌனத்தோடு வந்து நின்றான்.

பார்த்தான்.

அவள் கன்னங்களிலிருந்து நீர் வழிந்திருந்தது.

இரு கண்களும் கங்கை, காவிரிகளாக வர்ஷித்துக் கொண்டிருந்தன.

★ ★ ★

மறுநாள் நர்ஸ் பரிமளம் வந்த போது சந்தியா விழித்திருந்தாள்.

ஒரு டாப்லெட்டையும் தண்ணீரையும் பரிமளம் கொடுத்தாள்.

அவள் திரும்பும்போது, "மேடம்!" என்றாள் சந்தியா.

பரிமளம் திரும்பினாள்.

"டாக்டர்வரலையா?"

"வருவார்".

"அவர் பேரென்ன?"

"சதாசிவன்னு பேரு! டாக்டர் சதான்னு அழைப்பாங்க".

"மேடம்! ஆஸ்பத்திரியை யார் நடத்தறாங்க?"

"டிவைன் மிஷன்னு பேரம்மா! தனியார் ஆஸ்பத்திரி".

"அப்போ எனக்கு யார் 'பே' பண்றாங்க?"

"இது ஒருவித தர்ம ஆஸ்பத்திரி. இங்கே மனநோய்தான் முக்கிய கவனம். ஆராய்ச்சிகூட நடக்குது."

"அப்போ நான் ஒரு மென்ட்டல் கேஸா?"

"அம்னேஷியா! உங்களுக்கு என்னவோ நடந்திருக்கு. நினைவில்லாமல் போயிடிச்சு".

"இனிமே திரும்ப வராதா!"

"வரும்! வரணும்! இப்போ நினைவு வந்திருக்கே. இதுவே பெரிசு".

அறைக் கதவு திறந்தது. டாக்டர் சதா புன்னகையுடன் உள்ளே வந்தார்.

தலை அடர்ந்து அழகாக இரு பக்கங்களில் வழிந்திருந்தது.

அடர்த்தியான கேரா!

முகம் இளசாக, தங்க நிறத்தில் தெரிந்தது.

புன்னகை அணையாமல் அவள் அருகில் வந்து உட்கார்ந்தார்

"எப்படி இருக்கே சந்தியா?"

நர்ஸ் கிளம்பினாள்.

"நல்லாத்தான் இருக்கேன். இப்போ நடக்க முடியுது".

"குட், குட் சீக்கிரம் எல்லாப் பார்ட்ஸும் வேலை செய்யத் தொடங்கிடும். முகத்தில் தெளிவு வந்தாச்சு".

டாக்டர் சதா பெருமிதத்தோடு சொன்னார்.

"டாக்டர்!" என்றாள் அவள்.

"இங்கே நான் எப்படி வந்தேன், டாக்டர்?"

"அதுவா! கோவை ரோட்லே நீங்க அலைஞ் சிக்கிட்டிருந்தீங்க! உங்களை ஒருத்தர் அழைச்சு வந்து பக்கத்திலே டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரியில் சேர்த்துட்டாரு! அவங்க ரெண்டு நாள் வச்சுட்டு இங்கே எங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச்சுட் டாங்க"

"எப்போ இது நடந்திச்சு?"

"கரெக்டா பத்து நாள் ஆகுது!"

"இது என்ன ஆஸ்பத்திரி?"

"டிவைன் மிஷன் ஆஸ்பத்திரி. இங்கே மன நத்துவ ஆராய்ச்சி நடக்குது!"

"நீங்க மனநோய் டாக்டரா?"

"ஆமாம்! இப்போது நான் ரிசர்ச்சிலே இருக்கேன்".

"நான் தனியாவா அலைஞ்சேன்?"

"ஆமாம்! புலம்பிட்டே இருந்தீங்க".

"என்கூட யாருமில்லையா?"

"இல்லை".

அவள் விழித்தாள்.

"ஏன் என்னைத் தேடி யாரும் வரவில்லை!"

"தெரியலை. இனிமே கண்டுபிடிச்சு வரு வாங்களோ என்னவோ?"

"என்னைப் பற்றி விளம்பரம் எந்தப் பத் திரிகையிலாவது வந்திருக்கா!"

" வரல்லை".

அவள் புருவம் நெருங்கியது கோவை சாலையில் அவள் ஏன் வரவேண்டும்? அதுவும் தனியாக...

"உங்களாலே எதையாவது ஞாபகப் படுத்த முடியறதா மேடம்?" என்று கேட்டார் டாக்டர்.

"அதான் பார்க்கிறேன். எனக்கே எல்லாம் ஆச்சரியமா இருக்கே! என் சொந்தக்காரங்க யாரும் வரவில்லையே! போலீசுக்குத் தெரிவிச் சீங்களா?"

"சேதி அனுப்பிச்சிருக்கோம்".

"என் போட்டோ போட்டு விளம்பரம் போட் டீங்களா?"

"அதுதான் செய்யலாமுன்னு பார்க்கிறோம்".

அவள் ஸ்திரமில்லாமல் இங்கும் அங்கும் பார்த்தாள்.

"டாக்டர்! என் பேர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"ஹாண்ட் பாக் வச்சிருந்தீங்களே, அதிலே தெரிஞ்சுது".



"ஹாண்ட்பாகா? அது எங்கே காட்டுங்க?"

டாக்டர் சதா உடனே வெளியே போனார்.

ஒரு நிமிடத்தில் திரும்பி வந்தார்.

"சந்தியா! இப்போது உங்க பையைக் கொண்டு வருவாங்க. அதப் பார்த்து நினைவு வருதா பாருங்க!"

"பைக்குள்ளே என்ன இருந்தது டாக்டர்?"

"ஒன்றுமில்லை. கொஞ்சம் பணம், பால் பாயிண்ட் பேனா, பவுடர், கர்ச்சிப்..."

"என் அட்ரஸ் அதில் இல்லையா?"

"இல்லையே! அட்ரஸ் கிடைச்சிருந்தா விடு வோமா?"

அவள் கண்கள் மெதுவாக மூடின.

சதா அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தார்.

திடீரென்று விழித்து, "ஏன் டாக்டர்! என் மேலே ரத்தக் கறை இருந்திச்சுன்னு சொன் னீங்களே, அது எப்படி?"

"அதை யோசிச்சோம். உங்க மேலே லேசாத் தான் சிறாய்ப்பு. உங்களுக்கு ஏதாவது விபத்து நடந்திருக்கணும்ன்னு நினைக்கிறோம்".

"விபத்தைக் கண்டு பிடிக்கலையா?"

"இங்கே பத்து மைல் சுற்று வட்டாரத்திலே விசாரிச்சேன். ஒரு விபத்தும் பத்து நாள் முன் னாலே நடக்கலை".

"கடவுளே! இது என்ன அநியாயமா இருக்கே?"

"சந்தியா! ரொம்ப அலட்டிக்காதீங்க. மூளை ரொம்ப நுட்பமானது. தானாகவே குண மாகட்டும்! சீக்கிரம் எல்லாம் தெரிஞ்சுடும்".

அறைக் கதவு திறக்கப்பட்டது.

நர்ஸ் பரிமளம் ஒரு கைப்பையுடன் உள்ளே வந்தாள்.

டாக்டர் சதா அதை வாங்கினான்.

"இதைப் பாருங்க சந்தியா! உங்க பை" என்று கொடுத்தான்.

அந்தக் கனத்த லெதர் பையைக் கையில் வாங்கிக் கூர்ந்து பார்த்தாள் சந்தியா.

(தொடரும்)

அபிராமி அந்தாதி

தேவகி முத்தையா

42. இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி
இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டிறைவர் வலிய
நெஞ்சை
நடங்கொண்ட கொங்கை நலங்கொண்ட நாயகி
நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

அகன்று, பரந்து, பருத்து ஒன்றோடு ஒன்று உரசியும் தளர்வு இன்றி இறுக்கத்துடன் கூடியும், மிருதுவாகவும் அமையப் பெற்று, மேலே முத்துமாலைகள் புரளப் பெற்ற மலை கள் போன்ற தனங்களால் சிவபெருமானின் வலிமைமிக்க நெஞ்சை ஆட்கொண்டு, தான் நினைக்கும் வண்ணம் ஆட வைக்கும் உளக் குறிப்புடைய நாயகியே, அபிராமியே! நல்அர வாம் சர்ப்பமானது படமெடுப்பது போன்று தோற்றம் அமைந்த மறைவிடத்தையும் பனி போன்ற குளிர்மொழிகளையும் கொண்டவளே! வேதங்களைக் கால் சிலம்புகளாக அணிந் தவளே அபிராமி!

43. பரிபுரச் சீறடி பாசாங்குசை, பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துரமேனியள் தீமை நெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

மறைகள் (வேதங்கள்) என்ற சிலம்புகளை அணிந்த சிறிய திருவடிகளை உடையவளே! பாசம், அங்குசம் என்ற இரண்டு ஆயுதங் களையும் கைகளில் கொண்டவளே! ஐந்துவித மான புஷ்ப பாணங்களை (அம்புகளை) கை களில் உடையவளே!இனிய சொற்களைப் பேசும் திரிபுரசுந்தரியே! சிவந்த மங்கலமான மேனி யினை உடையவளே! தீமையும் வஞ்சனையும் மிக்க நெஞ்சத்தினரான அசுரர்கள் அஞ்சும்படி மேருமலையை வில்லாக வளைத்து எய்த, தீயினை ஒத்த நிறத்தை உடைய சிவபெரு மானின் உடலில் சரிபாகம் கொண்டு உறையும் சக்தியே!

44. தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும் ஆயினள்; ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்;
துவளேன் இனியொரு தெய்வமுண்டாக மெய்த் தொண்டு
செய்தே.


தவத்தின் உன்னத வடிவாகவும், அந்தத் தலத்தின் தனிப்பெரும் நாயகியாகவும் இருக் கும் அபிராமியே! சிவபெருமானின் மனைக்கு மங்கலமான மனைவியாகத் திகழ்பவளே! அவ் வாறு மனைவியாக இருந்தும் கூடச் சில விசேட மான சந்தர்ப்பங்களில் அவருக்குத் தாய் எனும் ஸ்தானத்திலும் உயர்ந்து இருப்பவளே! ஆகை யினால் கடவுளர் யாவரினும் மேலான நிலையில் மாபெரும் தலைவியாகத் திகழ்பவளே! இனி உன்னையும் மீறி வேறு தெய்வம் இருக் கின்றதென எண்ணி வீணாக மெய்வருத்தித் தொண்டுசெய்து துவளமாட்டேன்.

45. தொண்டு செய்யாதுநின் பாதம் தொழாது
துணிந்திச்சையே
பண்டுசெய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே,
பின்வெறுக்கையன்றே.

அபிராமி அம்மையே! உனக்குத் தொண்டு செய்யாமலும் உன் திருவடிகளை வணங் காமலும் தமக்குத் தெரிந்த வழியில் சென்று அதுவே "நன்று" என்று நினைந்து, துணிந்து அடியார்கள் சிலர் ஆதியில் வழிபட்டிருக்கலாம். அதன் அடிப்படைகளை நான் அறியேன் தாயே! அந்த அடியார்களின் இயல்புகளைக் கண்டு, பின்பற்றி, அதனையே செய்தால் அது கீழான தவநெறியாகுமா அல்லது உயர்ந்த தவநெறி யாகுமா என்பதனையும் அறியேன். அது செந் நெறி ஆகுமெனில் அருள்பெறுவேன் என்பது உறுதி. ஆனால் அவை மாறுபட்ட நெறியெனில், அறியாமல் அடியேன் அவற்றைச் செய்தாலும் என்னை வெறுக்காது, பொறுத்துக் காக்க வேண்டியதே நன்றாகும்; வெறுத்திடல் வேண் டாம் அம்மா!

46. வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்அடியாரை
மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை
வாழ்த்துவனே

வெறுக்கத்தக்க பிழைகளைச் செய்தாலும் பெரியோர் தமது அடியவர்களை வெறுக்காது அருள் புரிவது என்பது புதிய செயல் அன்று; தொன்றுதொட்டு வரும் பழக்கம்தான். பாற் கடலைக் கடைந்தபோது தோன்றிய ஆலகால விஷத்தை உண்டு அதனால் கறுத்த கண்டத்தை (கழுத்தை) உடைய சிவபெருமானின் இடப் பாகத்தைப் பொருந்திய பொன் போன்றவளே, அபிராமி! நீ அவ்வாறு எனது தவறுகளைப்



பொறுத்து அருள் செய்ய மறுத்தாலும், நான் மட்டும் அணுவளவுகூட மாறாமல், உன்னையே போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பேன்.

47. வாழும் படியொன்று கண்டுகொண்டேன்,
மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே

அழிவே இல்லாத வகையில் நிலைத்து வாழ்வதற்குரிய தனிப்பெரும் மெய்ப்பொருளான ஒன்றைக் கண்டு கொண்டேன். நான் அறிந்து கொண்ட அபிராமி எனும் அந்த மெய்ப்பொருள் பிறர் மனத்தில் பதியும் வண்ணமும் விளங்கும் வண்ணமும் விரிவாக எடுத்துரைக்க இயலாத தன்மையை உடையது. அவ்வாறு உயர்வுற்ற அம்மெய்ப்பொருள் ஏழு கடல்கள், ஏழு உலகங்கள், எட்டுப் பர்வதங்கள் (மலைகள்) ஆகியவை யாவற்றையும் கடந்த நிலையில், இரவும் பகலும் ஒளி வீசும் சுடருக்கு இடையில் அதன் ஆதார சக்தியாய் எழுந்தருளிச் சுடர்விட்டுத் திகழ்கின்றது.

48. சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றில்
ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப்பார் பின்னும் எய்துவரோ!
குடரும் கொழுவும் குருதியுந் தோயுங் குரம்பையிலே.

ஒளிபொருந்திய கிரணங்களையுடைய பிறை மதி சூடிய சடைமுடியுடன் கூடிய குன்றை ஒத்த சிவபெருமான் மீது பொருந்திப் படரும் நறுமணமிக்க பச்சைக் கொடி போன்றவளே, அபிராமி! உன்னை யோகத்தால் தம் மனத்தில் பதிய வைப்பவர் இடர்கள் அனைத்தையும் தவிர்த்து என்றும் ஆனந்த நிலையை எய்துவர். இமைப்போதுகூட இன்னல் அடையார். அத்தகைய யோகிகள் குடல், கொழுப்பு, இரத்தம் முதலியவற்றால் நிறைந்த சிறுகுடில் போன்ற உடலில் பிறப்பு எய்துவரோ என்றால் எய்த மாட்டார். அதாவது அவர்களுக்கு மீண்டும் ஒரு பிறப்பு என்பது இராது என்பது உறுதி.

49. குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கையமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சலென்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே!

இவ்வுடலென்னும் குடிலைச் சார்ந்து குடிபுகுந்து இருக்கும் உயிர், அதற்குண்டான காலவரம்பு முடியும் நேரத்தில் அதனைக் கவர கொடிய காலன் (கூற்றுவன்) வருவான். அது இன்னல் மிகுந்த நேரம். அந்த இக்கட்டான நேரத்தில், அபிராமியே! நீ அரம்பை முதலிய பரிவார தேவதைகள் புடைசூழ எழுந்தருளி, உன்து வளைகள் அணிந்த திருக்கரத்தால் எனக்கு அபயம் காட்டி, "அஞ்சாதே" என்று கூறவேண்டும். நரம்பையொட்டி இயங்கும் இசைவடிவாகத் திகழும் நாயகியான அபிராமியே!

50. நாயகி நான்முகி நாராயணி கைநளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாய்அகி மாலினி வாராகி, சூலினி மாதங்கியென்று
ஆயகியாதி யுடையாள் சரணம் அரண் நமக்கே.

அகில உலகத்திற்கும் நாயகியானவளே! நான்கு முகங்களை உடையவளே! நாரத்தில் (தண்ணீரில்) இருப்பிடம் கொண்ட நாராயணனின் சகோதரியாக - விஷ்ணு துர்க்கையாக இருப்பவளே! சம்புவின் சக்தியான சாம்பவியே! எப்பொழுதும் மங்களத்தையே செய்வதால் சங்கரி எனும் பெயரை உடையவளே! கருமை நிறம் பொருந்திய சியாமளா தேவியே! நச்சினை வாயில் கொண்ட நல்ல பாம்பினை மாலையாகக் கொண்டவளே! பன்றி முகத்தைக் கொண்டு வாராகி எனும் சக்தியாய் இருப்பவளே! சூலத்தைக் கரத்தில் கொண்ட சூலியே! யாழ்ப்பாணர்கள் எனும் இசைவாணர்களின் குலத்தில் மதங்க மாமுனிவரின் திருமகளாக உதித்த மாதங்கியே! இவ்வாறு பல்வேறு வடிவங்களில் ஒளி வீசி, ஏகசக்தியாகத் திகழும் அத்தகைய புகழினை உடைய உனது திருவடிகள் எம்போன்ற அடியாருக்கு அரணாக, பாதுகாவல் ஆக அமையும்; எந்நேரமும் காத்து அருள் புரியும்.

51. அரணம்பொருள் என்றுஅருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண் அன்றழிய முனிந்தபெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

அழிகின்ற தங்கம், வெள்ளி, இரும்பு எனப்படும் உலோகங்களால் ஆன வெறுங்கோட்டைகளையே அழியாதவை என்று தவறாக எண்ணி, இரக்கம் என்ற நல்லியல்பு சிறிதும் இல்லாத வித்யுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்ற அசுரர்கள் மூவரும் அழியும் வண்ணம் முன்பு வெகுண்டெழுந்து திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானும், திருமாலும், 'உனது திருவடிகளையே அடைக்கலம்' என்று கொள்ளும் வகையில் தனிச்சிறப்பு மிக்க தலைவியான அபிராமியே! உனது அடியார்கள் பிறப்பு, இறப்பு என்பதற்கு அப்பாற்பட்டவர்களாகின்றனர். அதாவது அவர்கள் ஜீவன் முக்தர்கள் ஆகின்றனர்.

'வைவா'

'ஆண்டொன்றுக்கு இந்தியாவில் கண் பார்வை இழப்பவர்களின் எண்ணிக்கை முப்பதாயிரம். இதற்குக் காரணம் தரக் குறைவான உணவே' என்கிறார் அகர்வால் கண் மருத்துவ மையத்தின் டாக்டர் அத்யா அகர்வால்.

இந்தியாவின் கண் மருத்துவத்துறையில் பல சாதனைகள் படைத்துள்ள அகர்வால் கண் மருத்துவ மையம் 1957-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான பார்வை இழந்தவர்களுக்குக் கண் ஒளி வழங்கி உலகின் குறிப்பிடத்தக்க கண் மருத்தவ மையமாக, தன் சேவையைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

நாளொன்றுக்கு 100 முதல் 150 நோயாளிகளுக்குக் கண் சிகிச்சையளிக்கும் அகர்வால் கண் மருத்துவ மையம் மாதந்தோறும் இருமுறை இலவச, கண் மருத்துவ முகாம்கள் அமைத்து, கண் ஒளி வழங்குவதையும் அமைதியாகச் செய்து கொண்டிருக்கிறது. அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் இலவசக் கண் பரிசோதனைத் திட்டம் ஒன்றையும் செய்து தர முன்வந்துள்ளது.

கடந்த 38 ஆண்டுகளாக பார்வை குறைந்தவர்களுக்குக் கண் கொடுக்கும் அகர்வால் கண் மருத்துவ மையத்திற்குக கண் சிகிச்சையளிக்கும் இரண்டு நவீன மருத்துவக் கருவிகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

'வைவா' எனப்படும் Infrared video vision Analyzer ஜப்பான் நாட்டின் கண்டுபிக்கப்பட்ட கருவியாகும். இதன் மதிப்பு ரூபாய் பத்து லட்சம்.



குழந்தைகளுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள 'வைவா'வின் முன் குழந்தையை அமர்த்திவிட்டால் போதும். குழந்தையின் கவனத்தை ஈர்க்க ஒரு மெல்லிய இசை ஒலிபரப்பாகிறது.

சாதாரணமாக கண்களைப் பரிசோதிக்கும்போது கருவிழிகளை ஒரு நிலையில் வைத்திருக்க வேண்டும். இந்நிலைக்கு குழந்தை கட்டுப்படாது என்பதால் 'வைவா' முன் அமர்த்தினால் போதும்.

'வைவா'வின் நுண்ணிய லென்ஸ்கள் குழந்தையின் கண்களை மூன்று கோணங்களில் படமெடுத்து சின்னத்திரையில் (ஸ்கிரீனில்) பெரிதாக்கிக் காட்டுகிறது. எந்தக் கோணம் ஆராய்ச்சிக்கு உரியதோ அந்தக் கோணத்தைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொண்டு மெமரியில் இருந்து எடுத்துப் பார்த்து சிகிச்சையளிக்க உதவுகிறது.

குழந்தையின் கண்கள் படமாக்கப்படும்போதே கிட்டப் பார்வையா? தூரப் பார்வையா? கண்ணில் வேறு கோளாறுகள் உள்ளனவா? என்ற விவரங்களையும் தந்து விடுகிறது 'வைவா' அத்தோடு கண்களுக்கு எந்த வகையான 'கண்ணாடி பிரேம்' பொருத்தமாக இருக்கும் என்ற ஆலோசனையையும் தருகிறது.

புகழ் பெற்ற இந்த 'வைவா' இந்தியாவில் 'அகர்வால் கண் மருத்துவ மையத்தில்' மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கண் ஆராய்ச்சித் துறையில் தனிக் கவனம் செலுத்தும் அகர்வால் கண் மருத்துவமனை பொது மக்களிடம் முதலீடுகளைப் பெற்று



மேலும் தன் பணியை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

கண் அமைப்பைப் போன்ற கட்டடத்தினுள் இயங்கும் அகர்வால் கண் மருத்துவ மையத்திலிருக்கும் இன்னொரு நவீன மருத்துவக் கருவி, Slit Lamp with ccd video camera.

கண்களை மிக நுட்பமாகப் பரிசோதிக்கும் இந்தக் கருவியுடன் கம்ப்யூட்டர் வீடியோ காமிரா பொருத்தப்பட்டுள்ளது. கண்ணைப் பரிசோதிக்கும்போது கண்ணின் ஒவ்வொரு பாகமும் மிகப் பெரிதாகத் துல்லியமாக வீடியோ ஸ்கிரீனில் தெரிகிறது. குறிப்பிட்ட பாகத்தை மட்டும் ஸ்கிரீன் அளவிற்குப் பெரிதுபடுத்திக் காட்டும் வசதியிலுள்ள இந்த நவீனக் கருவியின் விலை ரூபாய் 6 லட்சம்.

உலகின் குறிப்பிடத்தக்க மருத்துவ ஆராய்ச்சியில் அயராத பணிகளைச் செய்து கொண்டிருக்கும் டாக்டர் ஜெ.அகர்வாலுடன், அவர் துணைவியார் டி.அகர்வால், மகன் அமர் அகர்வால், மருமகள் அத்யா அகர்வால், மகள் சுனிதா அகர்வால் ஆகியோரும் கண் மருத்துவப் பணியில் முன்னணியிலிருக்கிறார்கள்.

டாக்டர் ஜெ.அகர்வாலின் மகன் அமர் அகர்வால் லேசர் பெகோ (Phaco) என்ற அதி நவீன கருவியை இந்தியாவிற்குக் கொண்டு வரும் திட்டத்துடனும், அதன் நுட்பமான பயிற்சிக்காகவும் கனடாவிற்குச் சென்றுள்ளார். மகள் சுனிதா அகர்வால் தற்போது பெங்களூரில் கண் மருத்துவச் சேவையைத் தொடர்கிறார். 'பேரக் குழந்தைகள் நால்வரும் இதே பணியைத் தொடரப் போகிறார்கள்' என்றார் மருமகள் டாக்டர் அத்யா அகர்வால். இப்படி ஒட்டு மொத்தமாக குடும்ப அங்கத்தினர்கள் அனைவருமே அயராமல் உழைக்கும் அகர்வால் கண் மருத்துவ மையத்தின் சேவையில் டாக்டர் சுதாவும், டாக்டர் ஆர்.ஆர்.சசிகாந்த்தும் துணை புரிகின்றனர்.

கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான கண் சம்பந்தப்பட்ட நோய்களை நிரந்தரமாகக் குணமாக்கி வரும் டாக்டர் ஜே.அகர்வால், 'இந்தியக் கண் வங்கி' என்ற அமைப்பின் இந்தியாவில் முதல் நபர் என்பதும் பெருமைக்குரிய விஷயமாகும்.

உலகில் கண் சிகிச்சைக்குத் தரப்படும் அனைத்து நவீன வசதிகளும் இந்தியாவில் உள்ள கண் பார்வையற்றவர்களுக்கு கண்ணில் குறையுள்ளவர்களுக்குக் கிடைத்து பலன் பெறவேண்டும் என்று தீவிரமாகச் செயல்படும் அகர்வால் கண் மருத்துவ மையத்தின் எதிர்கால லட்சியம் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

–நாகராஜகுமார்

படங்கள் : யோகா

வரிச்சோதனை- I

வரி ஏய்ப்பு செய்பவர்கள் என்று கருதப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு அதிகாரிகளுக்குச் சட்டம் அளித்திருக்கும் அதிகாரங்களில் வரிச்சோதனை ஒன்று. இந்தச் சட்டம் தனி மனித உரிமையை ஓரளவிற்குப் பாதித்தாலும் வரி ஏய்ப்பு என்ற பொது நலக் கேட்டை நமது பொருளாதாரம் அனுமதிக்க முடியாது என்ற காரணத்தால் உச்ச நீதிமன்றம் இந்த அதிகாரம் செல்லத்தகும் என்று தீர்ப்பளித்திருக்கிறது. வருமான வரிச் சோதனை (Income-tax Raid) பிரிவு 132இன்படி, வருமான வரிப்படிவங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாவிட்டாலோ, கடந்த படிவங்களில் விடுதல் இருப்பதாக வருமானவரி அதிகாரிகளுக்கு நம்பகமான முறையில் தகவல் கிடைத்தாலோ, அல்லது ஒளிக்கப்பட்ட பணம், நகைகள், கணக்குப் புத்தகங்கள், அல்லது தஸ்தாவேஜுகள் அவருடைய இடத்திலோ வேறு எங்கோ இருக்கிறது என்று நம்பகமான முறையில் தகவல் வந்தால், வருமான வரி ஆணையாளர் (Commissioner of Income-tax) உத்தரவின் மீது வரிச்சோதனை செய்யமுடியும்.

ஒழுங்காக வரி செலுததுபவர்களுக்கோ அல்லது வரிக்குட்படாத வருமானம் இருப்பவர்களுக்கோ இந்தச் சோதனை ஏற்படக்கூடாது ஏன்றாலும்கூட நம்பக்கூடிய முறையில் தகவல் அவர்களுக்கு யாராவது கொடுத்தால் ஆணையாளர் வரிச்சோதனை செய்ய இயலும். அந்தச் செய்தி தவறாகப் போய்விட்டாலும் அல்லது வரிச்சோதனையின் மூலம் ஒன்றும் கிடைக்கவில்லை என்று நிரூபிக்கப்பட்டாலும்கூட அந்த வரிச்சோதனை சட்டத்திற்குப் புறம்பானதாக ஆகிவிடாது. ஆணையாளர் வேண்டுமென்றே தவறான நோக்கத்தோடு ஆணையிட்டார் என்று நிரூபித்தால் மட்டும் அந்தச் சோதனை சட்டத்திற்குப் புறம்பானதாக ஆகும். எந்த அரசாங்க அதிகாரியும் தன்னுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார் என்று எந்த நீதிமன்றமும் தக்க ஆதாரம் இல்லாமல் ஒப்புக்கொள்ளாது. தவறான தகவல்களை உண்மை என்று ஆணையாளர் நம்பினால் சோதனைக்கு உத்தரவிடுவது அவரது கடமையாகும். வரிச் சோதனை சட்டத்திற்கு மீறியதாக இருப்பினும் வரிச்சோதனையில் மீட்கப்பட்டிருக்கும் சாட்சியங்களை வரிவிதிப்பிற்குப் பயன்படுத்துவதில் தடை ஏதும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

ஓரளவு வருமானம் உள்ளவர்கள் வரி ஆலோசனைகளைத் தகுதி பெற்ற ஆலோசனையாளர்களிடம் பெற்று உரிய காலத்தில் வரிப் படிவங்கள் தாக்கல் செய்வதும் வருமான வரி அதிகாரிகளிடமிருந்து வரும் நோட்டீஸ்களைப் பாராமல் திருப்பி அனுப்புவது, அவற்றிற்குச் சரியான விளக்கங்கள் கூறாமல் இருப்பது போன்ற பொறுப்பற்ற செயல்களைத் தவிர்ப்பதும் வரிச்சோதனை நேராமல் இருக்க ஓரளவு பயன்படலாம். சரியான கணக்குகளை வைத்து இருந்தாலும்கூட, தங்களிடம் உள்ள கணக்குகளுக்கும், பொருள்களுக்கும் விளக்கம் தரவேண்டிய நிர்ப்பந்தம் சட்டத்தின்கீழ் அனைவருக்கும் உண்டு.

வருமான வரிச் சட்டம் பிரிவு 132இன் கீழ் உள்ள வரிச் சோதனைகளை ஒரு வரிதாரரின் கடை, தொழிற்சாலை, வீடு, அவருடன் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டவர்களுடைய இடங்கள், அவர் எங்கெங்கு அவருடைய பொருள்களையும், தஸ்தாவேஜுகளையும் வைத்திருக்கக்கூடும் என்று நம்பப்படும் இடங்கள் எல்லாவற்றையும் சோதனை செய்வதற்கு உரிமையுண்டு. வரிதாரர் வரி ஏய்ப்புச் செய்கிறார் என்று நம்பப்பட்டால் சோதனை நடத்தப்படும் சந்தேகத்திற்குரிய எல்லா இடங்களையும் சோதனையிட வரிச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

எஸ். இராஜரத்தினம்

சோதனைக்குட்பட்டவரின் உரிமைகள்

சோதனைக்கு உட்பட்டவரின் உரிமைகள், அரசு வெளியிட்ட ஒரு வரிதாரரின் உரிமைச் சாசனம் (சார்ட்டர்), அதன் முன் அரசு அளித்த விளக்கங்கள் இவற்றில் உரிமைகள் வெளியாகியிருக்கின்றன. . அவையாவன:

1. வரிச்சோதனைக்கு முன் ஆணையாளர் கொடுத்த ஆணையைச்சரிபார்க்கும் உரிமை. வருமான வரிச் சோதனை என்ற பெயரில் சில திருட்டுகள்கூட நடந்திருப்பதால் இந்த எச்சரிக்கை தேவையே.

2. வரிச்சோதனைக்கு வரும் அதிகாரிகளின் அடையாள அட்டையை அவர் வரி இலாகாவைச் சேர்ந்தவரா என்று சரிபார்க்கும் உரிமை.

3. சோதனையின்போது 2 சாட்சிகளை உடன் இருக்க வைக்கும் உரிமை.

4. வரிச்சோதனையின்போது கண்ட பொருட்கள் (seen), கைப்பற்றப்பட்ட பொருட்கள் (seized) இவற்றின் குறிப்புகளுடன் வரிச்சோதனை எப்படி நடந்தது என்பதை விளக்கும் 'பஞ்சநாமா' என்று சொல்லப்படும் வரிச்சோதனைப் பத்திரம் எந்தெந்தப் பொருட்கள் எங்கெங்கு எடுக்கப்பட்டன என்ற முழு விவரங்கள் சரியானபடி எழுதப்படுவதற்கான உரிமையும், அந்தப் பத்திரத்தின் நகல் பெறுவதற்கான உரிமையும்.

5. வீட்டில் உள்ள பெண் நபர்களை, பெண் அதிகாரிகளால் சோதனை செய்யப்படும் உரிமை.

6. எடுக்கப்படும் பொருட்களிலும், பத்திரங்களிலும் தன்னுடைய முத்திரையைப் பதிக்கும் உரிமையும், கைப்பற்றப்பட்ட கணக்குகளின் நகல் எடுப்பதற்கு உரிமையும்.

7. வரிச் சோதனையின்போது வரிதாரரிடமோ அல்லது வேறு நபரிடமோ பெறப்பட்ட வாக்குமூலத்தின் நகல்களை அவருக்கு எதிராக உபயோகப்படுத்தும்முன் பெறும் உரிமை.

8. உரிய காலத்தில் உண்ணவும், மருத்துவ உதவி பெறவும், குழந்தைகளைப் பள்ளிக்கு (அவர்களுடைய பள்ளிப் பைகளை சோதனையிட்ட பின்பு) அனுப்புவதற்கும் உரிமை.

9. வரிச்சோதனைக்குப் பிறகும் வரிச்சோதனையில் கைப்பற்றப்பட்ட கணக்குகள், தஸ்தாவேஜுகளை வரி அதிகாரிகளின் மேற்பார்வையில் பார்வையிட அல்லது நகல் எடுக்கும் உரிமை.

10. வரிச்சோதனை பற்றிய விவரங்களை அதிகாரிகள் பகிரங்கப்படுத்தாமல் இருக்க வரிதாரருக்கு உள்ள உரிமை. இந்த உரிமை வரிதாரர் உரிமைச் சாசனத்தில் (சார்ட்டரில்) இல்லையென்றாலும் அதன் முன்னரே இது வரிதாரருக்கு உள்ள உரிமையென்று அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

11. வரிச் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பொருட்களை 120 நாள்களுக்குள் திருப்பிக் கொடுக்கப்படாவிட்டால், நிறுத்தி வைக்கப்பட்ட காரணத்துடன் கூடிய ஓர் உத்தரவு பெறும் உரிமையும், அந்த உத்தரவின்மீது மேல்முறையீடு செய்யும் உரிமையும், நிறுத்தி வைக்கப்பட்ட பொருட்கள் அவசியமானால் சரியான ஈடு கட்டித் திரும்பப் பெறும் உரிமையும், வரி விதிப்பு வழக்குகள் முடிந்தவுடன் முடிவாகத் திரும்பப் பெறும் உரிமையும். ஆயினும் இந்த உரிமைகள் நிதி மசோதா 1995 சட்டமானால் இழக்கப்படும். இதன் காரணம் 1.7.1995க்குப் பிறகு நடைபெறும் வரிச்சோதனைகளைப் பொறுத்த வரையில் சோதனை முடிந்த ஓராண்டிற்குள்ளேயே புதுத் திட்டத்தின் கீழ் எல்லா வருடங்களுக்கும் ஒட்டு மொத்தமாக வரி விதிக்க வேண்டும் என்பதே.

12. சம்பந்தப்பட்ட பொருட்களின்மீது ஏதாவது 3ஆவது நபருக்கு உரிமை இருந்தால் அவர் அதனைத் திரும்பப் பெறவும், திரும்பக் கிடைக்காவிட்டால் அதன்மேல் அவர் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்யும் உரிமை.

13. குற்றவியல்சட்டத்தின்கீழ் நடக்கும் சோதனைகளில் ஒருவருக்கு எந்தெந்த உரிமை உள்ளனவோ அத்தனை உரிமைகள்.

14.கைப்பற்றப்பட்ட பணத்தை தனக்கிருக்கும் வரிப் பாக்கிகளுக்காக பயன்படுத்தும் உரிமையும், அந்தப் பணம் 6 மாதத்திற்குமேல் வைக்கப்பட்டிருந்து வருமான வரி பாக்கி இல்லாததனால் அதனைத் திரும்பக் கொடுக்கவேண்டி நேர்ந்தால் அந்தப் பணத்திற்கு 15 சதவிகிதம் வட்டி பெறும் உரிமை.

15. மிக முக்கியமான உரிமைகளில் ஒன்று, ஒளிக்கப்பட்ட வரி ஏய்ப்பை உடனடியாக ஒப்புக் கொண்டால் சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு அபராதமில்லாமல் வரி மட்டும் கட்டக்கூடிய உரிமை. 1995 வருமான வரி மசோதா வரி ஏய்ப்பை ஒப்புக் கொள்ளாவிடினும் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வருமானத்தை 60% வரிக்கு உட்படுத்தும்.



ஃபாம்குரோவ்

பம்பாய் நகரத்தில் 1978ஆம் ஆண்டு முதல் அடுக்குமாடிக் கட்டடங்களைக் கட்டித் தரும் வீரா சினிவாஸ் பில்டர்ஸ் பி.லிட் நிறுவனத்தின் டைரக்டர் திரு T. சீனிவாசன் சென்னையில் 1986ஆம் ஆண்டு பாலசந்திரா பில்டர்ஸ் பி.லிட் என்ற நிறுவனத்தை நிறுவினார். இயந்திர கதியாகிவரும் இக்காலக் கட்டத்தில் விடுமுறைக் காலங்களில் தூய்மையான சுற்றுப் புறச் சூழலில் உங்களுடைய சொந்தப் பண்ணையில் கழிக்கவே 'ஃபாம்குரோவ்' பண்ணைத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதாக திரு. சீனிவாசன் – நிர்வாக இயக்குனர் தெரிவித்தார்.



சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் பாதையில் 21.[illegible]வது கிலோமீட்டரில் அமைந்துள்ளது, 'ஃபாம்குரோவ் பண்ணைத் திட்டம்'. 350 கால் ஏக்கர் விற்பனை நிலங்கள் ஒவ்வொன்றிலும் '12 தேக்கு, 10 தென்னை, 5 மாமரங்கள் என்று 27 மரங்களை நட்டு, சொட்டு நீர்ப் பாசனமாக 1996 செப்டம்பர் வரை பராமரித்துத் தருவதாகவும் கூறினார். அதன்பிறகு உரிமையாளர்கள் சங்கத்தின் விருப்பப்படி இவர்கள் நிறுவனமோ அல்லது சங்கமோ இதன் பராமரிப்பை ஏற்று நடத்தும். இங்கு பாலசந்திரா பில்டர்ஸ் பி.லிட் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தில் ஃபாம் குரோவ் உரிமையாளர்கள் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க ஒரு 'கன்ட்ரி கிளப்' 'Country Club' நீச்சல் குளம், தங்கு வசதி ஆகியவை கட்ட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. நடுத்தர மக்களும் இத்தகைய வசதிகளை அனுபவிக்க ஏற்றாற்போல் இதன் விலையும் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க விஷயம்.

— டிஆர்ஜி

பாண்ட்ஸ் (இந்தியா) லிட்

உடம்பிலிருந்து வியர்வையினால் வரும் துர்நாற்றத்தைப் போக்கவல்ல உலகப் பிரசித்தி பெற்ற 'ரெக்ஸோனா' மூவகைகளில் வருகின்றது. தற்போது இந்தியாவில் பாண்ட்ஸ் இந்தியா லிட் மூலம் தயாரிக்கப்படுகிறது. இதை உபயோகிப்பதால் நாள் முழுவதும் வியர்வை நாற்றத்திலிருந்து விடுதலையும், புத்துணர்ச்சி யூட்டும் மகிழ்ச்சி பொங்கும் வாசனையும் அளிக்கவல்லது. தமிழ்நாட்டில் முதலில் விற்பனைக்கு வந்துள்ள ரெக்ஸோனா படிப்படியாக இந்தியா முழுவதும் விற்பனைக்கு வரும்.

உங்கள் ராசி பலன்

பாலஜோசியர் வித்வான் வே. லட்சுமணன்

கிரக பாதசாரம் :
சூரியன் -மிருகசீரிஷம் 3
சந்திரன் - பூராடம் 4
செவ்வாய் - பூரம் 1
புதன் - ரோகிணி 2
குரு - அனுஷம் 4
சுக்கிரன் - ரோகிணி 1
சனி - பூரட்டாதி 4
ராகு - சுவாதி 1
கேது - அசுவினி 3

சனி	கேது	புத -(வ) சுக்	சூரி
	இம்மாத கிரக நிலை		
			செவ்
	குரு (வ)	ராகு	

கிரக மாறுதல்
17-06-1995 முதல் புதன் வக்கிர நிவர்த்தி
30-06-1995 முதல் மிதுன சுக்கிரன்
06-07-1995 முதல் சனி வக்கிர ஆரம்பம்
06-07-1995 முதல் மிதுன புதன்
10-07-1995 முதல் கன்னி செவ்வாய்.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோர் கோசாரப்படி அனுகூலமான நிலையில் உலவாததால் சங்கடங்கள் என்பவை ஓரிரு கோணங்களில் தென்படவே செய்யும். பொருளாதார நிலையில் விசேடமான அபிவிருத்தியைக் காண்பது அரிதாகும். மனத்தில் கவலைகள் சூழும். வீண் விரயம், இழப்பு ஆகியவை ஏற்படக்கூடுமாதலால் விழிப்புடன் இருப்பது நல்லது. மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டி வரும். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. பிறமொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். தொழிலாளர்கள், விவசாயிகள், உத்தியோகஸ்தர்கள், ஆன்மீகவாதிகள், ஆசிரியர்கள் ஆகியோர் பொறுப்புணர்ந்து கடமைகளைச் சரிவர ஆற்றிவந்தால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம்.

புதன், சுக்கிரன், ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதாலும், சூரிய பலம் கூடியிருப்பதாலும் பிரச்சினைகளைச் சமாளிக்கிற சக்தி உண்டாகும். பேச்சு வன்மை கூடும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கைக் காணலாம். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் நோக்கம் நிறைவேறப்பெறுவார்கள். கணிதம், விஞ்ஞானம் எழுத்து போன்ற துறைகள் ஆக்கம் தரும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். ஜூலை மாதம் 10-ம் தேதி முதல் செவ்வாய் பலம் பெறுவதால் எதிர்ப்புக்களின் கரம் வலுக்குறையும். பொறியியல்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெளிச்சமான சூழ்நிலை உருவாகும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரம் நடைபெறுமானால் துர்ப்பலன்கள் குறைந்து நற்பலன்கள் கூடும். தசாபுக்தியும் சரியாக இல்லாதவர்கள் இறைவழிபாட்டில் முழுமையான கவனம் செலுத்துவது அவசியமாகும். அதன் மூலம் மன நிம்மதி பெறலாம். ஜூன் 15, 16, 18, 22, 23, 25, 27, 29, ஜூலை 3, 4, 5, 6, 7, 11 தேதிகள் ஓரளவு நலம் தரும். கீழ்த்திசை அனுகூலமானது. ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 5, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

குரு சனி ஆகியோரது பலம் சிறப்பாக இருப்பதால் உங்கள் செல்வாக்கும் மதிப்பும் உயரும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். தெய்வப்பிரார்த்தனைகள் ஈடேறும். சாதுக்கள், மகான்கள் ஆகியோரது தொடர்பால் அனுகூலம் பெறுவீர்கள். பயணம் பயன் உள்ளதாக அமையும். கேளிக்கை, விநோதங்களில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் கூடி வரும். மாதர்களது திறமை பளிச்சிடும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், ஆகியோர் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள்.

பொருளாதார நிலை திருப்தி தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் உண்டாகும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் நன்மைகள் பெருகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். கறுப்பு நிறப் பொருட்கள் லாபம் தரும். 2-ல் சூரியன் உலவுவதால் பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நல்லது. அதன் மூலம் மற்றையோரின் அதிருப்திக்கு ஆளாகாமல் தப்பலாம். 4-ல் உள்ள செவ்வாய் அலைச்சலை அதிகப்படுத்துவார். நிலம், மனை, வீடு, வாகன சம்பந்தப்பட்ட இனங்களில் அதிகம் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாமல் போகும். 30-ம் தேதி முதல் குடும்பத்தில் குதூகலம் கூடும். பேச்சில் இனிமை தவழும். வசீகரச் சக்தி மேலோங்கும். ஜூலை 10-ம் தேதி முதல் மக்கள் நலனில் கவனம் தேவைப்படும். ஜூன் 16, 18, 22, 23, 25, 27, 29, ஜூலை 3, 4, 5, 6, 7, 16 தேதிகள்

சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத்திசைகள் நலம் தரும். துலா, விருச்சிக, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 4, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய

3-ல் செவ்வாயும் 10-ல் சனியும் உலவுவது அனுகூலமான நிலையாகும். கேதுவின் சஞ்சாரமும் திருப்தியாக இருப்பதால் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எடுத்த காரியத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றி வருவீர்கள். இயந்திரப்பணியாளர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். சட்டம், காவல், இராணுவம், நெருப்புப் போன்ற இனங்களைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். கடுமையாகப் பாடுபட்டு உழைப்பவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாகும். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமான போக்கைக் காணலாம். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாதம் முழுவதுமே சிறப்புடன் காணப்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பொருளும், புகழும் குவியும்.

மாதர்கள், நலம் கூடப் பெறுவார்கள். பொதுநலப்பணியாளர்களது குறிக்கோள் நிறைவேறும். ஜன்ம ராசியில் சூரியன் உலவுவதாலும், குருபலம் குறைந்திருப்பதாலும் ராசிநாதன் விரயம் புகுந்ததாலும் அலைச்சலும் மனக்கிலேசமும் ஏற்படும். உடல்நலனில் அக்கறை செலுத்தவேண்டும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அனுகூலத்தை எதிர்பார்ப்பது அரிதாகும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புடன் காரியமாற்றுவது அவசியம். பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கம் கொண்டதாக அமையும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம். ஜூலை மாத ஆரம்பத்திலிருந்தே மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெற ஆரம்பிக்கும். அறிவாற்றல் பளிச்சிடும். புகழும் அந்தஸ்தும் உயரச் சந்தர்ப்பம் கூடிவரும். ஜூன் 18, 22, 23, 25, 27, 29, ஜூலை 3, 4, 5, 6, 7, 10, 11 தேதிகள் சிறப்பானவை. தெற்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. சிம்ம, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 7, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

வியாழபலம் கூடியிருப்பதால் உங்கள் அபிலாஷைகள் இனிது நிறைவேறும். மனத்தில் உற்சாகம் கூடும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல், வாங்கல் இனங்கள் லாபம் தரும். தெய்வப்பணிகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் கனிந்துவரும். வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார்கள். அலுவலகப் பணியாளர்களுக்கு முன்னேற்றமான பாதை தெரியவரும். மாணவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். மாதர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நோக்கம் ஈடேறப் பெறுவார்கள். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். மக்கள் நலம் மகிழ்ச்சி தரும்.

கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். ஆன்மீகவாதிகள், ஆசிரியர்கள், மேடைப் பேச்சாளர்கள் ஆகியோர் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். 2-ல் செவ்வாயும், 12-ல் சூரியனும் உலவுவதால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் சூழும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். தந்தை நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. நெருப்பு, மின்சாரம், கூரிய ஆயுதங்கள் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போது விழிப்புடன் இருப்பது நல்லது. 4-ல் உள்ள ராகு அலைச்சலை அதிகப்படுத்துவார். மாதப் பின்பகுதியில் செலவுகள் அதிகமாகும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. ஜூன் 15, 16, 22, 23, 25, 27, 29, ஜூலை 3,4,5,6,7, 10, 11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடமேற்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, மேஷ, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 5, 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1- ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் எதிலும் முழுமையான வெற்றிக்கு இடமிராது. அலைச்சலும் உழைப்பும் கூடும். மனத்தில் நிம்மதி குறையும். கோபம் அதிகரிக்கும். ஏமாற்றங்களும் விரயங்களும் எதிர்ப்புக்களும் கூடும். எதிலும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். பதற்றம் அடியோடு கூடாது. பயணத்தின் போதும் இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நலலது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கமாகவே அமையும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களை எண்ணிக் கைப்பொருளை வீணாக்கவேண்டாம்.

வழக்கு, வியாஜ்ஜியங்களிலும், போட்டிப் பந்தயங்களிலும் அனுகூலமான போக்கைக் காண்பது அரிதாகும். ராசிநாதன் லாபஸ்தானத்தில் உலவுவதாலும் ராகு 3-ல் உலவுவதாலும் சங்கடங்களைச் சமாளிக்கிற ஆற்றல் உண்டாகும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள், மருத்துவர்கள், இரசாயனத்துறைகளைச் சேர்ந்தவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை புலப்படும். வியாபாரிகள் லாபம் கூடப் பெறுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழ் கூடும். 30-ம் தேதி முதல் கலைஞர்கள் வெளிச்சம் காண்பார்கள். ஜூன் 15, 16, 18, 22, 23, 25, 27, 29, ஜூலை 3, 4, 5, 6, 7, 10, 11, 16 தேதிகள் அனுகூலமானவை. கீழ்த்திசை நலம் தரும். 1, 4, 5 எண்கள் அதிர்ஷ்டமானவை. துலா, ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

கன்னி: (உத்திரம் 2- ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவாததால் விசேடமான நன்மைகளை இந்த நேரத்தில் எதிர்பார்க்க இயலாமல் போகும். அலைச்சலும் உழைப்பும் கூடும். மனத்தில் நிம்மதி குறையும். எடுத்த காரியங்களை நிறைவேற்ற முடியாமல் தடைகளும் குறுக்கீடுகளும் உண்டாகும். வாழ்க்கைத்துணைநலனில் அக்கறை செலுத்த

வேண்டிவரும். கூட்டாகத் தொழில் செய்பவர்களுக்குப் பங்குதாரர்களால் ஓரிரு பிரச்சினைகள் சூழும். பேச்சிலும் செயலிலும் வேகம் கூடாது. உணவு விஷயத்தில் பக்குவம் தேவை. பயணத்தின்போதும் இயந்திரங்களில் பணி யாற்றும்போதும் பாதுகாப்பு தேவைப்படும். விஷ ஜந்துக்களால் ஆபத்துக்கு இடமுண்டு எச்சரிக்கை.

பொருளாதாரநிலை சாதாரணமாகவே காணப்படும். பொருள் விரயம், இழப்பு ஆகியவை ஏற்படக்கூடுமாதலால் கைப்பொருளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. சூரியன், சுக்கிரன், ஆகியோரது பலம் காரணமாகக் கலைத்துறையினருக்கு மாமூலான வரவேற்பு பாதிக்கப்படாது. அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள், மருத்துவர்கள் ஆகியோர் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். ஜூலை 6-ம் தேதி முதல் ராசிநாதன் புதன் பலம் பெறுவதால் முக்கியமான ஓரிரு காரியங்கள் நிறைவேறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். பிரச்சினைகள் என்பவை குறையும். ஜூன் 15, 16, 18, 25, 27, 29, ஜூலை 3, 4, 5, 6, 7, 10, 11, 16 தேதிகள் சிறப்பானவை. கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : *(சித்திரை 3- ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)*

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் விசேடமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் எண்ணங்கள் இனிது நிறைவேறும். பேச்சிலும் செயலிலும் ஒரு வேகம் தென்படும். தடைகளும் குறுக்கீடுகளும் விலகும். பொரு ளாதார சுபிட்சம் உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபட்டு லாபம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கூடிவரும். திருமணமானவர்கள் மகப்பேறு, அல்லது மக்களால் பாக்கியத்தைப் பெறுவார்கள். தொழி லாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் முன்னேற்றமான பாதை புலப்படும்.

அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு, ஊதியஉயர்வு, இடமாற்றம் ஆகியவற்றைப் பெறுவார்கள். தெய்வப்பணிகள் நிறைவேறும். சாதுக்கள், மகான்கள் ஆகியோரது தரிசனம் கிட்டும். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு வியாஜ்ஜியங்களிலும் வெற்றி காணச் சந்தர்ப்பம் கூடிவரும். கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து, மருத்துவம், இரசாயனம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். மாதர்கள், கலைஞர்கள், சமுதாய நலப்பணியாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். அலைச்சல் அதிகமானாலும் அதற்கான பயனும் கிடைத்துவரும். தொலைதூரத் தொடர்பு ஆக்கம் தரும். ஜூன் 15, 16, 18, 22, 27, 29, ஜூலை 3, 4, 5, 6, 7, 10, 11, 16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, மிதுன, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 5, 6, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : *(விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)*

ராசிநாதன் செவ்வாய் 10-லும், கேது 6-லும் உலவுவதால் உங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பீர்கள். எதிர்ப்புக்களின் கரம் வலுக்குறையும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். பொறியியல்துறை லாபம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். தீய எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாமல் நேரான வழியில் சிந்தனையைச் செலுத்தினால் நலம் கூடப் பெறமுடியும். நல்லவர் அல்லாதவர்களின் தொடர்பு வேண்டாம். மக்கள்நலம் ஒருநாள் போல் மறுநாளிராது. பெற்றோர் நலனிலும் கவனம் செலுத்த வேண்டிவரும். ஜூலை மாத ஆரம்பத்திலிருந்தே கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூட ஆரம்பிக்கும்.

கணவன், மனைவியர் உறவுநிலையும் சீராக இருந்துவரும். ஜூலை 6-ம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். குருவானவர் ஜன்ம ராசியில் உலவுவதாலும், சனி 5-ல் சஞ்சரிப்பதாலும் அலைச்சல், மனக்கிலேசம் ஆகியவை ஏற்படும். தெய்வ வழிபாட்டிலும், தருமப்பணிகளிலும் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் மனஅமைதி காணலாம். பொருளாதாரநிலையில் விழிப்புத் தேவை. குடும்ப நலனில் கவனம் தேவைப்படும். 8-ல் சூரியன் உலவுவதால் உஷ்ணாதிக்கம் கூடும். உடல்நலம் சீராக இராமல் போகும். தகுந்த கவனம் செலுத்தி வருவது நல்லது. ஜூன் 15, 16, 18, 22, 23, 25, ஜூலை 3, 4, 5, 6, 7, 10, 11, 16 தேதிகள் சிறப்பானவை. தென்திசை நலம் தரும். மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)*

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறத் தடைகள் உண்டாகும். உடல் ஆரோக்கியம் சீராக இராது. அலைச்சல் கூடும். எடுத்த காரியங்களை நிறைவேற்ற அரும் பாடுபடவேண்டிவரும். மனத்தில் நிம்மதி குறையும். மாதர்கள், சமுதாய நலப்பணியாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் சிறுசிறு சோதனைகளுக்கு ஆளாவார்கள். கணவன், மனைவியர் உறவுநிலை சீராக இராது. விட்டுக்கொடுத்துப் பழகிவருவது அவசியமாகும். எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடுவது நல்லது. மக்கள் நலனில் அக்கறை தேவைப்படும். மக்களுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ளவும் நேரலாம்.

பெற்றோரால் அதிகம் அனுகூலமிராது. நண்பர்கள், உற்றார்உறவினர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோகபலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் துர்ப்பலன்கள் குறைந்து, ஓரிரு நற்பலன்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும். தசா, புக்தியும் வலுக்குறைந்திருக்குமானால் தெய்வ வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் சங்கடங்களைக் குறைத்துக் கொள்ளவும் மனஅமைதி பெறவும் வாய்ப்புண்டாகும். நூதன முயற்சிகளிலும் சுபகாரியங்களிலும் இந்த நேரத்தில் ஈடுபடவேண்டாம். 11-ல் உள்ள ராகு நூதனமானவர்களது தொடர்பால் அனுகூலத்தை உண்டுபண்ணுவார். ஜூன் 15, 16, 18, 22, 23, 25, 27 ஜூலை 3, 4, 5, 6, 7, 10, 11, 16 ஆகிய தேதிகள் சுமாரானவை. தென்மேற்குத்திசை அனுகூலமானது. துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4-ம் எண் ராசியானது.

மகரம் : *(உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)*

. ராசிநாதன் சனி 3-லும் குரு 11-லும் உலவும் நேரமிது என்பதால் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்ப்புக்கள் விலகும். சமுதாய நலப்பணிகளில் ஆர்வம் கூடும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். பொருள்வரவு அதிகரிக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் உண்டாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காணபார்கள். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறச் சந்தர்ப்பம் கூடி வரும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். திருமணம் ஆனவர்கள் இல்லறத்தில் நல்லறத்தைக் காண்பார்கள். சூரிய பலம் கூடியிருப்பதால் அரசுப்பணிகள் ஆக்கம் தரும். அரசயல்வாதிகள் மதிப்பு உயரப்பெறுவார்கள்.

மனத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். சினமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஜூன் மாதம் 30-ம் தேதி வரையிலும் விசேடமான வளர்ச்சியைக் காண்பார்கள். அதன் பிறகு சிறுசிறு சோதனைகளைச் சந்திக்க வேண்டிவரும். ஜூலை மாதம் 6-ம் தேதி முதல் புத பலம் கூடுவதால் வியாபாரம், கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். 4-ல் கேதுவும், 8-ல் செவ்வாயும் உலவுவதால் அலைச்சலும் உழைப்பும் அதிகமாகும். நிலபுலங்களால் அதிகம் அனுகூலத்தை எதிர்பாக்க இயலாது. வீண் சண்டை சச்சரவுகளில் ஈடுபடவேணடாம். நண்பர்கள், உற்றார், உறவினரிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. ஜூன் 15, 16,18, 22, 23, 25, 27, 29, ஜூலை 4, 5, 6, 7, 10, 11, 16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்கு, தென் கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மீன, ரிஷப துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 4, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் : *(அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)*

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவாததால் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. வீண் விவாதம் வேண்டாம். கூட்டுத் தொழிலில் கவனம் தேவைப்படும். பொருளாதார நிலை சாதாரணமாகவே காணப்படும். குடும்ப நலத் திட்டங்களுக்காக ஓரிரு செலவுகளை மேற் கொள்ளவேண்டிவரும். வாழ்க்கைத்துணை நலனில் கவனம் தேவைப்படும். அலுவலகப் பணியாளர்கள், தொழி லாளர்கள், விவசாயிகள் ஆகியோர் பொறுப்புணர்ந்து

கடமையாற்றுவதன் மூலம் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை சிலருக்கு ஏற்படும். மனத்தில் நிம்மதி குறையும். மக்கள் நலனில் கவனம் செலுத்தவேண்டிவரும். இயந்திரப் பணியாளர்கள், இஞ்சினியர்கள் அகியோர் விழிப்புடன் இருப்பது நல்லது. பயணத்தின் போது பாதுகாப்பு தேவை. உடல் நலனில் கவனம் செலுத்திவருவது அவசியமாகும்.

புத, சுக்கிர, கேது பலம் காரணமாகப் பிரச்சினைகள் ஓரளவு குறையம். மாணவர்கள், வியாபாரிகள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் ஆகியோர் முன்னேறறமான பாதையைக காண்பார்களா. நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நலம் உண்டாகும். நெருங்கிய நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். சினிமா, நாடகம, நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். மாதர்கள் நலம் கூடப் பெறுவார்கள். சமுதாய நலப்பணியாளர்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள். ஜூன் 15, 16, 18, 22, 23, 25, 27, 29, ஜூலை 3, 7, 10, 11, 16 தேதிகள் சிறப்பானவை. வடக்கு , தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் :(பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

ராசிநாதன் குரு பலம் பெற்றிருப்பதாலும், செவ்வாய் 6-ல் உலவுவதாலும் உங்கள் புத்திசாலித்தனம் பிரகாசிக்கும். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். எதிரிகளின் கரம வலுக்குறையும். நல்ல தகவல் வந்துசேரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் குவியும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். தெய்வப்பணிகள் நிறைவேறும். தருமப் பணிகளில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும்.

கணவன், மனைவியர் உறவுநிலை சீராக இருந்துவரும். அலைச்சல் சற்று கூடவே செய்யும். ஜன்ம ராசியில் சனி உலவுவதால் அதிகம் உழைக்கவேண்டிவரும். உடல்நலனில் அக்கறை தேவைப்படும். ராகு-கேதுக்கள் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் சிறுசிறு இடர்ப்பாடுகள் அவ்வப்போது ஏற்படுமென்றாலும் சமாளிப்பீர்கள். பொதுநலப்பணியாளர்களுக்கு வரவேற்பு அதிகமாகும். ஜூலை 6-ம் தேதி முதல் புத பலம் கூடுவதால் கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சோந்தவர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்களா. மாணவர்களது நிலைமையிலும் அபிவிருத்தி தெரியவரும். பொருளாதாரநிலை சீராகவே இருந்துவரும். ஜூன் 15, 16, 18, 22, 23, 25, 27, 29, ஜூலை 3, 4, 5, 10, 11, 16 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, சிம்ம, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

☆☆☆☆☆☆

மனம் விட்டுப் பேசுவோம்

48ஆம் ஆண்டின் முதல் இதழில் 'ஸ்ரீ அன்னை'யின் திருவுருவப் படத்தை வெளியிட்டது சாலப் பொருத்தமாகும். அன்பின் செபா என்ற வாசகரின் கோரிக்கையை ஏற்று ஸ்ரீஅன்னையின் திருவுருவப் படத்தைப் பிரசுரித்தது தங்களின் பண்பைப் காட்டுகின்றது.

— ஜெ. பாலாஜி விஸ்வநாத்,
திண்டுக்கல்.

'கங்காபுரிக் காவலன்' தொடரில் கற்பக விநாயகரை இராசேந்திர சோழன் புனித நீராட வைத்து தொழுதது, 48ஆம் ஆண்டில் 'அமுதசுரபி' காலடி எடுத்து வைத்து தொழுவது போலவும் இருந்தது.

— சிம்மவாகினி, வியாசர் காலனி.

'மே' மாத அமுதசுரபியில் ஆழ்ந்தேன். 'நான்'இல் நிலைத்தேன். விழி நீருகுத்தேன். தமிழகத்துத் தலைநகரில் தொடங்கி அருள் நிறைந்த அடிகளாரில் முடித்து விழிகளைக் குளமாக்கி விட்டீர்கள். அவரை 'வெண்பல் தவத்தவர்' எனக் குறிப்பிட்ட சொற்பிரயோகம் நினைவுத் திரையில் அவரது உருவை இழுத்து வந்து நிறுத்தியது.

— அனு. வெண்ணிலா,
அம்பத்தூர்.

'அலை கடலோரத்து அதிரணை சண்டேசுவரம்' கட்டுரை படித்தேன். மிக அருமை. படித்ததும் நேரில் பார்ப்பது போல் எழுதியிருக்கிறார் டாக்டர் இரா. கலைக்கோவன். அவசியம் சென்று பார்க்க வேண்டிய குகைகளையும் கண்டு களிக்க வேண்டிய இடங்களையும் வெளியிட்டமைக்கு நன்றி.

— டாக்டர் மாசிலாமணி,
பாண்டிச்சேரி.

தேவகி முத்தையா வழங்கும் அபிராமி அந்தாதி விளக்கத் தொடர் மிகவும் நன்றாக உள்ளது. சுலோகங்களாகவே அபிராமி அந்தாதியைப் படித்த பலருக்கு, அதன் விளக்கமும் அறிந்து முழு ஈடுபாட்டுடன் அம்பாளை தியானிக்க இப்பகுதி பெரிதும் உதவுகிறது.

— ஸ்ரீவித்யா காளிதாஸ்,
சிதம்பரம்.

வாங்குவோர்க்கு, கட்டுவோர்க்கு என்று வகை வகையான ஆலோசனைகளைச் சொல்லி, இல்லாதவர்களுக்கு சொந்த வீட்டு ஆசையை ஊட்டி, சொந்த வீட்டுக்காரர்களுக்கு வீட்டுப் பாதுகாப்பு வழிமுறைகளைச் சொல்லி பாடமே நடத்தி விட்டன, 'வீட்டு வசதி சிறப்பிதழ்' பக்கங்கள்.

— அய்யாறு வாசுதேவன்,
மடிப்பாக்கம்.



கடந்த மாத க.காவலனை படித்த என் மன ஆற்றாமையைச் சொல்லால் வடிக்க இயலாது. அதில் சித்தர் பெருமகனாரைக் காட்டுக்கு கொண்டு வந்திருக்கிற விதம் சாட்சாத் ஒரு தெய்வ சங்கல்பமாகவே அமைந்திருக்கிறது. தங்களுக்கு, மனித உணர்ச்சிகளை எழுத்தில் சேர்த்து விடுவது இயல்பாய் அமைந்து விடும்.

க.காவலனில் ஒவ்வொரு வரிகளோடும், சரித்திரத்தின் உயிர்நாடிகளும் காட்சியாய்ப் பின்னப்பட்டிருப்பதில், வீரமாதேவியிலிருந்து இராசேந்திர சோழன் வரை எம்மோடு அகக் காட்சியில் நிலைத்து விடுகிறார்கள்.

கங்கை நீரோடு வரும் காட்சிகள் எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறபோது - சித்தர் வந்தது பற்றி இடையிடையே கூறும்போது வலிமைமிக்க சித்தரின் செயல்பாடுகளையும் அவரின் தெய்விக உணர்வுகளையும் நிஜமாய்க் காட்ட வைக்கும் எழுத்தில் ஏதோ ஓர் அற்புதம் இருக்கிறது.



புதினம் நடைபோடும் விதம் ஏதோ முடிந்து விடுமோ என்ற அச்சத்தையும் எனக்குள் ஏற்படுத்தி விடுகிறது. தொடரும்... என்பதை பார்த்துவிட்டுத்தான் படிக்கப் போகிறேன். முடித்து விடாதீர்கள் சீக்கிரம்! உங்கள் வசீகர எழுத்துக்கும், அடுத்த மாதம் வரை மனதை தவிக்க வைக்கும் க.காவலனுக்கும் கோடி கோடியாய் புகழ் குவிய எப்போதும் பிரார்த்திக்கிறேன்.

குன்றக்குடி பற்றி எழுதியதைப் படித்து நெகிழ்ந்து போனேன், "நான்" பற்றி கூறுகையில் ஒரு ஞானியின் 'ஒளி' மிகுந்த வார்த்தைகள் வெளிப்பட்டன.

தங்களுக்கு ஏற்பட்ட மனக் கலக்கம் எனக்கும் ஏற்பட்டது. ஏனெனில் அமுதசுரபி வினா விடை பகுதியில் என் கேள்விக்கு அளித்த பதிலில் எனக்கு மட்டுமே புரியக்கூடிய ஆழம் இருந்தது. எல்லாருக்கும் அறியக்கூடிய, எளிமை இருந்தது கண்டு அவர் ஞானத்தில் மகிழ்வுற்றேன்.

அப்பெரும் புண்ணியரை, கடைசி தருவாயில் கண்ட உங்களின் பேற்றைக் கண்டு மகிழ்ந்தேன்.

தாமரை செல்வி சுந்தர்,
திருபுவனம்.



புத்தக உலகம்

ஒரே கூரையின் கீழ் எல்லா நூல்களும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற உயர் நோக்கத்தில் நர்மதா பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. டி.எஸ். ராமலிங்கம் 'புக் லாண்ட்' [Book Lands] என்ற நூல் அங்காடியை சென்னை, தி. நகர், வடக்கு உஸ்மான் சாலையில் தொடங்கியுள்ளார்.

இந்த நூல் அங்காடியில் எல்லாப் பதிப்பகங்களின் நூல்களும் மக்களுக்குக் கிடைக்கும்.

புக் லாண்ட்ஸின் திறப்பு விழாவில் தமிழகக் காவல்துறை துணை டி.ஜி.பி. வால்டர் தேவாரம் கலந்து கொண்டு அங்காடியைத் திறந்து வைத்தார். விழாவில் 'சிறுவர் சிறுகதைக் களஞ்சியம்' என்ற நூலை 'கலைமாமணி' விக்கிரமன் வெளியிட முதல் பிரதியை காவல்துறை அதிகாரி திருமதி ஜி. திலகவதி பெற்றுக் கொண்டார்.

பதிப்பகத் துறை அன்பர்களும், எழுத்தாளர்களும், அறிஞர் பெருமக்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


அமரர் தமிழ்வாணன் படத் திறப்பு

'அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை' (பதிவு எண் 530/ 92) சார்பில் பிரபல நாவலாசிரியர், பத்திரிகையாசிரியர் அமரர் தமிழ்வாணன் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா சென்னை, தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலக அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னையின் தலைவர் 'கலைமாமணி' விக்கிரமன் தலைமை தாங்கினார். அமரர் தமிழ்வாணன் திருவுருவப் படத்தை கலைஞன் பதிப்பகம் உரிமையாளர் திரு. ஜி. மாசிலாமணி திறந்து வைத்துப் பேசினார்.

மு. சேரன் எழுதிய 'நோபல் பரிசு பெற்ற இலக்கிய மேதைகள்' என்ற நூலை திரு. மாமூலனும், பி. எல். ராஜேந்திரன் எழுதிய 'பெண்கள் பார்வையில் பெண்கள்' என்ற நூலை திரு. ஏ. வி. ராஜகோபாலனும் அறிமுகப்படுத்திப் பேசினர்.

முன்னதாக வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் நீலவன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சங்கப் பொதுச் செயலாளர் 'கலைமாமணி' ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் சங்க உறுப்பினர்களை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். தமிழ்வாணனின் இளைய மகன் ரவி தமிழ்வாணன், மன்னார்குடி விஸ்வநாதன், தென்னிலை கோவிந்தன், புலியூர் பாலு ஆகியோர் சிறப்புரையாற்றினர். டாக்டர் மூவேந்தர் முத்து நன்றி கூறினார்.





நல்லாசிரியர் திரு. ஈ. வேங்கடேசலு அவர்கள் ஆசிரியராய்த் தமது கல்விப் பணியைத் தொடங்கி, தலைமையாசிரியராகி, பின்பு ஓய்வு பெற்றார். மொத்தம் 39 ஆண்டுகள் கல்விப் பணியாற்றினார். ஓய்வுக்குப் பின்பு கோவையில் எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் கல்வி மருத்துவ நிறுவனங்களில் செயலாளராகத் தொண்டாற்றி வருகிறார். தம் பெற்றோரிடம் கொண்ட பேரன்பாலும், பெருமதிப்பாலும் அவர் தம் பெயரால் பல அறப்பணிகள் செய்து வருகிறார்.

இதுவரை ஏறத்தாழ பதினைந்து லட்சம் ரூபாயைப் பல்வேறு நற்செயல்களுக்கு வழங்கியுள்ளார். அமரர் அழ வள்ளியப்பா பெயரால் சிறுவர் நாவல் போட்டி ஒன்றைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் மூலம் நடத்திப் பரிசளித்து வருகிறார். *தினமணி கதிர்* மூலம் ஆண்டுதோறும் அறிவியல் புனைகதை (SF)ப் போட்டி நடத்திப் பரிசளிக்கிறார். பல்வேறு சமூகப்பணிகள் மூலம் எளியவர்க்கு மருத்துவம் முதலிய துறைகள் மூலம் உதவி செய்து வருகிறார்.

இந்த ஆண்டு அமுதசுரபியுடன் இணைந்து ஒரு குறு நாவல் போட்டி நடத்திப் பரிசளிக்கிறார்.

இலக்கியப் பணிகளில், கம்பராமாயண உரைவகுக்கும் குழுவின் அமைப்பாளராகவும், கோவை திருவள்ளுவர் மன்றத்தின் பொருளாளராகவும் அமைந்து தொண்டாற்றி வருகிறார். கம்பன் உரைக்காக ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.



சென்னை கீழ்ப்பாக்கம் செகரேடரியட் காலனியிலுள்ள ஸ்ரீவரசித்தி விநாயகர் கோயில் கும்பாபிஷேகத்தை, பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளும், ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகளும் நடத்தி வைத்தார்கள். பட்டுக்குடையை தாங்கி நிற்பவர் மாண்புமிகு நீதிபதி திரு. பிரதாப் சிங் அவர்கள். இந்த விழாவுக்கு ஸ்ரீசக்தி விநாயகர் பக்த ஜன சபை ஏற்பாடு செய்திருந்தது.

நவீன செராமிக் டைல்ஸ்

முருகப்பா நிறுவனத்தாரின் பாரி கம்பெனி 200 ஆண்டுகளுக்கும் மேலாக எல்லோராலும் அறியப்பட்ட புகழ்பெற்ற தொழிலகம் ஆகும்.

பாரியின் பல பொருள்களான உரங்கள், சர்க்கரை, சாக்லேட்டுகள் மற்றும் செராமிக் சானிடரிவேர் போன்றவை இன்றும் இந்தியராலும், வெளிநாட்டவராலும் போற்றப்படுகின்றன.

இந்நிறுவனம் காரைக்காலில் "பாரி டைல்ஸ்" தயாரிக்க அருகிலுள்ள தென்னங்குடி கிராமத்தில் ஒரு தொழிற்சாலையைக் கட்டிக்கொண்டு வருகிறது. உலக தரத்தில் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் விற்க மேலைநாட்டினருடன் இணைந்து ஆரம்பிக்க இருக்கும் இத்தொழிற்சாலை காரைக்கால் பகுதிக்கே பெருமை சேர்க்கும் என்பது திண்ணம்.

செராமிக் டைல்ஸ் நவீன தொழில் நுட்பத்திலும் தொழிலிலும் உலகத்தில் முன்னோடியாக இருக்கும் இத்தாலி நாட்டிலுள்ள SACMI கம்பெனியின் தொழில்நுட்ப உடன்படிக்கையாகும். அவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பில் உருவாக இருக்கும் இந்த "பாரி டைல்ஸ்" வரும் செப்டம்பர் மாதம், முதல் Glamour rooms என பாரி கம்பெனியால் அழைக்கப்படும் குளியல் அறைகளை மெருகூட்ட வருகிறது.

காரைக்கால் அருகே இருக்கும் கனிம வளத்தை உபயோகித்தும், பாண்டிச்சேரி அரசின் தொழில் ஊக்க உதவியோடும் வரும் இந்த தொழிற்சாலை பாரி நிறுவனத்தாரின் மற்ற தொழிற்சாலைகளைப் போல் முன் மாதிரியாகவும் இந்த காரைக்கால் பகுதியின் பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், வாழ்க்கை முன்னேற்றங்களும், வேலைவாய்ப்புகளும் பெருக உதவியாக இருக்கும் என்பதில் எந்த ஓர் ஐயமும் இல்லை.

இக் கம்பெனி தரவுள்ள பாரி டைல்ஸ் பல செராமிக் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி கலக்குதல், அரைத்தல், தூவி உலர்த்துதல், அழுத்தப்படுதல், பளபளப்பு செய்தல் மற்றும் வெப்ப திடப்படுத்தல் முறையில் பல வண்ண வடிவ அளவுகளில் மிக உயர்ந்த தரத்தில் வரவுள்ளது. இதனால் காரைக்காலின் பெருமை கூடும்.

விக்கிரமன்

கங்காபுரிக் காவலன்

24. என்ன பெயர் இடுவது?

பெரிய கோயில் விமானம் கம்பீரமாக உயர்ந்து நின்றது. வானை எட்டுமளவிற்கு அது வளர்ந்திருந்தது. கோயிலைச் சுற்றி மதிள் அமைய வேண்டும். சக்கரவர்த்தி வந்த பிறகு, கோயில் விமானக் கலசத்திற்குக் குடமுழுக்கு நடைபெற்ற பிறகு அவற்றை எல்லாம் முடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள் வீரமாதேவி.

குடமுழுக்குக்கு முன்பு பூர்த்தியடைந்த திருப்பணிகளின் முழு வடிவத்தை மீண்டும் ஒருமுறை பார்த்து, நிறைகுறைகளைக் கண்டறிய சிற்பி மாணிக்க சேகரனும், மற்ற சிற்பிகளும் கோயிலை ஒரு முறை சுற்றி வந்தனர். அவர்களுக்கே தங்கள் பணியின் சிறப்பு அப்போதுதான் புலப்பட்டது. தலைமைச் சிற்பி ஒவ்வொரு சிற்பியையும் அழைத்துப் பாராட்டினார். வீரமாதேவியும் அருகே இருந்தாள்.

தலைமைச் சிற்பி பாராட்டும்போது, சிற்பிகள் பெருமை தாங்காது நெளிந்தனர். சிலர் வெட்கத்தால் பெண்கள் போல் தலை குனிந்தனர். சிலர் அடக்கமாகப் பாராட்டு தலை ஏற்றனர். சிலர் பாராட்டுதலுக்கு நன்றி சொல்லத் தெரியாமல், விழிகளை நகர்த்தக்கூட முடியாமல் மாணிக்க சேகரனைப் பார்த்தவாறு திகைத்து நின்றனர்.

“தலைவர் சொற்படி செய்தோம். நமக்கு என்ன பாராட்டு? செய்ததற்குக் கூலி பெற்றுக் கொண்டோம்” என்று மெல்லப் பேசிக் கொண்டனர் சிலர்.

வீரமாதேவியைச் சுட்டிக் காட்டி, “இளவரசியார் நம்முடனேயே இருந்து, நமக்கு உற்சாகமூட்டியிராவிடில் கோயில் திருப்பணி முடிந்திருப்பதேது!” என்று வீரமாதேவியைப் புகழ்ந்தனர் சிலர்.

தஞ்சைப் பெரிய கோயில் திருப்பணியில் ஈடுபட்ட சில முதிய சிற்பிகள் வீரமாதேவியின் அருகே சென்று வணக்கம் தெரிவித்தனர்.

கைகட்டி மிக மரியாதையுடன் நின்ற பெரியவர்களை நோக்கி, அவர்களை அமருமாறு சொல்லி அவர்களுடைய பணியைப் புகழ்ந்தாள் வீரமாதேவி.


“உங்கள் கருத்துகளை நீங்கள் இப்போது சொல்லலாம். சக்கரவர்த்திகள் வந்தவுடன் உங்கள் பணியை மிகவும் பாராட்டுவார். அவருடைய கனவை நிறைவேற்றியவர்கள் நீங்கள். இந்தக் கோயிலைப் பற்றிய உங்கள் கருத்துகளை, குறை நிறைகளை நீங்கள் ஒளிவு மறைவின்றிக் கூறலாம்” என்று வீரமாதேவி, முதிய சிற்பிகளைப் பார்த்துப் பேசுவதுபோல், அனைவரிடமும் கேட்டாள்.

மாணிக்க சேகரனை நோக்கி ஒருமுறை விழிமூலம் அனுமதி கேட்ட முதிய சிற்பி ஒருவர், “எங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியைச் சொல்லமுடியாது. என்னைப் போன்று இங்குள்ள சிற்பிகளுக்கும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. தங்களுடைய சலியாத உழைப்பை நாங்கள் பாராட்டுகிறோம். அமரராகிவிட்ட பேரரசர் இராசராசருக்குப் பெரும் பெருமையை, அவர் புதல்வர் இராசேந்திர சோழ சக்கரவர்த்திகள் ஏற்படுத்தி விட்டார். இராசராசேச்சுரம் பெருவுடையார் கோயிலைவிட அளவில் குறைவுதான் இந்தப் பெருவுடையார் கோயில் என்றாலும் தஞ்சைக் கோயிலுக்கு இணையாக இந்தக் கோயில் அமைவதற்கு முக்கிய காரணம் சக்கரவர்த்திகள் மட்டுமல்லர். முகத்தெதிரே பாராட்டுகிறேன் என்று எண்ணி விடக் கூடாது, இந்த இளவயதில் தங்க

ளுக்கு எவ்வளவு ஆர்வம், சலியாத உழைப்பு. காடாயிருந்த இந்த இடத்தைக் கந்தர்வ பூமியாக்கினீர்கள். நீங்கள் நீடூழி வாழ வேண்டும். அறிவில் ஆற்றலில் குறைந்தவர்கள் என்றாலும் வயது காரண மாக எங்கள் வாழ்த்தை ஏற்றுக் கொள் ளுங்கள்" என்றார். அவர் கூறும்போது கண்களில் நீர் மல்கியது.

மற்றொரு முதியவர் கூறினார் : "தஞ்சை யில் பெரிய கோயில் கட்டி, குடமுழுக்கு நடைபெற்ற அன்றைய நாள் நிகழ்ச்சியை என்னால் இன்றளவும் மறக்க முடிய வில்லை. அங்கு நடந்த அந்த வைபவம் - அப்பப்பா - அரச குடும்பத்தினர் அத்தனை பேரும் வந்திருந்தனர். குறிப்பாக சக்கரவர்த்திகளுக்குத் தம் அக்கையாரிடம் அளவு கடந்த அன்பு, மதிப்பு, மரியாதை. இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியார் வந்திருந்தார். அவரது கணவர் வல்ல வரையர் வந்தியத் தேவன் வயது முதிர்ந்த நிலையிலும் அங்கே கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.

இன்று இந்தக் கோலாகலமான விழா வைக் காண அவர்கள் இல்லை. இன்றும் அரச குடும்பத்தில் முக்கியமானவர்கள்




இல்லை. சக்கரவர்த்திகளுடைய ஆற்றலும், வீரமும் போர்க்களங்களில் பிரதிபலித்தாலும் இந்தக் கோயில்தான் அவருக்கு அழியாப் புகழை நிலைநாட்டப் போகிறது. தஞ்சை புரியிலுள்ள பெருவுடையார் கோயிலுக்குச் சக்கரவர்த்தி இராசராசர் பெயர் சூட்டப்பட்டது போல, இந்தக் கோயிலுக்கும், சக்கரவர்த்தி இராசேந்திரர் பெயர் சூட்டப்பட வேண்டும் என்பது என் கோரிக்கை".

அங்கே ஒருகணம் அமைதி நிலவியது. இராசேந்திர சோழரின் இளைய திருக்குமரன் அங்கு வந்து, அவர்கள் உரையாடலில் கலந்து கொண்டார்.

அதுவரை பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று பேச்சை நிறுத்தி மௌனமானதைக் கண்ட இளவரசர், "ஏன் திடீரெனப் பேச்சை நிறுத்தி விட்டீர்கள்? நானும் அதில் கலந்து கொள்ளலாம் அல்லவா? ரகசியம் என்றால் நான் இங்கிருந்து சென்று விடுகிறேன். பிறகு வருகிறேன். சக்கரவர்த்தியிடமிருந்து முக்கியமான செய்தி வந்திருக்கிறது. அதைத் தெரிவிக்க வந்தேன். பிறகு வருகிறேன்" என்று கூறி அங்கிருந்து புறப்பட எத்தனித்தார்.

வீரமாதேவி உட்பட அனைவரும் பரபரப்புடன் எழுந்து நின்று, "வாருங்கள் வாருங்கள். இங்கே உட்காருங்கள். அந்தரங்கமோ, ரகசியமோ ஏதுமில்லை. உங்களுக்குத் தெரியாதவற்றை நாங்கள் என்ன பேசி முடிவெடுக்கப் போகிறோம்?" என்று



கூறி, "ஏதோ முக்கியமான செய்தி சக்கர வர்த்திகளிடமிருந்து வந்திருப்பதாகச் சொன்னீர்களே, அதைச் சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்டாள் வீரமாதேவி.

"கோதாவரிக் கரையிலிருந்து கங்கை நீர்க் குடத்துடன் சக்கரவர்த்திகள் புறப் பட்டு விட்டார்கள். பரிவாரங்களுடன் அர சர் வந்து கொண்டிருக்கிறார். குடமுழுக் குக்கு ஏற்பாடுகளை விரைந்து செய்யுமாறு உத்தரவு வந்துள்ளது. சித்தரை உடனே சந் திக்க வேண்டும்; விரைவாகப் பணியாற்ற வேண்டும். குறுநில மன்னர்களுக்கும், அரச குடும்பத்தவர்களுக்கும், தாயாதிகளுக்கும், உறவின் முறையோர்களுக்கும், புலவர் களுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் குடமுழுக்கு விழாச் செய்தியை அறிவிக்க வேண்டும். சக்கரவர்த்திகள் வரும்போது நகர எல்லையில் கோலாகலமாக வர வேற்க வேண்டும். பழையாறைக்கு வந்து, பிறகு இங்கே வரப்போகிறார்களா அல் லது, கொள்ளிடம் தாண்டி இங்கே நேரே வரப்போகிறாரா, தெரியவில்லை" என் றார்.

சக்கரவர்த்தி, கங்கை நீருடன் வரும் செய்தி கிடைத்துவிட்டது. செய்தியைக் காவலர்கள் இங்கு கொண்டுவராமல், பழையாறைக்கு ஏன் கொண்டு சென்றனர் என்று வீரமாதேவி எண்ணினாள். அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்றும் சிந்தித்தாள்.

இளவரசர் கேட்ட கேள்விக்கு உடனே மறுமொழி கூற வேண்டும். ஏதோ ரகசியம் பேசுவதாகவும் அவர் வந்தவுடன் நிறுத்தி விட்டதாகவும் நினைத்துள்ள இளவரசரின் சந்தேகத்தைப் போக்க வேண்டும் என்று வீரமாதேவி முடிவு செய்தாள். மற்ற வர்கள், இளவரசருடன் நேரே பேச சற்று அச்சங் கொண்டவர்கள்.

வீரமாதேவி சொன்னாள்: "குடமுழுக் குக்கு நாள் குறிப்பிட்டாகி விட்டது. கங் கைப் புனித நீருடன் அரசர் எப்போது வரு வார் என்ற கவலை எனக்கிருந்தது. அந்த ஐயமும் தீர்ந்துவிட்டது. பழையாறைக்குச் சென்று வருவதுதான் முறை. இங்கே உள்ளவர்கள் எல்லாரும், கோயிலுக்கு என்ன பெயர் சூட்டுவது என்பதைப் பற்றித் தங்கள் கருத்தை விவரித்தார்கள். அந்த வேளையில்தான் நீங்கள் வந்தீர்கள்" என்றாள்.

இளவரசர் அங்குள்ளவர்களை ஒரு முறை பார்த்தார்.

"பெயரிடும் பிரச்னை இங்கும் தலை தூக்கிவிட்டதா? கோயிலுக்கும், கோயி லுள்ள நகரத்திற்கும், நகரத்திற்கு அருகி லுள்ள ஏரிக்கும் என்ன பெயரிடுவது என் பதை அமைச்சர்கள் விவாதித்து வருகின் றனர். அரச சோதிடரும் அதுபற்றிச் சிந் தித்து வருகிறார். 'பஞ்சவன்மாதேவீச் சுரம்' என்று பெயரிட வேண்டுமென்று சிலர் கருத்துத் தெரிவிக்கிறார்கள். லோகமாதீச் சுரம், செம்பியான்மாதேவீச்சுரம் என்றெல் லாம் பெயரிடப்பட்ட திருக்கோயில்கள் இருப்பன போன்று சோழ அரசியார் பெய ரால் கோயில் அமைய வேண்டும் என்று அரசியார் விரும்புவதாகச் செய்தி ஒன்று கிடைத்தது. சக்கரவர்த்திகளும் அதை ஆமோதிக்கிறார் என்றும் கேள்வி. ஆனால், சற்று உடல் நிலையில் முன் னேற்றம் கண்ட பழையாறையிலுள்ள அரிந் தவன் மாதேவி தன் பெயர்தான் பெரிய கோயிலுக்கிடப்பட வேண்டும் என்று வற் புறுத்துகிறாள். என்ன செய்வதெனத் தெரியவில்லை. கல்தச்சர்களைக் கொண்டு கல்வெட்டுகளில் பெயர் பொறிக் கப்பட வேண்டும்..." என்று இளவரசர் கவ லைப்பட்டவர் போல் பேசினார்.

முதிய சிற்பி கூறினார்: "நான் என் கருத்தைச் சொல்வதில் பிழை இருந்தால் பொறுத்தருளுங்கள். நான் சொல்வது நியாயம் என்பதும் தங்களுக்குத் தெரியும். சோழர் குலத்தின் பிதாமகர் விஜயாலய சோழ தேவர், முதன்முதல் சிவபெரு மானுக்குக் கற்கோயில் எழுப்பினார். விஜயாலய சோழீச்சுரம் என்று அதற்குப் பெயர் சூட்டினார்கள். ஆதித்த சோழீச் சுரம் - இன்னும் பல உதாரணங்கள் கூற முடியும். தஞ்சாவூரில் மாமன்னர் இராச ராச சோழ தேவர் எழுப்பிய கோயிலுக்கு இராச ராசேச்சுரம் என்றே பெயர் சூட்டி னார்கள். அதுபோல இந்தப் பெரிய கோயி லுக்கும் இராசேந்திர சோழீச்சுரம் என்று பெயர் சூட்ட வேண்டும். அதுதான் முறை.

என் சொல்லில் தவறிருந்தால் முதலி லேயே நான் வேண்டியது போல் பொறுத் தருளவேண்டும்".

முதிய சிற்பி கூறியதை மறுப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் மாணிக்கசேகரன் மட்டும் எழுந்து, "இந்தக் கோயில் உருவாவதில் எனக்கு முக்கியப் பங்குண்டு என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்" என்று கூறத் தொடங்கிய வுடன், இளவரசர் குறுக்கிட்டு, "மாணிக்க சேகரீச்சுரம் என்று பெயரிட வேண்டும் என்று விருப்பப்படுகிறீர்களா?" என்றான்.

அங்கே இருந்தவர்களிடையே அமுக்க மான சிரிப்பு எழுந்து அடங்கிற்று. மாணிக்க சேகரன் முகம் சிவந்தது; நாணத்தால் அன்று; சினத்தால்.

"அந்த அளவுக்கு அறிவிலி என்றோ பேராசைக்காரன் என்றோ என்னை எண்ணி விட்டாரா, சக்கரவர்த்திகளின் இளைய மகன்? எனக்கு அப்படிப்பட்ட ஆசையிருந்திருந்தால் இந்தக் கோயிலின் முக்கிய இடத்தில் இந்தக் கோயிலைக் கட்டுவித்தவர் மாணிக்கசேகரக் கல் தச்சர் என்று செதுக்கியிருப்பேன். உங்களுக்குத் தெரிந்திருக்குமோ – தெரியாதிருக்குமோ என்றாலும் நான் சொல்லத்தான் போகி றேன். ஒரு காலத்தில் – ஏன் நான் அறிந்து இந்த இடம் பெரிய காடாக இருந்தது. இந்த இடத்தில் ஒரு கோயில் எழுப்ப விரும்பி னார் சக்கரவர்த்திகள். அப்போது அவர் சக்கரவர்த்தி பீடத்தில் அமரவில்லை. அவர் பிறவியிலேயே கலைஞர். அவர் உள்ளத்தில் கலை ஆர்வத்தை மேலும் வளர்க்க ஒருவர் தேவைப்பட்டார். எப் போதும் 'போர் போர்' என்று சோழ நாட்டின் பெருமையை யுத்த பூமியில் நிலை நாட்டிய இளவரசரின் கலைத் தாகத்தை ஒருவர் வளர்த்தார்; உருவம் கொடுத்தார். சிற்ப செளந்தர்யங்கள் நிறைந்த கலைக் கோயில் உருவாக ஊக்கமளித்தார். பல எதிர்ப்புகள் ஏற்பட்டன. காட்டை அழித்துச் சமமாக்கி, இங்கே கோயில் கட்டும் பணி யைத் தாமே மேற்கொண்டார். கோயிலைச் சுற்றி நகரம் ஏற்பட வேண்டிய கட்டாயம் எழுந்தது. ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும்; தஞ்சை மாநகரம், சோழ நாட்

டின் தலைநகராக அமைந்த பிறகே அங்கே பெரிய கோயிலை எழுப்பினார், இராச கேசரி இராசராச சோழ தேவர். ஆனால் இங்கோ கடுமையான கானகம். காடு திருத்திக் கோயில் கட்ட வழி வகுத்தார். சிற்பியைத் தேடி அழைத்து வருவதில் பெரும் பாடுபட்டார். நகரத்தின் அருகே ஒரு பெரிய ஏரியும் அமைந்தது.

இதற்கெல்லாம் காரணம் யார்? யார் தெரியுமா?" என்று கூறிச் சற்று பேச்சை நிறுத்தினார். அனைவரும் யார் என ஆவ லுடன் நோக்கினர். "அவர்தான் இதோ இங்கே அடக்கமாக நிற்கும் இளவரசி வீரமாதேவி. இவர் பெயரைக் கோயி லுக்குச் சூட்ட வேண்டும். இந்த நகரத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட வேண்டும். ஏரிக்கு எந்தப் பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்".

மாணிக்க சேகரன் பேச்சைக் கேட்டு அங்கிருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். தலைமைச் சிற்பி என்ன சொல்கிறார்? தெரிந்துதான் சொல்கிறாரா? நிலைமை யைப் புரிந்துதான் சொல்கிறாரா?

வீரமாதேவியின் பெயரால் கோயிலா? இது என்ன நியாயம்? ஊர் உலகம் சம்மதிக்குமா? அரசி பஞ்சவன்மாதேவி அறிந்தால் என்ன ஆவது?

சிற்பிக்கு என்ன நேர்ந்து விட்டது? வீரமாதேவியின் மீது முன்பே பொறாமை கொண்ட அரசியார், சிற்பியின் எண் ணத்தை அறிந்தால் யார்மீது சீற்றம் கொள் வாள்?

இளவரசருக்கே வியப்பாக இருந்தது. கோயில் - நகரம் இவற்றிற்குப் பெயர் சூட்டு வதைப் பற்றிய கருத்தைக் கூற சிற்பிக்கு என்ன உரிமை? ஒருவேளை வீரமாதேவி யிடம் நற்பெயரைப் பெற இப்படிப் புகழ் வார்த்தை கூறுகிறாரா?

பழையாறையில் கடும் நோயிலிருந்து பிழைத்து எழுந்துள்ள அரிந்தவன்மாதேவி, தம் பெயரைக் கோயிலுக்குச் சூட்ட விரும்புவது நியாயமானது.

அரசியார் பஞ்சவன்மாதேவி தன் பெயரில் கோயில் அமைவதை விரும்புவது - உரிமையின் அடிப்படையில் எனலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, முதிய சிற்பி விரும்பியதுதான் நாடே ஒப்புக் கொள்ளக் கூடியது. அப்படியெல்லாம் இருக்க, மாணிக்க சேகரன் வீரமாதேவியின் பெய ரைச் சூட்ட விரும்புவதில் ஏதோ பின்னணி இருக்க வேண்டும்.

இளவரசர் ஏதும் பேசவில்லை. மௌன மாயிருந்தார்.

வீரமாதேவி தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள். அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று அனைவரும் எதிர் பார்த்தனர்.

"மாணிக்க சேகரரே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள்? என்னுடைய விருப்பத்தைக் கேட்டல்லவா நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்?" என்று கடினமான குரலில் கேட்டாள் வீரமாதேவி.

"தேவி! என்னைப் பொறுத்தருளுங்கள். தங்களைக் கேட்டுச் சொல்வதாக தங்கள் தூண்டுதலில் சொல்வதாக, எல்லாரும் நினைப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், சக்கரவர்த்திகளின் உள்ளத்தை சரிவர நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அவரிடம் நான் சொன்னால் என்னைப் பாராட்டுவார். மேலும், தேவி! முன்பு ஒரு முறை நீங்கள் ஒரு சபதம் செய்திருக் கிறீர்கள் என்பது அரச குடும்பத்தவருக் குத் தெரியும். அரிந்தவன் மாதேவி அறி வார்கள். அரசி பஞ்சவன் மாதேவியார் அறிவார்கள்.

'என் பெயர் என்றென்றும் சந்திர சூரியர் உள்ளவரையும் நின்று நிலவுமாறு நான் செய்கிறேன்' என்று அவர்கள் எதிரே சூளுரைத்தீர்கள். உங்கள் பெயர் நிலைக்க அழியாத சின்னம் கோயிலே.

"நீங்கள் கோயில் கட்டும்போது அனை வரும் அப்படித்தான் நினைத்தார்கள். காட்டை அழித்துக் கோயில் கட்டத் தொடங்கியபோதே உங்கள் சபதம் உறுதி யாகிவிட்டது. கோயில் கட்டுவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட தடை முயற்சி களை மறந்துவிட்டீர்களா? சக்கரவர்த்திகள் உங்களிடம் கோயில் கட்டும் பெரும் பொறுப்பை ஒப்படைத்ததிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? யார் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும், சக்கர

வர்த்திகள் இங்கே வந்தவுடன் என் கருத்தை அழுத்தமாகச் சொல்லப் போகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான்.

அங்கே ஒருவித அமைதி நிலவியது. ஒவ்வொருவராக அங்கிருந்து புறப்பட்டனர்.

வீரமாதேவி உரத்த குரலில் சொன்னாள்: "கோயிலுக்குப் பெயர் சூட்டுவதில் கடும் விவாதத்தில் இறங்கி நேரத்தைக் கழிப்பதைவிட பொறுப்பைச் சித்தரிடம் விட்டு விடுவோம். அவர் என்ன சொல்கிறாரோ அதை ஏற்போம்".

இளவரசர், மாணிக்க சேகரன், சிற்பிகள் எல்லாரும் அங்கிருந்து சென்று விட்ட பிறகு வீரமாதேவி சோர்வுடனும், பெரும் கவலையுடனும் நின்று கொண்டிருந்தாள்.

'கோயிலுக்கு என் பெயரைச் சூட்டுவதா? என்ன நியாயம்?' மாணிக்க சேகரனுக்கு இப்படி ஓர் எண்ணம் எப்படி ஏற்பட்டது?" என்று அவள் குழம்பினாள்.

"சித்தர் பிரானே! நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று கைகூப்பிப் பிரார்த்தித்தாள். அங்கே சித்தர் இல்லை. சித்தரைச் சந்திக்க வேண்டும் என்று வீரமாதேவி அப்போது மிகவும் விரும்பினாள்.

தொலைவில் தெரிந்த கோயில் விமானத்தை ஒருமுறை பார்த்தாள். வேயப்பட்ட ஓலைகள் மறைக்க நின்ற விமானத்தின் கம்பீரத்தை ஒருமுறை நோக்கினாள்.

"வீரமாதேவி! என்ன பார்க்கிறாய்? தட்சிண மேருவின் கம்பீரத்தையா? உன் இலட்சியம் பூர்த்தியடைந்ததையா?" என்று கேட்டவாறு சித்தர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

"ஆகா; தெய்வத்தின் கருணை என்பது இதுதான். உள்ளத் தூய்மையுடன் ஒன்றை நினைத்தால் நிச்சயம் நடக்கும் என்பதற்கு இந்தச் சம்பவமே சாட்சி" வீரமாதேவி நினைத்தாள்.

"சித்தர்பிரானே! நீங்கள்தான் எனக்கேற்பட்டிருக்கும் இக்கட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும்" என்று குரல் தழுதழுக்கக் கூறியவாறு, அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள்.

சித்தர் சிரித்தவாறு, "என்ன தொல்லை ஏற்பட்டு விட்டது? நீதான் எல்லாவற்றிலும் வென்று விட்டாய். கோயிலைக் கட்டி விட்டாய்; நகரத்தை ஏற்படுத்தி விட்டாய்; ஏரியில் கங்கை நீரைச் சேர்க்கப் போகிறாய். விமானத்தையும் பெருவுடையாரையும் புனித நீரால் முழுக்காட்ட கங்கையின் புனித நீர் வந்து கொண்டிருக்கிறது.

"இந்தப் பெரிய கோயிலின் பெருவுடையார் அதிர்ஷ்டம் நிறைந்தவர். தஞ்சைப் பெருவுடையாருக்கு இல்லாத புகழ், பெருமை இந்தப் பெருவுடையாருக்கு ஏற்படப் போகிறது. வீரமாதேவி நகரத்தின் வீரமாதீச்சுரத்தில் வீற்றிருக்கும் பெருவுடையாருக்கும் கங்கைப் புனித நீரால் திருமுழுக்கு ஏற்படப் போகிறது. பெருவுடையார் அதிர்ஷ்டசாலி" என்று கூறி வீரமாதேவியை உற்று நோக்கினார்.

"சித்தர் பெருமானே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள்! நீங்கள் எடுத்த முடிவான முடிவா? நீங்கள் அப்படி முடிவு செய்யலாமா? என் பெயரால் கோயிலோ, நகரமோ ஏற்படக் கூடாது. இது சத்தியம்" என்றாள்.

சித்தர் மீண்டும் சிரித்தார். (தொடரும்)

54. டி.டி.கே. சாலை, சென்னை-600 018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட் – 600 001 சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா.
ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன், நிர்வாக அலுவலகம் : 145, லிங்கச் செட்டி தெரு, த.பெ. எண். 5043, சென்னை – 600 001. தொலைபேசி : 5228545 - 510535